திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

6 - APR 1965
...DRAS



ஸ்ரீ சௌந்திரராஜப்பெருமாள், நாகப்பட்டினம்.

மாலை 7] குரோதி பங்குனி—ஏப்ரல் 1965 [மணி 7

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு.

ஸ்ரீ மகாவிஷ்ணு ஸ்ரீதேவி பூதேவியுடன், ஸ்ரீ கூடலழகர்கோயில், மதுரை.

பொருள் அடக்கம்

1. திருவாசகத்தின் இலக்கியத் திறன்
2. காசி விசுவநாதர்
3. சிவஞான சித்தியார்
4. எல்லாக் குற்றமும் தீர்ந்த செய்யுள்
5. பஞ்சாக்கரத் திருப்பதிகம்
6. திருப்புகழ் அமிழ்தம்
7. திருச்சந்த விருத்தம்
8. திருவாய்மொழி
9. மதுராந்தகம் கல்வெட்டுக்கள்—1.
10. திருக்கச்சூர்க் கல்வெட்டுக்கள்
11. ஸ்ரீவைஷ்ணவ குருபரம்பரை
12. திருஞான சம்பந்தர் பிள்ளைத் தமிழ்

ஆண்டுச் சந்தா ரூ. 10/- **தனி இதழ் விலை ரூ. ஒன்று**

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் **"திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34"** என்னும் முகவரிக்கு ரூபா **பத்து** அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார **அறநிலைய உதவி ஆணையாளர்களின்** அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

ஓர் ஆண்டின் நடுவில் எந்தமாதத்திற் சேர்ந்தாலும், அடுத்த ஆண்டில் அந்த மாதம் வரையில், 12 இதழ்கள் அனுப்பப்பெறும்.

ஓர் ஆண்டிற்குக் குறைந்த சந்தாத் தொகை ஏற்கப் பெறுவதில்லை.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல் இதழ்கள் தவறாமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.

திருக்கோயில்
திங்கள் வெளியீடு

மாலை 7] குரோதி பங்குனி—ஏப்ரல் 1965 [மணி

திருவாசகத்தின் இலக்கியத் திறன்

முன்னுரை :

திருவாசகம் மிகச் சிறந்த ஒரு **பக்தி நூல்** என்பதனையே பலரும் அறிவர். ஆனால் அது மிகச் சிறந்த, சுவை நிறைந்த, இணையற்ற ஓர் அரும்பெறல் **இலக்கிய நூல்** கூட ஆகும் என்பதனைப் பலர் அறிந்து பாராட்டுவதில்லை. எனவே, திருவாசகத்தின் இலக்கியத் திறன்பற்றி ஈண்டு நாம் ஒரு சிறிது ஆராய்தல், நலம் பயக்கும்.

திருவாசகத்தின் இலக்கியத் திறன் பற்றி ஆராய்வதற்கு முன்னர், இலக்கியம் என்பது பற்றியும் பொதுவாக ஓரளவேனும் அறிந்துகொள்ள வேண்டுவது, நமக்கு இயைபுடையதும் இன்றியமையாததும் ஆகும்.

இலக்கிய மாட்சி :

சிறந்ததொரு நல்ல இலக்கியமானது, தான் கூறும் பொருளாலும், அதனைக் கூறும் முறையாலும், எல்லோருடைய உள்ளத்தையும் கொள்ளை கொள்ள வல்லதாக இருக்கும். இலக்கியம் என்பது, தன்னை இயற்றிய ஆசிரியனின் வாழ்க்கையனுபவங்களிலிருந்து, அரும்பி மலர்ந்து கனிந்தெழும் இயல்பினதாய், அவன் தன் வாழ்க்கையிற் கண்டறிந்த உண்மைகளையும், தனது வாழ்க்கை எவ்வாறு அமைதல் வேண்டும் என அவன் விரும்பிய வகைகளையும், அது குறித்து முயன்று உழைத்த அவன்றன் செயற்றிறங்களையும், அவனது வாழ்க்கையின் வெற்றி தோல்விகள் - இன்ப துன்பங்கள் - கவலை மகிழ்ச்சிகள் - போன்ற பலவகை உணர்ச்சித் திறங்களையும் எல்லாம், பளிங்கென விளங்கக் காட்டி, அவ்வாற்றால் ஏனைய மக்களின் வாழ்க்கை நலத்திற்கு வழி வகுக்க வல்லதாக மாட்சிமையுற்று **வயங்கும்.**

கவிஞன் தன் உள்ளத்துணர்ச்சிகளை வெளியிட வேண்டும் எனக் கொள்ளும் துடிதுடிப்பு, மக்களிடத்தும் அவர்தம் செயல்களின் மாட்டும் கவிஞனுக்குள்ள ஈடுபாடு, உலகியல் வாழ்வின் உண்மைத் தன்மையிலும் — கற்பனையுலகக் காட்சியிலும் கவிஞனுக்குள்ள பேரார்வம், அழகும் இன்பமும் அமையக் கருத்துக்களை வெளியிடக் கிளர்ந்தெழும் கலையியல் வேட்கை, என்னும் இவற்றின் அடிப்படையும் நிலைக்களமுமாகவே, சிறந்த இலக்கியங்கள் முகிழ்க்கின்றன.

இலக்கியப் பண்பு :

இங்ஙனம் தோன்றும் சிறந்த பெரிய இலக்கியங்களின் பொருட் கூறுகள், தனி மனிதனின் அகப்புற வாழ்க்கையின் பிழிவான அனுபவங்களையோ, வாழ்க்கையில் மக்கள் எல்லோருக்கும் உரியன வாய்ப் பொதுமையானவையாய் விளங்கும் பிறப்பு இறப்பு நல்வினை தீவினை இன்பம் துன்பம் இம்மை மறுமை இறையருள் ஊழியல் என்பன போலும் செய்திகளையோ, இயற்கைப் புறவுலகத்துக்கும் மாந்தர்களுக்கும் உள்ள பல்வகைத் தொடர்புகளையோ, குறித்தனவாக இருக்கும்.

அன்றியும், செம்புற்றீயல் போலத் தோன்றி, ஒரு பகல் வாழ்க்கையவாய் ஒளியற்று உலவி, விரைவில் அழிந்தொழிந்து மறைந்து போகும் எண்ணற்ற சிறு சுவடிகளைப் போலாமல், "**இலங்குநூல்**" எனத் திருவள்ளுவர் குறிப்பிடுதற்கு ஏற்ப, என்றென்றும் அழியாது நின்று நிலவி மக்களாற் பெரிதும் போற்றப்பெறும் சிறப்புடையனவாக விளங்கி நிற்றல், இலக்கியங்களுக்கு இன்றியமையாத பெரும் பண்பாகும்.

திருவாசகச் சிறப்புகள் :

இத்தகைய இலக்கியப் பண்பு நலங்கள் யாவும், திருவாசகத்தின்கண் பெரிதும் பொருந்திப் பொலிந்து சிறந்து விளங்குதலை யாவரும் காணலாம். (1) தான் கூறும் பொருளாலும், அதனைக் கூறும் முறைகளாலும், திருவாசகம் எல்லோருடைய உள்ளத்தையும் கொள்ளை கொள்ள வல்லதாகத் திகழ்கின்றது. (2) தன்னை இயற்றிய ஆசிரியனது பலதிற வாழ்க்கை யனுபவங்களையும், அது நலமுற விளக்குகின்றது.* (3) மனிதராயினர் அனைவரும் பொதுவாக அறிந்துகொள்ள விரும்பும் பிறப்பு இறப்பு நல்வினை தீவினை இம்மை மறுமை இறையருள் ஊழியல் முதலிய செய்திகளைப்பற்றி, ஆங்காங்கே குறிப்பிட்டு இனிதெடுத்து நினைப்பிக்கின்றது. (4) என்றென்றும் நிலைபேறுற்று நின்று நிலவி, மக்களாற் பெரிதும் மதித்துப் போற்றப்பெறும் சிறப்புடைய தெய்விகப் புனித மறை நூலாகவும், திருவாசகம் சிறந்தொளிர்கின்றது.

நால்வகை நலங்கள் :

இம்மட்டோ! இலக்கியங்களுக்குப் புகழும் பெருமையும் அவற்றை இயற்றும் ஆசிரியர்களின் நுண்மாண் நுழைபுல நலங்களாலும் (Intellect); தாம் கூறலுறும் பொருள்கள் தம்மாட்டு விளைத்த உணர்ச்சிகள் பிறர்க்கும் விளையுமாறு வெளியிட்டு உரைத்தற்கு வேண்டப்படும் தூய உணர்ச்சிநல மேம்பாட்டினாலும் (Emotion); தாம் கூறத் தலைப்படும் பொருள்கள், பயிலுபவர் மனத்தின்கண் பசுமரத்தாணி போலப் பதிந்து இன்புறுத்தும் வண்ணம், **உவமை உருவகம்** முதலிய சொற்பொருட்சுவை அணிநலங்களால் அழகுபடுத்திக் கேட்பார்ப் பிணிக்குந் தகையவாய் நன்றினிது விளக்க வல்ல கற்பனை வளங்களாலும் (Imagination); தம்மாற் கூறப்படும் பொருள்களை, 'மனத்தின் எண்ணி மாசறத் தெரிந்துகொண்டு, இனத்திற் சேர்த்தி உணர்த்தல் வேண்டும்' எனத் **தொல்காப்பியனார்** கூறுமாறு போல, நன்கினிது ஆராய்ந்து சிக்கறுத்துத் தூய்மை செய்து, சுவை கெழும இனிதே நிரல்படத் தொடுத்தமைத்து வகுத்துரைக்க வல்ல கலை நலங்கனிந்த நூல்யாப்பு முறைகளாலும் (Technique) அமைவனவாகின்றன*. இவ்வுண்மைகளை இலக்கியத் திறனாய்வில் மிகவும் புகழ் பெற்ற வில்லியம் ஹென்றி ஹட்சன், **வின்செஸ்டர்** முதலிய ஆங்கில அறிஞர்களின் நூல்களிற் பாங்குற உணரலாம். இவ்வகையிற் கருத முற்படினும், திருவாசகத்தின் இலக்கியத் திறன் மலையிலக்

* "Thiruvasakam depicts in beautiful hymns the progress of the soul, from the bondage of ignorance and passion into the liberty of light and love, its first awakening, its joy and exaltation, waywardness and despondency, struggle and unrest, the peace and the joy of union..." —**Dr. S. Radhakrishnan,** *Indian Philosophy, Vol. II, P.* 729.

தென விளங்கா நிற்கின்றது. தாலி புலாகநியாயம் (Specimen) பற்றி. அதற்கு ஒரு சிறு சான்றினை மட்டும் ஈண்டுக் கண்டு அமைவோம்.

' அண்டத் தரும்பெறல் மேகன் '

மாணிக்கவாசகர் இறைவன் தமக்கு மிகவும் தண்ணளியோடு எளிவந்து, தம் பாற் சிவானந்தானுபவம் ஆகிய பேரின்பமாரியினை வரையா வண்மையிற் கைம்மாறு கருதாமல், தனது பேரருட் பெருந்தகையாற் பெரிதும் வழங்கிப் பொழிந்தனனாகலின், அவனை " அண்டத் தரும்பெறல் மேகன் " என விதந்து மகிழ்ந்துரைக்க விரும்புகின்றார். அங்ஙனம் விரும்பிய மாணிக்கவாசகர், அக்கருத்தினைத் தமது நுண்மாண் நுழை புலம் தோன்றவும், உணர்ச்சி நலமும் கற்பனை வளமும் பொலியவும், அழகுற உருவகப் செய்து பின்வருமாறு பாடு கின்றார் :

'பரமா னந்தப் பழங்கடல் அதுவே
கருமா முகிலில் தோன்றித்
திருவார் பெருந்துறை வரையில் ஏறித்
திருத்தகு மின்னொளி திசைதிசை விரிய
ஐம்புலப் பந்தனை வாள்அரவு இரிய
வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப
நீடெழில் தோன்றி வாள்ஒளி மிளிர
எந்தம் பிறவியிற் கோபம் மிகுத்து
முரசு எறிந்து
மாப்பெருங் கருணையின் முழங்கிப்
பூப்புரை அஞ்சலி காந்தள் காட்ட
எஞ்சா இன்னருள் நுண்துளி கொள்ளச்
செஞ்சுடர் வெள்ளம் திசைதிசை
தெவிட்ட வரையுறக்
கேதக் குட்டம் கையற ஓங்கி
இருமுச் சமயத்து ஒருபேய்த் தேரினை
நீர்நசை தரவரும் நெடுங்கண் மான்கணம்
தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடும்
அவப்பெருந் தாபம் நீங்காது அசைந்தன
ஆயிடை வானப்பேர் யாற்று அகவயிற்
பாய்ந்தெழுந்து இன்பப் பெருஞ்சுழி கொழித்துச்
சுழித்தெம் பந்தமாக் கரைபொருது அலைத்திடித்து
ஊழூழ் ஓங்கிய நங்கள்
இருவினை மாமரம் வேர்பறித்து எழுந்து
உருவ அருள்நீர் ஓட்டா அருவரைச்
சந்தின் வான்சிறை கட்டி மட்டவிழ்
வெறிமலர்க் குளவாய் கோலி நிறைஅகில்
மாப்புகைக் கரைசேர் வண்டுடைக் குளத்தின்
மீக்கொள மேன்மேல் மகிழ்தலின் நோக்கி
அருச்சனை வயலுள் அன்புவித் திட்டுத்
தொண்ட உழவர் ஆரத் தந்த
அண்டத்து அரும்பெறல் மேகன் வாழ்க !

—திருவண்டப்பகுதி, 66-95.

பாடலின் பொருள் :

மிக மேலான இன்பப் பழங் **கடல்** ஆக விளங்கும் சிவமானது, கரிய பெரிய **முகில்** போலத் தோன்றி, திருப்பெருந்துறை என்னும் மலையின்மீது ஏறி, விந்து தத்துவம் ஆகிய **மின்னல்** ஒளியினை எல்லாத் திசைகளிலும் பரவுமாறு செய்து, ஐம்புல அவாக்கள் ஆகிய **பாம்புகள்** இரியவும், உலகியற் றுன்பங்களாகிய **கோடை** கால வெம்மை ஒழியவும், அருள் **மழை** யினைப் பொழிந்தது.

அதுபோது நாத தத்துவம் ஆகிய பறையை அறைந்தாற்போல், அஃது **இடி** முழக்கம் செய்தது. அங்ஙனம் மின்னியும் இடித்தும் மழை பொழிந்த நிலையில் **இந்திர கோபப்** பூச்சிகள், உயிர்களின் அளவில்லாத பிறவிகளைப் போல மிகுத்துக்

* (1) Prof. **William Henry Hudson,** Introduction to the Study of Literature.

(2) Prof. **C. T. Winchester,** Principles of Literary Criticism.

காணப்பட்டன. கார் காலத்திற்குரிய **தோன்றிப்** பூக்கள் மலர்வது போல, அச் சிவத்தின் 'அஞ்சல்' என்ற திருக்கை விளங்கியது. **காந்தள்** மலர்களைப் போல, அடியார்களின் கூப்பிய கைகள் திகழ்ந்தன. அருள் ஆகிய **வெள்ளம்** இன்பச் **சுழல்**களைச் சுழலவிட்டுக் கொண்டு பெருக்கெடுத்து ஓடுகின்றது.

இவ்வருள் வெள்ளத்தின் நீரைத் தலைப்பட்டுப் பருகுதற்குத் தவப்பேறு ஒரு சற்றும் வாய்க்காத பேதை உயிர்கள் ஆகிய **மான்** கூட்டங்கள், பிறவித் துன்பமாகிய **நீர் விடாய்** மேற்கொண்டு, அறுவகைப் பொய்ச்சமயங்களாகிய **கானல்** நீரினை உண்மை நீர் என்று மயங்கி, அலைந்து திரிந்து வருந்துகின்றன.

இந்நிலையில் அருள் வெள்ளமானது பெருகுதலால், மலப்பிணிப்பு ஆகிய பந்தம் என்னும் ஆற்றின் **கரைகள்,** இருபுறத்தும் இடிந்து சிதைந்து அழிகின்றன, இருவினைகளாகிய **மாமரங்கள்** வேரோடு பறித்து வீழ்த்தப்படுகின்றன. இவ்வருள் வெள்ளத்தினை அடியார்கள், தங்கள் உள்ளமாகிய பெரிய **குளங்களில்** நிரப்பிக் கொள்கின்றனர்.

அங்ஙனம் நிரப்பிக்கொண்ட அடியார்களாகிய **உழவர்கள்,** வழிபாடு என்னும் **வயலில்**, அன்பு என்னும் **விதை**யினை விதைத்து, பேரின்பம் ஆகிய **பயிர்** விளையும்படி செய்து, **சிவபோகம்** என்னும் சிறந்த பயனை நிரம்பத் துய்த்து மகிழ்கின்றனர்.

இங்ஙனம் அருச்சனை வயலில், அன்பு வித்து இட்டு, தொண்ட உழவர்கள் ஆரத் தந்த, அண்டத்து அரும்பெறல் மேகம் போன்றவன் ஆகிய சிவபெருமான், நீடு இனிது வாழ்க! என்பது, மேலே எடுத்துக்காட்டப் பெற்ற திருவாசகத்துத் **திருவண்டப்பகுதி** வரிகளின் (66-95) திரண்ட பொருள் ஆகும்.

இலக்கியச் சுவைத்திறன் :

இவ்வினிய அழகிய பகுதியின்கண், எல்லாம்வல்ல இறைவனை அவன்றன் பேரருட் பெற்றிமை பற்றி, **மேகம்** என்று உருவகம் செய்து உரைக்கத் தலைப்பட்ட மாணிக்கவாசகர், அவ்வடிப்படைக் கருத்தினையே படிப்படியே ஏற்ற பெற்றியெல்லாம் இயைபுற இனிது வளர்த்து, அம் மேகத்தோடு தொடர்புடைய ஏனைக் **கடல், மலை, மின்னல், இடி,** அரவு, கோடை, மழை, தோன்றிப்பூ, தம்பலப் பூச்சி, காந்தள்மலர், வெள்ளம், சுழி, கரை, மரம், கானல்நீர், மான்கூட்டம், குளம், வயல், **உழவர், விதை, பயிர்** என்னும் பலவற்றையும் ஒரு தொடர்புபடப் பிணைத்து வரிசையாக்கி, அவை பலவற்றினையும் தகுந்தபடி பொருத்தமுற உருவகம் செய்து, இறைவனின் திருவருட் சிறப்பினை விளக்கியுள்ள திறம், அறிஞர் அனைவருக்கும் களிபெருஞ்சுவை பயக்கும் இலக்கிய நலம் செறிந்த தொன்றாகும். திருவாசகத்தின் இலக்கியச் சுவை நலத்தின் திறத்திற்கு, இஃது ஓர் அரும்பெறல் எடுத்துக்காட்டு எனலாம்.

உருவகம் :

கவிஞன் தன் உள்ளத்தில் தோன்றும் நுண்ணிய கருத்துக்களைப் பிறர் உள்ளத்திலும் நன்கினிது பதியும்படி, ஓர் உருவம் கொடுத்துத் திண்ணிய பொருளாக்கி, அழகும் சுவையும் அமையுமாறு வெளிப்படுத்துகின்ற ஓர் அரும்பெறல் அணியே, **உருவகம்** எனப்படும். கவிதைத் துறையில் உருவகம் என்னும் அணியானது, மிகவும் முதன்மையும் சிறப்பும் அருமைப்பாடும் வாய்ந்தது.

அருவமாகவும் நுண்மையாகவும் திகழும் கருத்துக்களுக்கும், பண்புகளுக்கும், ஓர் அழகிய பருவடிவம் படைத்துக் கொடுத்து, அவற்றை அனைவருடைய மனக்கண்ணுக்கும் புலப்படுமாறு

கொணர்ந்து நிறுத்தி விளக்குவது, உருவக அணியின் சிறப்பியல்பாகும். இத்துணைச் சிறந்த உருவகங்களை, மிக்க பொருத்தமும் சிறப்பும் உடையனவாகக் கையாளும் திறன், பெரும் புலமை நலம் எய்தப் பெற்ற ஒரு சில மேதைகளுக்கே அமைந்து இயலும் (1).

உருவக வகைகள் :

இத்தகைய சிறந்த புலமை நலம் கைவரப் பெறுதவர்களுக்குத் தம்முடைய கவிதைகளில் உருவகம் புணர்த்தல், எளிதில் இயலமாட்டாது. மிக முயன்று ஓரோ வழி உருவகம் புனைந்தாலும், பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்த கதைபோல, அஃது ஒன்றில் தொடங்கி, மற்றொன்றிற் சென்று, வேறு பிறி தொன்றாகி, அறவே பிழைபட்டு முடிந்தொழியும். இன்னோரன்ன பிழைபட்ட உருவகங்களையே **கலவை யுருவகம்** (Mixed metaphor) என்பர் அறிஞர். "I smell a rat, I see him floating in the air, but I shall nip him in the bud" என்னும் ஆங்கில மொழி வாக்கியம், இக் கலவை யுருவகத்திற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.

இங்ஙனம் ஒன்றில் தொடங்கி, மற்றொன்றிற்குச் சென்று, பின் வேறொன்றாக முடிந்து பிழைபட்டொழியாமல், ஒன்றனோடு ஒன்று இயல்பான தொடர்பும் இயைபும் பொருந்துமாறு திறன் தெரிந்து தேர்ந்து அமைத்தல், சிறந்த கவிஞர் பெருமக்களுக்கே செவ்விதின் வாய்க்கும். இதனை **இயைபு உருவகம்** என வழங்குவர்.

மேலும் இவ் வியைபுருவகத்தினையே அரைகுறையாகச் செய்து விடுக்காமல், முழுவதும் அமைந்து பொருந்துமாறு முற்றாக எடுத்து, நீளப் பிணைத்துத் தொடுத்து முடித்தல் என்பது, ஓர் அரிய பெரிய கலைத்திறன் என்பதில் ஐயமில்லை. இங்ஙனம், எடுத்த ஒரு கருத்தினையே படிப்படியாக வளர்த்துப் பொருத்தமுற இயைத்து, நீளத் தொடுத்து முடிக்கும் உருவகம், **முற்றுருவகம்** (Sustained metaphor) எனப் பெயர் பெறும்.

இயைபு முற்று உருவகம்

தனித்தனியே பல இடங்களிலும் சிதறிப் பிரிந்து கிடக்கும் பொருள்களையெல்லாம் ஒருங்கே தொகுத்துத் தொடர்பு படுத்தி, அவ் அருங்கலைத் திறத்தால் நம் மனோரின் சிந்தனை யுணர்வுக்குத் தெவிட்டாத விருந்தளித்து, உவகைச் சுவை யூட்டி நிற்கும் மாட்சிமையுடையது இயைபு முற்று உருவகம் என்னும் அணி (2).

திருவண்டப்பகுதி என்னும் திருவாசகப் பாடலின்கண், இத்துணைச் சிறந்த **இயைபு முற்றுவக அணி**யானது, இணையற்ற எழில் மிக்க முறையில் அமைந்திருப்பது, திருவாசகத்தின் இலக்கியத் திறனை விளக்குவதற்குப் போதிய சான்றாகும்.

உருவகப் பொருத்தம் :

(1) மாணிக்கவாசகர் சிவபெருமானைப் 'பரமானந்தப் பழங்கடல்' எனக் குறிப்பிடுகின்றார். **கடல்** எல்லையற்றுப் பரந்து

---

(1) "Metaphor is by far the the most important figure of speech in poetry. Figures are the products of an emotional state. A thing is visualised as the symbol of an attribute, that is the essence of a metaphor. When Wordsworth calls the daisy **"a nun"**, he presents to us the picture of modesty shyness gentleness and purity... The greatest of all excellences is to be happy in the use of a metaphor. **It is certainly a mark of great genius.** —*Dorothy Wilson*

(2) Metaphor is the supreme agent by which disparate and hitherto unconnected things are brought together in poetry for the sake of the effects upon attitude and impulse which spring from their collocation and from the combinations which the mind then establishes between them.

—*Dr. I. A. Richards,*
Principles of Literary Criticism, 239.

விரிந்து விளங்குவது. இறைவனும் அத்தகையவன். உலகைச் சூழ்ந்து கிடக்கும் கடல்களின் வேறு பிரித்து உணர்த்துவதற்காகப் **பழங்கடல்** எனவும், **பரம ஆனந்தக் கடல்** எனவும் சிறப்பித்தார்.

(2) கடல் நீரே மேகமாக மாறி வருதல் போல, இறைவனே குருவடிவத்தில் தோன்றி எழுந்தருளிப்போந்த அருமைப்பாடும் சிறப்பும் விளங்க, **அண்டத்து அரும்பெறல் மேகன்** என்றார். மழை பெய்து உலகைக் காக்கும் மேகம், அருள் சொரிந்து உயிர்களைக் காத்து நலம் புரியும் இறைவனின் இயல்புக்கு ஒருபுடை உவமையாகும். மேகம் போன்று வரையா வண்மையுடைய இறைவன், மேகன் எனச் சிறப்பிக்கப் பெற்றான்.

(3) மேகம் ஒரு மலையைச் சென்று சார்ந்து, அங்கே தங்கிப் படிந்து மழை பொழியும் தன்மைபதாதல் போல, இறைவன் குருவடிவம் கொண்டு திருக்கயிலையினின்று பெயர்ந்து திருப்பெருந்துறைக்குப் போந்தருளினன் ஆகலின், அத்தலத்தினை மலையாக உருவகம் செய்து ‘ திருவார் **பெருந்துறை வரையில்** ஏறி’ என்றார்.

(4) மேகம் மலையின்கட் சென்று தங்கி மழை பெய்யத் தலைப்படுங்கால், மின்னல் ஆகிய ஒளியைத் தோற்றுவிக்கும்; அதுபோல இறைவன் குரு வடிவம்கொண்டு போந்து, தனது பேரெழில் ஒளி வடிவைக் காட்டினனாகலின், அதனைத் **திருத்தகும் மின்னொளி** என்றார்.

(5) மேகத்தினின்று மழை பொழியத் தலைப்படுங்கால், மின்னலுடன் இடி முழக்கமும் நிகழ்தல் இயற்கை. அதுபோல இறைவனின் திருவுருவக் காட்சி எய்தும் பேறுபெற்ற அடியவர்களுக்கு, அவ் இறையருளால் மணி கடல் யானை குழல் மேகம் வண்டு தும்பி வீணை பேரிகை யாழ் என்னும் தசவித நாதங்கள் முழங்குதல் கேட்கப்பெறும் ஆதலின், அவ்வனுபவத்தினை **முரசு எறிந்து மாப்பெருங் கருணையின் முழங்கி** என மாணிக்கவாசகர் மொழிந்தருளினார்.

(6) மேகம் மழை பொழியுங்கால் நிகழும் மின்னலொளியும் இடி முழக்கமும் காரணமாகப் பாம்புகள் இறந்துபட்டு அழிவது இயல்பு. அம்முறையில் இறைவனின் திருவுருவக் காட்சியும் அருளும் தலைப்பட்ட அடியவர்களுக்கும் தம்மைக் கட்டுறுத்திப் பிறவியின்கண் செலுத்திவந்த பந்தனைகள் ஆகிய ஐம்புல அவாக்கள் அறவே நீங்கி அழிந்தொழிதல்பற்றி, **ஐம்புலப் பந்தனை வாள் அரவு இரிய** என்றார்.

(7) மேகம் மழை பொழியத் தொடங்கினால் கோடை காலத்தின் வெப்பம் குறைந்து தணிவு எய்தும். அதுபோன்றே இறைவனின் திருவருளுக்கு உரியவராயினபின், அடியவர்களின் துயரங்களும் முடிவெய்தும். இவ்வுண்மை **வெந்துயர்க் கோடை மாத்தலைகரப்ப** எனச் சுட்டப்பெற்றது.

(8) மேகம் மழை பொழிகின்ற கார் காலத்தில் தோன்றியும், காந்தளும் ஆகிய பூக்கள் மலரும்; இந்திரகோபப் பூச்சிகள் எங்கணும் தோன்றிப் பறந்து விரைந்தழியும். மாணிக்கவாசகர்க்கு இறைவன் குரு வடிவில் எழுந்தருளி ‘அஞ்சேல்’ என்று காட்டியருளிய திருக்கையாகத் **தோன்றி** மலரும், இறைவனைக் காணப்பெற்று வணங்கிய அடியார்களின் கூப்பிய கைகளாகக் **காந்தள்** மலரும், இறைவனின் அருளை எய்தப் பெற்றதனால் அடியவர்களின் பிறப்பிறப்புக் கவலைகள் அழிந்தொழிதலாக இந்திரகோபப் **பூச்சிகள்** (ஈயல்) பரவி அழிதலும், பொருத்தமுற உருவகம் செய்யப்பெற்றுள்ளன.

(9) கார் காலத்தில் மழை பொழிதற்கு முன்னர், வேனிற் காலத்து வெயிலிற் காடுகளிலுள்ள மான் கூட்டங்கள் நீர்விடாய்கொண்டு, **பேய்த்தேர் (Mirage)** ஆகிய கானலினை நீர் என்று மயங்கி அலைந்து திரிந்து வருந்தும். அறுவகைச் சமயத்தவர்களை மான் கூட்டமாகவும், அவர்தம் பொருந்தாக் கொள்கைகளைக் கானல் நீராகவும், இங்கு மாணிக்கவாசகர் உருவகம் செய்துள்ளார்.

(10) மழை பொழிதலினால் ஆற்றில் நீர் பெருகுதலை **அருள் வெள்ளம்** என்றும், சுழிகள் கொழித்தலை **இன்ப மேலீடு** என்றும், இரு கரைகளும் சரிதலை உலகியற் பந்த பாசங்களின் ஒழிவு என்றும், கரைகளிலுள்ள மரங்கள் வேரற்றுச் சாய்ந்து விழுதலைப் புண்ணிய பாவங்களாகிய இரு வினைகளும் நீங்குதல் என்றும், வெள்ள நீர் பாயப்பெறும் வயல்களை **அருச்சனை**யாகிய வழிபாடு என்றும், விதையினை **அன்பு** என்றும், அடியார்கள் ஆகிய தொண்டர்களை **உழவர்கள்** என்றும், பிறவாறும் ஏற்ற பெற்றி பொருத்தமுற உருவகித்திருக்கும் மாணிக்கவாசகரின் புலமை மாட்சிமை, பெரிதும் புகழ்ந்து போற்றற்பால தொன்றாகும்.

திருவண்டப் பகுதியின் சிறப்பு :

கவிஞனின் தூய சிறந்த உணர்ச்சியானது உந்தப்பெற்று, மேலெழுந்து பொங்கி ஆற்றலுடன் வெளிப்படும் போது, அழகிய இனிய அரிய சொற்களும் சொற்றொடர்களும், அக் கவிஞன் ஒரு சிறிதும் முயற்சி செய்ய வேண்டாமல், தாமே தம்முள் இகலிக்கொண்டு முன் வந்து நின்று ஏவல் கேட்டுப் பணிபுரியும் நிலையில், அவன் பாடும் கவிதைகளில் மிகவும் சிறப்புற அமைந்து திகழும் என, அறிஞர்கள் கூறுவர் (3).

அவ்வுண்மைக்கு ஏற்பவே, இத் திருவண்டப்பகுதி அகவற்பாவின் சொற்களும் சொற்றொடர்களும் சுவை நிரம்பி, எளிதினிது பொற்புற அமைந்திருக்கும் திறம், நினைத்தொறும் இன்பம் விளைக்கின்றது. இச் சிறப்பெல்லாம் கருதியே, மேலைநாட்டுப் பேரறிஞர் ஆகிய **திரு. ஜி. யூ. போப்** அவர்கள், இத் திருவண்டப் பகுதியின் வரிகளை மிகச் சிறப்பாக விதந்தெடுத்து வியந்து போற்றியுள்ளார் (4).

முடிவுரை :

இதுகாறும் கூறியவாற்றால், தாவிலாக நியாயம் பற்றித் திருவாசகத்தின் இலக்கியத் திறன் இனையதன்று யாவரும் கருதியுணரலாம். இத்தகைய இலக்கியச் சுவையும் பக்திச் சுவையும் ஒருங்கே கலந்து நிறைந்து, இணையற்று விளங்கும் செந்தமிழ்த் தெய்வப் பனுவல் ஆகிய திருவாசகத்தினை, நம்மனோர் அனைவரும் பலகாலும் ஓதிப் பயின்று, நலங்கள் பெற்று மகிழ்வோமாக !

திருக்குறள்போல் நீதிநூல் ;
சிவஞான போதம்போல்
பெருக்கமிகும் மெய்ப் பொருள்நூல்;
பீடுயர் தொல் காப்பியம் போல்
திருத்தமிகும் இலக்கண நூல் ;
சிறந்த திருவாசகம் போல்
உருக்கமிகும் இலக்கியநூல் ;
உலகினில்வே றெங்குமில்லை !
— ஆசிரியர்.

(3) "When the moment of **intense** feeling comes, **fine** phrasing is out of question......"

— **P. H. B. Lyon,**
The Discovery of Poetry, 184.

"Lines 66 - 95 are well nigh **untranslatable** for they contain a **subtle** and **intricate allegory,** by means of which the grace of the manifested Sivan, who is praised under the title of the '**Cloud**' is set forth......... In these profound and pithy lines, **every** particular of the description has its **mystical** meaning......"

— Dr. G. U. Pope.

நடைபெற்ற நிகழ்ச்சிகள் *(பிரம்மோற்சவம்)*

அழகர் கோயில்	சுந்தரராஜப் பெருமாள் கோயில்
பேரளம்	சுயம்புநாதசுவாமி ,,
சென்னை	பூக்கடை சென்னமல்லீசுவரர் கோயில்
நாச்சியார் கோவில்	ஸ்ரீநிவாசப் பெருமாள் ,,

காசி விசுவநாதர்

முன்னுரை :

இந்நாளில் நாம் இந்தியநாட்டின் ஒருமைப்பாடு குறித்துப் பெரிதும் முயன்று வருகின்றோம். அதற்குரிய வழிவகைகளைப் பற்றிப் பெருந் தலைவர்கள் பலரும் ஆராய்ந்து வருகின்றனர். இதனை நம் முன்னோர்கள் சமயத்துறையில் தொன்னெடுங்காலமாகவே வற்புறுத்திக் கடைப்பிடித்து வந்துள்ளனர். நாட்டின் ஒரு பகுதியிலுள்ள மக்கள், பிற பகுதிகளுக்கும் சென்று அங்கங்குள்ள மக்களோடு அன்புடன் கலந்து பழகி, ஒற்றுமையை வளர்த்துக்கொண்டு இன்புற்று வாழ்தற் பொருட்டு, நம்முடைய பெரியவர்கள் பல ஏற்பாடுகளைச் சிறப்புற வகுத்திருக்கின்றனர்.

தென்னாட்டு மக்கள் வடக்கேயுள்ள காசி முதலிய தலங்களுக்கும், வடநாட்டு மக்கள் தெற்கிலுள்ள இராமேச்சுரம் முதலிய தலங்களுக்கும் யாத்திரை செய்தலை, ஒரு சிறந்த சமயக் கடமையாகவும் புண்ணியச் செயலாகவும், நம் சமய நூல்கள் வற்புறுத்துகின்றன. இதனால் எத்துணையோ பலப்பல நூற்றாண்டுகளாக இந்திய ஒருமைப்பாடு சிறிதும் குன்றாமல் நின்று நிலைபெற்று இன்றளவும் வளர்ந்துகொண்டு வருகின்றது. காசி விசுவநாதர், காசியில் மட்டுமேயன்றித் தமிழ் நாட்டிற் பெரும்பாலான எல்லாக் கோயில்களிலும் எழுந்தருளி விளங்குகின்றார். அங்ஙனமே காசிப்பதியிலேயே இராமேச்சுரம் முதலிய தலங்களும் அமைந்திருக்கும் செய்தியை அதிவீரராம பாண்டியர் இயற்றியருளிய காசிகாண்டம் என்னும் நூலினால் அறிகின்றோம். காசி விசுவநாதர்க்குச் சில தனிக் கோவில்கள் நம் சென்னையிலும் அமைந்துள்ளன.

காசி எனும் பெயர்க் காரணம் :

நாம் காசி என்னும் சொல்லைப் பலகாற் கேட்டிருக்கின்றோம். அதன் பொருள் இன்னது என்பதனை நம்மிற் பெரும்பாலோர் அறியோம். கா-தேஜஸ், தேசு, ஒளி. சி-ஸ்ரீ, திருமகள். முத்தித் திருமகள் மிகவும் ஒளியோடு பொலிந்து வாழ்ந்துகொண்டிருத்தலால், 'காசி' என்னும் பெயர் பெற்றது என்பர்.

> "தேசொடும் பொலிந்து முத்தித்
> திருமகள் உறைதல் தன்னால்
> காசி என்று உரைப்பர்"
>
> —காசிகாண்டம்.

முத்தி தரும் தலங்கள் ஏழு என்பர். அவைகள் காசி, காஞ்சி, அவந்தி, மாயை, அயோத்தி, துவாரகை, மதுரை எனப்படும். அவற்றுள் மிகவும் தலைசிறந்தது காசியேயாகும். காசியை அடைவதற்கு ஏதுவாக இருந்துவரும் காரணம் பற்றியே, பிற தலங்களும் முத்தி வழங்கும் சிறப்புடையன என்று குறிப்பிடப்பெற்றன. 'காசித்' தலத்தின் அருமை பெருமைகள் கணிப்பரியன.

> "காசி மாயாபுரி அவந்தி காஞ்சி மற்றும்
> ஓசைகொள் அயோத்தி வண்துவரை ஒப்பறும்
> ஏசிலா மதுரை என்றிசைக்கும் ஏழ்பதி
> மாசறு முத்தியை வழங்கும் என்பவே"

> "காசியைக் குறித்துச் செல்லும்
> கால்களே கால்கள் ஆகும் !
> காசியை வழுத்தும் நாவே
> நாவெனக் கழற லாமால் !
> காசியின் கதைகள் கேட்கும்
> செவிகளே செவிகள் ஆகும் !
> காசியை இனிது காணும்
> கண்களே கண்கள் ஆமால்!"
>
> —காசிகாண்டம்.

தமிழ் நூல்களில் வாரணசி:

காசிக்கு வாரணசி என்றும் ஒரு பெயர் உண்டு. இப்பெயரே (Benares) என ஆங்கிலத்தில் திரிந்து வழங்குகின்றது. வாரணசி என்னும்

பெயர் மிகப் பழங்காலத்திலேயே தமிழ் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளது. சங்க நூல்களுள், கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகை நூலின்கண்,

"தெருவின்கட்
காரணம் இன்றிக் கலங்குவார்க் கண்டு
வாரண வாசிப் பதம்பெயர்த்தல் ஏதில
நீநின்மேற் கொள்வ தெவன்?"

என வருதல் காணலாம். இங்ஙனமே ஏறத்தாழ 1800 ஆண்டுகட்கு முற்பட்டன எனக் கருதப்படும் சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் நூல்களினுள்ளும் 'வாரணாசி' என்னும் பெயர் வழங்கப்பட்டுள்ளது. கண்ணகியை மாதரியினிடம் ஒப்படைக்கும் கவுந்தியடிகள், 'தவத்தோர் அடைக்கலம்தான் சிறிது ஆயினும் மிகப் பேரின்பம் தரும் அது கேளாய்' என விளக்கிக் கூறும் பகுதியில்,

"மத்திம நன்னாட்டு வாரணம் தன்னுள்
உத்தர கவுத்தற்கு ஒருமகன் ஆகி
உருவினும் திருவினும் உணர்வினும் தோன்றிப்
பெருவிறற் றானம் பலவும் செய்தான்"

என்புழி, வாரணவாசி 'வாரணம்' எனக் குறிப்பிடப்பெறுகின்றது. மணிமேகலையில் 'ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை'யில்,

"வார ணாசிஓர் மறைஓம் பாளன்
ஆரண உவாத்தி அபஞ்சிகன் என்போன்..."

"வார ணாசிஓர் மாமறை முதல்வன்
ஆரண உவாத்தி அரும்பெறல் மனைவி யான்..."

எனவரும் பகுதிகளால், மிகப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழ்நாட்டு மக்கள் வாரணாசியைப் பற்றி அறிந்தும், அதனோடு தொடர்பு கொண்டும் இருந்தனர் என்னும் உண்மையினை உணரலாம்.

பெயர்க் காரணம் :

காசிமா நகரம் வரணை அசி என்னும் இரண்டு ஆறுகளுக்கு இடையில் அமைந்து விளங்கும் நகரம் ஆதலின், 'வாரணாசி' என்னும் காரணப் பெயர்பெற்றது. அடைந்தவர்களின் பாவம் நீங்கத் தடுப்பது வரணை. தன்னைச் சார்ந்து நீராடியவர்களின் பாவங்களை அறுப்பது அசி. பெரும்பாலும் ஆறுகள் கிழக்கு நோக்கியே ஓடும் இயல்பின. சிறுபான்மை மேற்கு நோக்கியும் ஓடும். ஆயினும் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி ஓடும் ஆறுகள் மிகவும் சிறப்புடையன. வரணையும் அசியும் ஆகிய ஆறுகள் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி ஓடுதலின், மிகவும் சிறப்பாகப் போற்றத்தக்கன.

"சார்ந்தவர் பாவம் நீங்கத்
தகைதலான் வரணை என்றும்
ஆர்ந்தநீர் படிந்தோர் பாவம்
அறுத்தலால் அசி என்றும்
சேர்ந்தன நாமம், தெற்கு
வடக்கதாய் உண்மை தேர்ந்தோர்
ஓர்ந்திடும் முத்தி வைப்பின்
காவலாய் ஒழுகும் அன்றோ"

"ஆதலின் தீமை யோர்கட்கு
அடையொணாது அசியினோடு
மேதகு வரணை யாறும்
விழைதக ஒழுகு மாற்றால்
மாதவக் கிழமை பூண்ட
முனிவரர் வளங்கொள் காசிக்கு
ஏதமில் நாமம் வாரணாசி
என்று இசைத்த தாமால்"

சிவபெருமான் பிரிவின்றி இடைவிடாது எழுந்தருளி விளங்குதலின் இதற்கு அவிமுத்தம் (விடப்படாதது) என்றும்; சிவசாரூபம் பெற்ற உருத்திர கணங்கள் பெருந்திரளாக வசித்து வருதல் பற்றி உருத்திரவாசம் என்றும்; உலகங்களெல்லாம் அழிந்தொழியும் கடையூழிக் காலத்தும் அழியாது நிலைபெறுதலின் மகா மயானம் என்றும்; தன்னை யடைந்தவர்கள் முத்திப்பேறு எய்தி ஆனந்தமாகக் கானம் செய்து கொண்டிருக்குமாறு செய்வித்தலின் 'ஆனந்த கானம்' என்றும்; பலப்பல பெயர்கள் காசித் தலத்திற்கு வழங்கப்பெறும்.

திருமுறைகளில் வாரணாசி:

காசி இத்துணைச் சிறந்த தலமாயினும், அது நம் சமய ஆசிரியப் பெருமக்களால் திருப்பதிகம் பாடப் பெறவில்லை. ஆயினும், 'க்ஷேத்திரக் கோவை'த் திருப்பதிகங்களில் வைப்புத் தலங் களுள் ஒன்றாக அஃது இடம் பெற்றிருக்கின்றது.

"மாட்டூர் மடப்பாச்சில் ஆச்சிராமம்
முண்டீச்சரம் வாதவூர் வாரணாசி..."
(சம்பந்தர்)

"மண்ணிப் படிக்கரை வாழ்கொளி
புத்தூர்
வக்கரை மந்தாரம் வாரணாசி..."
(அப்பர்)

திருநாவுக்கரசர் பெருமான் "ஆளும் நாயகன் கயிலையில் இருக்கை கண்டு அல்லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்" எனத் திருக்கயிலை யாத்திரையை மேற்கொண்டபோது, திருக்காளத் தியை வணங்கினார். ஸ்ரீ சைலம் இறைஞ்சினார். தெலுங்கு நாட்டைக் கடந்தார். கன்னட தேசம் எய்தினார். பின்னர் மாளவம் இலாடபூமி என்பன கடந்து மத்திய பைதிரம் (Central Provinces) அடைந்து, வாரணாசியை வழிபட்டார். இதனை,

"அன்ன நாடு கடந்து கங்கை
அணைந்து சென்று வலங்கொளும்
மின்னு வேணியர் வார ணாசி
விருப்பி னோடு பணிந்தார்..." (353)

எனப் பெரியபுராணத்திற் சேக்கிழார் கூறுதல் கொண்டு தெளியலாம்.

காசியின் மாட்சி:

இத்தகைய சிறந்த காசியின்கண் சென்று சில காலம் வாழ்ந்து இறக்கப்பெறும் பேறு பெற்ற வர்களை, உமையம்மையார் தமது உத்தரியம் கொண்டு வீசிக் களைப்பு நீக்க, இறைவன் அவர் களின் செவியில் பிரணவ உபதேசம் செய்து, முத்திப்பேறு எய்தும்படி அருள்புரிவான் என நூல்கள் பலவும் கூறுகின்றன.

"இத்தலத் தெய்தி இறக்குநர்
யாரும் இளைப்பாற
உத்தரியம் கொடு மாதுஉமை
வீசிட, உமைஒருபால்
வைத்த அரும்பொருள், மேவரு
தாரக மறைஓதி
முத்தி அளித்திடும் இப்பதி சீர்க்
கொருமுடிவு உண்டோ?"

காசியம்பதி நமக்கு நெடுந்தொலைவில் எங்கே யோ இருக்கின்றது என்று எண்ணுதல் வேண்டா. "உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்" என நம் திருமூலர் கூறுதற்கு ஏற்ப, நமது உடம் பின்கண்ணும் காசித்தலம் அமைந்து விளங்கு கின்றது. நம் உடம்பில் இடைகலை பிங்கலை என்னும் நாடிகள் இரண்டு உள்ளன. அவற் றிற்கு இடையே சுழுமுனை என்னும் நாடியும் முதுகந்தண்டின் வழியாக ஓடுகின்றது. இடை கலை பிங்கலை என்னும் இரண்டும் வரணை அசி என்னும் ஆறுகளாக அமைய, அவற்றின் நடுவே சுழுமுனை நாடி கூடும் புருவ நடு ஆகிய இடமே வாரணாசி என நூல்கள் பலவாறு கூறும்.

"இடைகலை பிங்கலை வாலை
சிறந்துடன் இவைகூடும்
முடிவறு வாரணாசி நடுவுயர்
சுழுமுனை என்று,
விடையம் அறுத்துஉயர் மெய்த்தவம்
மேவிய காபாலி
அடைவின் உரைத்தனன். இந்நகருக்கு
இணையாதேயோ?"

எவ்வாறு காயத்திரிக்கு இணையான மந்திரமும், சிவபெருமானுக்கு மேற்பட்ட தெய்வமும் இல்லை யோ, அவ்வாறே காசிக்கு மேற்பட்ட தலமும் இல்லை. 'நாங்கள் காசிக்குப் போகப்போகிறோம்' என்று சொல்லிக்கொண்டிருந்தாலே, ஓர் அசுவ மேதயாகம் செய்த பலனுண்டு. அங்ஙனமா யின், அதற்குச் சென்று வழிபட்டவர்களின் பேறு சொல்லும் தகைமையதோ? காசிக்குச் சென்று விசுவநாதப் பெருமானை வணங்கி, அங்குள்ள முத்தி மண்டபத்தில் ஒரு நொடியளவு நேரமா

யினும் தங்கியிருந்து தியானித்தவர்கள், சொல்ல இயலாத பெருமைசான்ற தூய வீடு பேற்றை அடைவார்கள்.

விசுவநாதர் :

காசிப்பதியில் எழுந்தருளி விளங்கும் பெருமானுக்கு விசுவநாதர் என்பது பெயர். விசுவம் என்றால் உலகம், அண்டம் என்பது பொருள். (Universe) என்னும் ஆங்கிலச் சொல் 'விசுவம்' என்னும் பொருளையே உணர்த்துகின்றது. இறைவன் உலகத்துக்கு அப்பாற்பட்டு மேலோங்கி நிற்பவன் (விசுவாதிகன்); இறைவன் உலகத்திற்கு நிமித்த காரணன், உலகங்களெல்லாம் அவன்பால் தோன்றி அவனிடமே ஒடுங்குகின்றன (விசுவகாரணன்); உலகத்திலுள்ள உயிர்ப் பொருள் உயிரில்பொருள்கள் எல்லாவற்றுள்ளும் கலந்துநின்று, அவற்றை யெல்லாம் இயக்கிவருபவன் இறைவனே (விசுவாந்தரியாமி); உலகங்களையெல்லாம் தனக்குப் படிவமாகக் கொண்டு விளங்குபவன் இறைவன் (விசுவரூபி). இதனை நமது அருள் நந்தி சிவாசாரியார் தமது சிவஞான சித்தியாரின்கண்,

"உலகினை இறந்து நின்றது
அரன்உரு என்பது ஓரார்
உலகவன் உருவில் தோன்றி
ஒடுங்கிடும் என்றும் ஓரார்
உலகினுக் குயிரு மாகி
உலகுமாய் நின்ற தோரார்
உலகினில் ஒருவன் என்பர்
உருவினை உணரார் எல்லாம்"

என அருளிச் செய்திருத்தலும், ஈண்டு அறிந்தின்புறற்பாலது. விசுவாதிகன் விசுவகாரணன் விசுவாந்தரியாமி விசுவரூபி விசுவசேவியன் என்பன போன்ற இறைவனின் பலவகை இலக்கணங்களையும், விசுவநாதன் என்னும் ஒரு சொல்லே விளக்கிநிற்கவல்ல மேன்மை சான்றதாக விளங்குகின்றது.

மறைச்சிகரம் :

காசித் தலத்தின் கணிப்பரும் சிறப்புக்களையும், ஆங்கு எழுந்தருளியுள்ள விசுவநாதப் பெருமானின் அருமை பெருமைகளையும், சைவசித்தாந்தச் சான்றோர்களுள் ஒருவராகத் தலைசிறந்து திகழும் நமது குமரகுருபர அடிகளார், தாம் இயற்றியருளியுள்ள காசிக் கலம்பகம் என்னும் சிறந்த நூலின்கண் அழகுற விளக்குகின்றார்.

காசியானது இந்தியாவிலேயே மிகவும் புகழ் பெற்ற நகரங்களுள் ஒன்றாக விளங்குவதோடன்றி, மறைகள் எல்லாவற்றாலும் போற்றப்படும் மாட்சிமை பெற்று, அவற்றின் சிகரமாகவும் திகழ்ந்து, ஒப்புயர்வற்று ஒளிர்கின்றது.

"நகர மாய், மறைச்
சிகரம் ஆனதால்!
மகரம் மாயினுன்
நிகரில் காசியே"

பிரணவ உபதேசம்:

சிவபிரான் காசியில் இறந்தவர்களுக்குப் பிரணவ உபதேசம் செய்து ஞானம் அளித்து முத்தி நல்கும் சிறப்பினைக் குமரகுருபரர் நயமுறப் பாடுகின்றார். நீரில் எழுதப்படும் எழுத்தைப் போன்று நிலையில்லாத உடலைக் காசியில் துறந்து இறந்தவர்களுக்கு, 'நீ கூறுவது ஓரெழுத்துமட்டும் தானே? அவர்கள் எல்லாவற்றையும் எவ்வாறு உணர்ந்து கொள்கின்றனர்?' எனக் குமரகுருபரர் வியந்தும் நயந்தும் விசுவநாதரை வினவுகின்றார். ஓர் எழுத்து—பிரணவம்.

"நீர்எழுத்துக் கொத்தவுடல்
நீத்தார்க்கு, நீநவில்வது
ஓர்எழுத்தே! முழுதும் அவர்
எவ்வண்ணம் உணர்வதுவே?"

சிவசாருபப் பேறு:

காசியில் சென்று இறப்பவர்கள் யாவரும் சிவசாருபம் பெறுவர் என நூல்கள் கூறும். இதுபற்றியும் குமரகுருபரர் தம் காசிக்கலம்பகத்தில் சுவைபெருகக் குறிப்பிடுகின்றார். சிவசாருபம் பெறுபவர்கள், சிவபெருமானைப் போன்றே திரிநேத்திரம் காளகண்டம் சதுர்ப்புஜம் மான் மழு முதலிய பல உருவ ஒப்புமைகளைப் பெறுவர்.

அதனால் சிவபெருமானுக்கும் சிவசாரூபம் பெற்றவர்களுக்கும் இடையே வேறுபாடு தெரியாமல் அடியார்கள் இடர்ப்படுவர். அங்ஙனம் நேராமற் பொருட்டு, அம்பிகை சிவபெருமானின் மார்பில் தன் முலைத் தழும்புகளைப் பொறித்து வைத்து வேறுபாடு செய்தருளினள். அங்ஙனம் அம்பிகை செய்யாமற்போயிருப்பின், நாம் சிவபெருமானைக் காசியில் எவ்வாறு வேறுபிரித்து இறைஞ்சுதல் இயலும்? என்கின்றார் குமரகுருபரர்.

> "உடையாள் அகிலேசர்க்கு ஒங்குமுலைக் கோட்டின்
> அடையாளம் இட்டுவையாள் ஆனால்,— கடையில் அவர்
> செவ்வண்ணம் பெற்றார் திரளோடுநிற் கின்றாரை
> எவ்வண்ணம் கண்டிறைஞ்சு வேம் ?"

காசியில் இறப்போர் சிவசாரூபம் பெறுவர் என்பதனை இப்பாடல் நயமுற உணர்த்துகின்றது.

முயலாமலே முத்திநலம் :

முத்தியடைவது என்பது எளிதான செயல் அன்று. அதற்காக நாம் பெரிதும் பாடுபட்டேயாதல்வேண்டும். 'அரிதிற் பெறு துறக்கம்' எனவும், 'ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்' எனவும் பரிபாடல் கூறுதல் காணலாம். Heaven என்னும் ஆங்கிலச் சொல் 'அரும்பாடு பட்டு அடையத்தக்கது' (That which can be attained only by much heaving) என்னும் பொருளுடையது என்பர். "செய்தற் கரிய செயல்பலவும் செய்து சிலர் எய்தற்கரியதனை எய்துகின்றார்" என்று திருக்களிற்றுப்படியார் கூறுதலும் காணலாம். இத்தகைய அரிய முத்திப் பேற்றினை, நாம் காசியை அடைந்தால் எத்தகைய முயற்சியும் செய்ய வேண்டாமலே, நீண்ட உறக்கத்தில் அழுந்தியே, மிக எளிதில் அடையலாம். புவனங்களைப் படைக்கும் புவனாதிபதிகளெல்லாம்கூட நமக்குப் பணிவிடைகள் புரிவர் எனக் காசிக் கலம்பகம் கட்டுரைக்கின்றது.

> "முயலா மலேதவம் முத்தித்
> திருவை முயங்கநல்கும்
> கயலார் பெருந்தடங் கண்ணி
> பங்கார் அருட் காசியிலே
> செயலாவ தொன்றிலை வானா
> நெடுந்துயில் செய்யும்! உங்கள்
> பயலாக வேபணி செய்வார்
> புவனம் படைப்பவரே"

சிவமாய்ச் செலும் சிறு செந்துக்கள் :

காசியிலே சென்று சில்லாண்டுகள் இருந்து இறப்பதனால், சிற்றுயிர்கள் எல்லாம்கூட மிக எளிதில் வீடுபேறு எய்தி விடுகின்றன. அதனால் சிவமாந்தன்மைப் பெருவாழ்வு பெற்றுச் சிவலோகம் செல்லும் சிறுசெந்துக்கள், தம்மைப் போலச் சில்லாண்டுகளிலேயே உயர்வு எய்தப் பெறாமல், பல்லாண்டுகளாக ஒரே நிலையில் இழிந்து கிடக்கும் தேவர்களைப் பார்த்துத் தோள் கொட்டி நகைக்கின்றனவாம்.

> "பல்லாண்டு தம்மைப் படைத்தஅத்
> தேவரைப் பார்த்துப் பைம்பொன்
> வில்லாண்ட தோள்கொட்டி எந்தையர்
> கோல விடம்பழுத்த
> அல்லாண்ட கண்டத்தெம் ஆதிப்பிரான்
> அவிமுத்தத்திலே
> சில்லாண் டிருந்து சிவமாய்ச்
> செலும்சிறு செந்துக்களே"

உடற்பாரம் ஓம்பும் கேவலம் :

வீடுபேறு அடைய விரும்புபவர்கள் உடலை வெறுத்துப் புறக்கணித்து, அதன் சுமையைக் கழிக்கவே விரும்புவர். "செடியார் உடலைச் சிதையாதது எற்றுக்கு எங்கள் சிவலோகா" எனவும், "தினைத்துணையேனும் பொறேன் துயர் ஆக்கையின் திண்வலையே" எனவும் மணிவாசகர் அரற்றுதல் காணலாம். "பிறப்பறுக்க லுற்றார்க்கு உடம்பும் மிகை" என்பது திருக்குறள். ஆனால் இதற்கு மாறாக, முத்தி எய்த விரும்புபவர்கள் தமது உடற்சுமையை மிகவும் கருத்தாகப் போற்றிக்கொள்ளும் விந்தையையும் நாம் காண்கின்றோம்.

காசிக்குச் சென்று இறத்தலால் முத்தியைப் பெற விரும்புபவர்கள், தாம் அங்குச் செல்லுந் துணையும், தமது முடைத் தலையையும் எலும்பு

களையும், சாம்பலையும் காசியிற் கங்கையிற் சேர்த்தற் பொருட்டு, உடற் சுமையை வெறுமல் மிகவும் விழிப்போடு ஓம்பிக்கொள்வர். இம்மட்டோ! காசியிற் சென்று இறந்தபின்னும் இவர்கள் சிவ சாரூபம் பெற்றுத் தலைமாலை தரித்தல், சாம்பல் பூசுதல், எலும்பு அணிதல் ஆகிய இவைகளையே உடையவர்களாக இருப்பர். காசி விசுவநாதர் மீது செய்யும் பக்திக்கு, இங்ஙனம் உடற்சுமையைத் தாங்கிப் பொறுத்துக்கொள்ளும் கேவலம் (இழிவு, முத்தி)தான் இவர்களுக்குப் பலனாகக் கிடைத்தது போலும்! இஃது என்ன வியப்பு?

"முத்திக்கு வேட்டவர் மோட்டுடற் பாரம்,
முடைத் தலையோடு
அத்திக்கும் சாம்பற்கும் ஓம்பினரால்;
இவையன்றி அப்பால்
சித்திப்பது மற்றிலை போலும்;
காசிச் சிவபெருமான்
பத்திக்குக் கேவ லமேபலம்
ஆகப் பலித்ததுவே!

விசுவநாதர் பெருந்தகைமை :

விசுவநாதர் பெரிதும் சிக்கனம் மிக்கவர். அளவில்லாத கோடிக்கணக்கான பிள்ளைகளைப் பெற்றெடுத்துள்ள தமது மனைவியாகிய விசாலாட்சியின்பால் குடும்பம் நடத்துவதற்காக இரண்டு நாழியளவு நெல் மட்டுமே கொடுத்து, அது கொண்டு, 'முப்பத்திரண்டு அறங்களையும் செய்க' என்று கட்டளை யிட்டவர் அவர்! ஆனால் அத்தகைய கடுஞ் சிக்கனக்காரர் ஆகிய விசுவநாதர், கொள்ளை யிடும்படி பலருக்கும் முத்திச் சரக்கறை முழுவதையுமே திறந்து கொடுத்து விடுகின்ற பெருவள்ளலாகக் காசியிற் பிறங்குகின்றார்!

"கொள்ளையிடப் பலர்க்கும் முத்திச்
சரக்கறையைத்
திறந்துகொடுத்து, அனந்த கோடிப்
பிள்ளைகள்பெற் றுடையபெரு மனைக்
கிழத்திக்கே
குடும்பம் பேணுக என்று
உள்ளபடி இருநாழி கொடுத்து, அதில்
எண்ணான்கு
அறமும் ஓம்புக என்றார்!
அள்ளல்வயற் காசி ஆண்டகையார்
பெருந்தகைமை அழகி தாமே!"

காசிக் கலம்பகம் :

காசிக்குச் சென்று அங்கேயே பலகாலும் வதிந்திருந்து, அங்குக் குமரகுருபரசுவாமி மடம் என்னும் அறநிலையம் ஒன்றும் அமைத்துச் செந்தமிழும் சிவநெறியும் வளர்த்தருளிய குமரகுருபரசுவாமிகள், காசி விசாலாட்சி யம்மை சமேத விசுவநாதப் பெருமானை, நாம் அனைவரும் பலகாலும் பணிந்து செய்து கொள்ளத் தகுந்த வேண்டுகோள் ஒன்றினைத் தாம் இயற்றிய காசிக் கலம்பகம் என்னும் நூலிற் குறிப்பிடுகின்றார்!

"கங்கையாறு சூழ்ந்துள்ள காசியம் பதியில் வாழும் விசுவநாதப் பெருமானே! வாதம் பித்தம் சிலேத்துமம் என்னும் மூன்றும் மேலோங்கி நிற்கவும், மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறிகளும் கைவிடவும், உடலை விட்டு எம் உயிர் பிரிய நேரும் காலத்தில், சூரனைத் தடிந்த முருகனும், மதம் பொழியும் இளங்களிறு ஆகிய விநாயகரும் பொறாமை கொள்ளும்படி, எம்மை நின் இடக்கையினால் தழுவி, நின்மடித்தலத்தில் இருக்கும்படி செய்து, ஏழுலகங்களையும் பெற்றெடுத்தும் என்றும் இளங் கன்னியாகவே விளங்கிவரும் விசாலாட்சி அம்மை, தம்முடைய ஆடையின் முன்றானை கொண்டு வீசுவதால் எழும் தென்றற் காற்றானது, எங்களின் மோகமும் தளர்ச்சியும் தாகமும் தணியுமாறு செய்ய, வேத முதற்பொருள் ஆகிய பிரணவமந்திரத்தின் சுவைநிறைந்த அமிழ்தத்தினை எங்கள் செவியில் உணவாக ஊட்டி எங்களை நின்னுடைய குஞ்சிதபாதத்தின் கீழ் என்றும் நிலைபெறுக் குடியிருக்குமாறு செய்தருள்வாயாக!

" கங்கைசூழ் கிடந்த காசி வாஹு !
ஐவளி பித்தெனும் அவைதலை யெடுப்ப
மெய்விட்டு ஐவரும் கைவிடும் ஏல்வையில்,
மாமுதல் தடிந்த காமரு குழவியும்
பொழிமதங் கரையும் மழவிளங் களிறும்
மூண்டெழு மானம் பூண்டு அழுக்கறுப்ப,
இடக்கையின் அணைத்துநின் மடித்தலத்
திருத்தி
உலகம்ஓர் ஏழும் பலமுறை பயந்தும்
முதிரா இளமுலை முற்றிழை மடந்தை,
ஒண்தொடித் தடக்கையின் வீசு நுண்டுகிற்
றேகையிற் பிறந்த நாகிளந் தென்றல்
மோகமும் தளர்ச்சியும் தாகமும் தணிப்ப
மறைமுதற் பொருளின் நிறைசுவை
அமுதினை
அஞ்செவி மடுத்து, உண வூட்டிநின்
குஞ்சித அடிக்கீழ்க் குடியிருத் துகவே "

—காசிக் கலம்பகம்

முடிவுரை:

இங்ஙனம் குமரகுருபரர் போன்ற சான்றோர்கள் பலரும் பரவிப் புகழ்ந்து போற்றும் காசி விசுவநாதர் திருவடிகளைப் பணிந்து வணங்கி, நாமும் ஈடேறி உய்ய, ஒல்லும் வகையால் எல்லாம் முயலுவோமாக !

[சென்னை - தியாகராயநகர் - காசி விசுவநாதர் கோயிலில், வித்துவான் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமையில், மாதாந்தர வழிபாட்டுச் சிறப்புக் கூட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவியது.]

—ஆசிரியர்—

நடைபெற்ற நிகழ்ச்சிகள்
(பிரம்மோற்சவம்)

கல்லங்குறிச்சி	கலியுகவரதராஜப் பெருமாள் கோயில்
திருவிரிஞ்சிபுரம்	மார்க்கபந்தீசுவரர் ,,
பழநி	தண்டாயுதபாணி சுவாமி ,,
சிங்கம்பட்டி	சுப்பிரமணிய சுவாமி கோயில்
திருச்சிராப்பள்ளி	தாயுமான சுவாமி கோயில் (தெப்ப விழா)
நாகப்பட்டினம்	சௌந்தரராஜப் பெருமாள் கோயில்
கண்டியூர்	ஹரசாபவிமோசனப் பெருமாள் கோயில்
சிவகங்கை	விசுவநாத சுவாமி கோயில்
திருமயிலை	கபாலீசுவரர் கோயில்
திருவாரூர்	தியாகராஜ சுவாமி கோயில்
மணவாள நல்லூர்	கொளஞ்சியப்பர் ,,
திருமங்கலம்	குருநாத சுவாமி ,,
பந்தணை நல்லூர்	ஆதிகேசவப் பெருமாள் கோயில்
திருப்பூவணம்	புஷ்பவனேசுவரர், பெருமாள் கோயில்
திருத்தவத்துறை	சப்தரிஷி சுவாமி கோயில்
பூவிருந்தவல்லி	திருக்கச்சிநம்பிகள் பெருவிழா
பொம்மபுரம், மயிலம்	சுப்பிரமணிய சுவாமி கோயில் பெருவிழா

"சிவஞான சித்தியார்"

(அனுமானப் பிரமாணம்)

முன்னுரை :

சிவஞான சித்தியார் **பிரமாண இயல்** பற்றிய முன்னைக் கட்டுரையில், (1) பிரத்தியட்சம் (2) அனுமானம் (3) ஆகமம் (4) அபாவம் (5) அருத்தாபத்தி (6) உபமானம் (7) பாரிசேடம் (8) சம்பவம் (9) ஐதிகம் (10) சுபாவம் என்னும் பத்துவகைப் பிரமாணங்கள் பற்றியும் ஒருவாறு அறிந்தோம்*.

சீத்தலைச் சாத்தனார் :

மேற்கூறிய பத்துவகை அளவைகளையும், மதுரைக் கூலவாணிகன் **சீத்தலைச் சாத்தனார்** தாம் இயற்றியருளிய மணிமேகலையின்கண்,

> "காண்டல் கருதல் உவமம் ஆகமம்
> ஆண்டைய அருத்தா பத்தியோடு, இயல்பு
> ஐதிகம் அபாவம், மீட்சியொழி வறிவு,
> எய்தியுண் டாம்நெறி, என்றிவை தம்மாற்
> பொருளின் உண்மை புலங்கொளல் வேண்டும்"

எனக் குறிப்பிட்டிருத்தல் காணலாம். இவ் அளவைகள் பத்தையும் கொண்டவர் **வேதவியாதர்**, எட்டு அளவைகளை உடன்பட்டவர் **கிருதகோடி**, ஆறு அளவைகளை மட்டுமே தழுவியவர் **ஜைமினி** என்றும் அவர் கூறியருள்கின்றார்.

---

* இப்பத்துவகை அளவைகளும் முறையே ஆங்கிலத்திற் பின்வருமாறு குறிக்கப் பெறும் :

(1)	Perception	(6)	Analogy
(2)	Mediate inference.	(7)	Inference by elimination
(3)	Testimony	(8)	Probability
(4)	Non-perception	(9)	Tradition
(5)	Presumption	(10)	Natural inference.

சிறந்த அளவை :

இப்பத்துவகை அளவைகளுள் அபாவம் **பிரத்யட்சத்திலும்**, அருத்தாபத்தி உபமானம் பாரிசேடம் சம்பவம் சுபாவம் என்னும் ஐந்தும் **அனுமானத்திலும்**, ஐதிகம் **ஆகமத்திலும்** அடங்கும். பிரத்தியட்சம் அனுமானம் ஆகமம் என்னும் மூன்று மட்டுமே, இப் பத்துவகை அளவைகளினுள்ளும் முதன்மையான அளவைகளாகக் கொள்ளப் பெறும். இம் மூன்று அளவைகளினுள்ளும் **அனுமானம்** ஒன்றுமே மிகவும் சிறப்புடையதாக மதிக்கப்பெறும்.

அனுமான இலக்கணம் ;

அனுமானம் என்பதனை வழியளவை எனவும், கருதலளவை எனவும் சிவஞான சுவாமிகள் மொழிபெயர்த்து வழங்குவர். கண்ட பொருளைக் கொண்டு காணாத பொருளைக் கருதியுணர்வது அனுமானம் எனப்படும். எனவே, பிரத்தியட்ச அளவைக்குப் பிறகே அனுமான அளவை நிகழும் என உணரலாம். பொறிகளைக் கொண்டு நேரே அறிதல் பிரத்தியட்சம். அங்ஙனம் இன்றிப் பொறிகளுக்குப் புலனாகாமல் மறைந்து நிற்கும் பொருளை, அதனை விட்டு நீங்காது யாண்டும் உடனாகி நிற்கும் ஏதுவைக் கொண்டு கருதியுணர்தல் அனுமானம்.

> "அனுமானம், அவினா பாவம்
> பேசுறும் ஏதுக் கொண்டு
> மறைபொருள் பெறுவ தாகும்."

என்பது சிவஞான சித்தியார். அஃதாவது, கண்ட புகையுண்மையைக் கொண்டு, புகையானது நெருப்பினைப் பிரிவின்றி அதனோடு உடனாய் நிகழும் தன்மை (அவினாபாவம், Concomitance) உடையதாதலின், யாண்டுப் புகை

யுண்டோ ஆண்டு நெருப்பும் உண்டு எனத் துணிதல்.

இனி, குடத்தையும் அதனை வனையும் குயவனையும் ஓரிடத்து ஒருங்கு கண்டவன், பிறிதோர் இடத்தில் ஒரு குடத்தைக் கண்டு, இதுவும் வனைதற்கு ஒரு குயவனை யுடையது எனக் கருதி யுணர்வதும், இது போல்வன பிறவும் அனுமானம் எனினு மாம்.

அனுமானத்தின் அவசியம்:

உலகாயதர்கள் காட்சியளவை ஒன்றே பிரமாணம் எனக் கொள்வர். அவர்களுக்கு அனுமான அளவை உடன்பாடு அன்று. நாம் நம்முடைய தாய் தந்தையர்களைக் காட்சியளவையால் தெளிய இயலாது. அனுமான அளவை கொண்டு கருதித்தான் உணரமுடியும்.

> "தந்தை தாயரை அனுமானத் தல்லது
> இந்த ஞாலத்து எவ்வகை அறிவாய்?"

என **மணிமேகலை** உலகாயதனை நோக்கி வினவி, அவனுக்கு அனுமான அளவையின் இன்றியமையாமையினை உணர்த்தியதாகச் **சீத்தலைச் சாத்தனார்** பாடியிருத்தல் ஈண்டு உணரற்பாலது.

தந்தை தாயரை இளமையிலேயே இழந்துவிட்ட ஒருவன், தான் தன் தாய் தந்தையரைக் காணுமல் இருந்தும், அறிவு வந்த நிலையில் மற்றவர்களைப் போலவே தனக்கும் தாய் தந்தையர் உண்டு எனக் கருதிபுணர்ந்து கொள்கின்ருன். இஃது அனுமான அளவையைக் கொண்டே யாகும். இடியிடித்தல், மின்னல்கள் தோன்றுதல், மேகங்கள் திரண்டு இருள் கவிந்து கொள்ளுதல் ஆகிய குறிகளைக் கண்டால், நாம் அனைவரும் இனி விரைவில் மழை பெய்யக் கூடும் எனக் கருதியுணர்ந்து கொள்கின்ரேம். மேலும், இன்று ஆற்றில் வெள்ளம் பெருகி வரக் கண்டால், 'நேற்று மேற்கே மலைப்பகுதிகளில் நல்ல மழை பெய்தது' என்று சொல்லுகின்ரேம். இவைகள் போல்வன எல்லாம் அனுமானப் பிரமாணம் பற்றியேயாகும்.

> "உன்ன தாவது கண்டது என்றுரை
> கொண்டதென்? உலகத்துளீ
> பிள்ளை யாய்வளர் கின்ற நாள்உனைப்
> பெற்ற தாயொடு தந்தையைக்
> கள்ள மேபுரி காலன் ஆருயிர்
> உண்ண, இன்ரெரு காளையாய்
> மெள்ள வேஉளர் என்று கொண்டு
> விரும்பு மாறு, விளம்பிடே!"

> "இடித்து மின்னி இருண்டு மேகம்
> எழுந்த போதிது பெய்யும் என்று
> அடுத்த தும், அகில் சந்தம் உந்தி
> அலைத்து வார்புனல் ஆறுகொண்டு
> எடுத்து வந்திட, மால்வ ரைக்கண்
> இருந்து கொண்டல் சொரிந்ததென்று
> முடித்த தும், இவை காட்சி அன்று;
> அனுமானம் என்று மொழிந்திடே!"

எனவரும் சிவஞான சித்தியார் பரபக்கச் செய்யுட்களும், அனுமான அளவையானது அறிவுடையார் அனைவராலும் உடன்படற்பாலது என்பதனை அழகுற வலியுறுத்தும்.

கம்ப நாடர்:

கல்வியிற் பெரியவர் ஆகிய கம்பநாடர், தம்முடைய நூலில் தகுந்த இடம் ஒன்றில், அனுமான அளவை பற்றிய அழகிய கவிதை ஒன்றினைச் சுவைமிகப் பாடுகின்ருர். அநுமான் சீதையைத் தேடிக் கொண்டு இலங்கைக்குச் சென்று, அங்கே சீதையைக் கண்டும், அரக்கருடன் போர் புரிந்தும், இலங்கையினைத் தீக் கொளுவியும் மீள்கின்ருன். வானர சேனைகள் அநுமானைக் கண்டதுமே, அவன் கூருமலே பல செய்திகளைத் தாமே அனுமானத்தாற் கருதி யுணர்ந்து கொண்டனவாம்.

அநுமான் இலங்கையிற் சென்று அங்கே போர்புரிந்தான் என்பதனை, அவன் உடம்பில் இருந்த காயங்களால் வானர சேனைகள் உணர்ந்து கொண்டன. இலங்கையில் நிகழ்ந்த போர்களில் அரக்கர்களை எதிர்த்து நின்று அநுமானே வெற்றி பெற்ருன் என்று, அவன் மீண்டு வந்த செயல்தானே அறிவித்து

தாம். அநுமான் உடலின்மீது படிந்திருந்த புகையினால், அவன் இலங்கைமா நகரினைத் தீக்கொளுவிய செய்தியினை, வானர சேனைகள் தெரிந்து கொண்டன. பகைவர்கள் ஆகிய அரக்கர்கள் எளியரல்லர், மிகவும் வலிமை யுடையவரே என்பது,, அநுமான் சீதைப் பிராட்டியினை அழைத்து வராமையினாலேயே, அவைகள் விளங்கிக் கொண்டனவாம். அதனால், அநுமானை அவைகள் வேறு எதுவும் வினவாமல் 'இனி நாம் மேலே யாது செய்தல் வேண்டும்?' என்று மட்டுமே வினவி நின்றனவாம்!

"பொருதமை புண்ணே சொல்ல,
வென்றமை போந்த தன்மை
உரைசெய, ஊர்தீ இட்டது
ஓங்கிரும் புகையே ஓதக்,
கருதலர் பெருமை தேவி
மீண்டிலாச் செயலே காட்டத்
தெரிதர உணர்ந்தேம்; பின்னர்
என்இனிச் செய்தும்? என்றார்."

எனவரும் கம்பர் பாடல் (சுந். 14, 10), அனுமானப் பிரமாணத்துக்குரிய சுவை மிக்க சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்,

அனுமான வகைகள் :

அனுமானமானது **தன்பொருட்டு** (சுவார்த்தம்) எனவும், **பிறர்பொருட்டு** (பரார்த்தம்) எனவும் இருவகைப்படும். இவற்றைக் கௌதமர், கணாதர் என்னும் மிகப்பழைய தருக்க நூலாசிரியர்கள் குறிப்பிடுகின்றிலர். எனினும் பின்னர்ப் போந்த திக்கநாகர் பிரசத்தபாதர் தருமகீர்த்தி சித்தசேனதிவாகரர் மாணிக்கநந்தி தேவசூரி பாசர்வஞ்ஞர் கங்கேசர் முதலிய ஆசிரியர்கள், இவ் இருவகை அனுமானத்தினையும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

பிரசத்தபாதர் இவற்றை முறையே **சுவநிச்சிதார்த்தம்** என்றும், **பரநிச்சிதார்த்தம்** என்றும் குறிப்பிடுவர். தர்மோத்தரர் இவற்றை ஞானாத்மகம் சப்தாத்மகம் என்றும், சிவாதித்தியர் இவற்றையே அர்த்தருபத்வம் சப்தருபத்வம் என்றும் வழங்குவர். (1)

பக்கம் மூன்று :

தன் பொருட்டு அனுமானம் என்பது, பக்கம் சபக்கம் விபக்கம் என்னும் மூன்றில், சகசம் காரியம் அனுபலத்தி என்னும் மூன்று ஏதுக்களை யுடைய பொருளைப் பார்த்துக் கருதி யுணர்ந்து கொள்வதாகும்.

ஐயுற்றுத் துணியற்பாலதாகிய பொருள் இருக்கும் இடம் **பக்கம்** (மலை). துணியற்பாலதாகிய பொருளுக்கு எடுத்துக் காட்டப்படுவதாய்த் துணியப்பட்ட பொருள் இருக்கும் இடம் **சபக்கம்** (அடுக்களை). துணியற்பாலதாகிய பொருள் இல்லாத இடம் **விபக்கம்** (மடு). இம்மூன்றனுள் **பக்கம் சபக்கம்** என்னும் இரண்டும் பொருள் **உண்டு** என அறிதற்கு இடமாகும், **விபக்கமானது** பொருள் **இல்லை என்று உணர்தற்குரிய இடமாம்.**

மூன்று ஏதுக்கள் :

மூன்றுவகை ஏதுக்களாவன, **சகசம்** காரியம் **அனுபலத்தி** என்பன. **அவற்றுள்**, மா முதலிய சொற்கள் மரம் பெருமை **திருமகள்** வண்டு முதலிய பொருள்களை யுணர்த்துதற்கண் வேறு காரணம் இன்றி, அச் சொற்களின் மாட்டு இயல்பாக உளதாகிய **ஆற்றல் சகச (இயல்பு) ஏது** எனப்படும். புகை முதலிய காரியங்கள் நெருப்பு முதலிய தத்தங் காரணங்களை யுணர்த்துதற்கண், அவை **காரிய ஏது** எனப்படும். குளிரில்லாமை முதலிய செயல்களில்லாமை, பனியில்லாமை முதலிய காரணங்களின் இன்மையை யுணர்த்துதற்கண்ணும் **அனுபலத்தி** (இன்மை) ஏது என வழங்கும்.

இங்ஙனம் உணர்ச்சி மூவகைப் படுதலின், ஏதுவும் மூவகைப்பட்டதாயிற்று, உள்ளதென்னும் உணர்வுக்குப் பொருளாவது உபலத்தி ஏது, இல்லதென்னும் ஏதுவுக்குப் பொருளாவது அனுபலத்தி ஏது. முன்னிலைப் பொருளை இயல்பு ஏதுவும், மறைந்துள்ள பொருளை உபலத்தி என்னும் காரிய ஏதுவும், இல்லாத பொருளை அனுபலத்தி ஏதுவும் உணர்த்தி நிற்கும்.

—தொடரும்

(1)—Dr. S. Radhakrishnan, Indian Philosophy, Vol. II, p. 82.

" எல்லாக் குற்றமும் தீர்ந்த செய்யுள் "

முன்னுரை :

தமிழ்நூற் பயிற்சி ஓரளவாயினும் உடையவர்கள் அனைவரும், **யாப்பருங் கலக் காரிகை** என்னும் இலக்கண நூலைப்பற்றி அறிந்திருப்பர். அகவற்பா வெண்பா கலிப்பா வஞ்சிப்பா என்னும் தமிழ்ச் செய்யுட்களுக்கு உரிய இலக்கணங்களை விளக்குவது இந்நூல்! '**காரிகை** கற்றுக் கவி பாடுதலில் பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்றே' எனவும், 'காடும் செடியும் அன்றோ தமிழ்க் **காரிகை** கற்றதுவே' எனவும் பிறவாறும் வழங்கும் பழமொழிகள், யாப்பருங்கலக்காரிகை என்னும் செய்யுள் இலக்கண நூலின் சிறப்பினையும், தமிழ் மக்களிடையே அது மிகவும் போற்றி மதித்துப் பயிலப் பெற்றுவரும் மாட்சிமையினையும், நன்கினிது உணர்த்தும்.

குணசாகரர் :

இந்நூலினை இயற்றிய ஆசிரியர் **அமித சாகரர்** என்பவராவர். அவர்தம் காலம் கி. பி. 10-ஆம் நூற்றாண்டு; அஃதாவது இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே என்பர். இந்நூலுக்கு உரை எழுதியவர் **குணசாகரர்** என்பவர். இவர் அமிதசாகரரின் மாணவராக, அவர்தம் சம காலத்தவராக வாழ்ந்திருந்தவர் எனக் கொள்ளுதல் கூடும். இக் குணசாகரர், தாம் வரைந்த யாப்பருங்கலக் காரிகை உரையின் இறுதியில், **ஒழிபியல்** என்னும் பகுதியின் முடிவில், செய்யுட்களில் எய்தற்குரியன அல்லாத எழுத்துக் குற்றம், சொற்குற்றம், பொருட்குற்றம், யாப்புக் குற்றம், அலங்காரக் குற்றம், ஆனந்தக் குற்றம் என்பனவற்றைப் பற்றி விளக்குகின்றார். விளக்கிவிட்டு அவைகள் ஒன்றும் இல்லாத சிறந்த பாடல் ஒன்றை மேற்கோள் காட்டுகின்றார்.

" தாமரை புரையும் காமர் சேவடிப்
பவழத் தன்ன மேனித் திகழ்ஒளிக்
குன்றி ஏய்க்கும் உடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேற்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்றால் உலகே "

எனவரும் அழகிய பாடல், எல்லாக் குற்றமும் தீர்ந்த செய்யுட்கு மேற்கோளாகக் குணசாகரரால் எடுத்துக் காட்டப்பெற்றுள்ளது.

முருகன் துதி :

இப்பாடல் **குறுந்தொகை** என்னும் சங்க நூலின் கடவுள் வாழ்த்துப் பாடல் ஆகப், பாரதம் பாடிய **பெருந்தேவனார்** என்னும் பழம்பெரும் புலவராற் பாடப் பெற்றதாகும். இப்பாடல் தமிழ்க் கடவுள் ஆகிய முருகனைப்பற்றிய துதியாக அமைந்திருக்கின்றது. முருகனைப் பற்றிய இத் துதிப்பாடல், சமண சமயத்தைச் சார்ந்தவர் என்று கருதப்படும் முனிவர் ஆகிய குணசாகரரால், எல்லாக் குற்றமும் தீர்ந்த இனிய சிறந்த செய்யுளுக்கு மேற்கோளாக எடுத்துக் காட்டப் பெற்றிருப்பது, இப்பாடலின் இணையற்ற மாட்சிமையினை எழிலுற விளக்கும் சான்றாக அமையும். ஆதலின், இச் சிறந்த பாடலின் பொருள் நலத்தினை, ஈண்டு இயன்ற அளவு ஒரு சிறிது காண்போம்.

பாடலின் பொருள் :

" தாமரை மலரைப் போன்ற அழகிய சிவந்த திருவடிகளையும், பவழத்தை ஒத்த திருமேனியினையும், விளங்குகின்ற ஒளி மிக்க குன்றி மணியைப் போன்ற உடையினையும், கிரவுஞ்சம் ஆகிய மலையினது நடுவிடம் பிளக்கும்படி செலுத்திய அழகிய ஒளி மிகுந்த நீண்ட வேல்"

ஆகிய படையினையும் சேவல் ஆகிய அழகிய கொடியினையும் உடைய முருகப் பெருமான் காப்பாற்றுவதனால், இவ்வுலக மானது இன்ப மயமான நாட்களை எய்தி வருகின்றது. ஆதலின் உயிர்களுக்கு இடையூறு இல்லை.

முருகப் பெருமானின் இத்தகைய திருவுருவத்தினைத் தியானம் செய்க ; செய்யின் எல்லா நலமும் எய்தலாம் என்பது கருத்து.

(1) இப்பாடல் நம்மனோர் பலகாலும் எண்ணிச் சுவைத்து மகிழ்தற்கு ஏற்ற வகையில் மிகவும் சுருக்கமாக, எளிய இனிய சொற்களால் இயன்றிருப்பது, வியந்து மகிழ்தற்குரியது. முருகனுக்கும் ஆறு என்னும் எண்ணுக்கும் மிகுந்த தொடர்பு உண்டு. முருகனின் சிறந்த தலங்கள் ஆறு ; முகங்கள் ஆறு ; மந்திர எழுத்துக்களும் ஆறு. ஆதலின் இப்பாடலும் ஆறு வரிகளில் அமைந்திருப்பது, ஒரு பொருத்தமாகக் காணப்படுகின்றது.

(2) மேலும், இப்பாடலின்கண் முருகனுடைய திருவடி, நிறம், ஒளி, ஆடை, வேல், சேவற்கொடி என்னும் ஆறு பொருள்களைப்பற்றியே, ஆசிரியர் குறிப்பிட்டுப் புனைந்துரைத்திருத்தலும், கருதற்பாலதாக உள்ளது.

(3) முருகனின் சிவந்த நிறமும், அழகிய தோற்றமும், மணமுடைமை முதலிய தெய்வத் தன்மைகளும், சரவணப் பூம்பொய்கையில் பதுமப் பாயலில் அப்பெருமான் தோன்றியருளிய சிறப்பும், நினைத்தொறும் நமக்குத் தாமரை மலரின் நினைவே, முதற்கண் முந்துற்றுக் கிளர்தலின், அவ்வியல்புக்கு ஏற்ப இப்பாடலும் **தாமரை** எனத் தொடங்குதல் தகுதிப்பாடு மிக்கதாகத் திகழ்கின்றது. 'தாமரை' என்பது ஒரு **மங்கலமொழி** யாதலும் ஈண்டு நாம் மனங்கொள்ளத் தக்கது.

(4) தாமரைமலர் முருகனின் திருமுகம் முதலிய பிற உறுப்புக்களுக்கும் ஒப்புமை யுடையதாயினும், முருகனின் திருவடியையே முதற்கண் நினைவுகூர்ந்து, அதற்கு உவமையாக உரைக்கப் பெற்றது. கடவுளரைப் பாடுங்கால், அவர்தம் திருவடிகளை நினைவுகூர்வதே கவிஞர்களின் இயல்பான பண்பு. இதனைத் திருவள்ளுவர் முதலாகிய எல்லாச் சான்றோர் பாடல்களிலும் காணலாம். கடவுளைக் காட்டிலும், அவர்தம் திருவடிகளே மிகவும் சிறந்தவை என்று கொண்டு, சான்றோர் அனைவரும் பாடுதலின், இப்பாடலிலும் அம்மரபு செவ்விதின் அமைந்தது.

(5) குறுந்தொகை என்னும் சங்க நூல், நானிலத்து ஐந்திணை ஒழுக்கமும் பற்றி நுதலி எழுந்ததாகலின், அப்பொருளையே இப்பாடல் கருக்கொண்டு திகழ்கின்றது. 'தாமரை புரையும் காமர் சேவடி' என்றதனால் மருதநிலத்தின் கருப்பொருள் ஆகிய **தாமரையும்**, 'பவழத்தன்ன மேனி' என்றதனால் நெய்தல் நிலத்துக் கருப்பொருள் ஆகிய **பவழமும்**, 'குன்றி ஏய்க்கும் உடுக்கை' என்றதனால் முல்லைக்கு உரியதாகக் கருதப்பெறும் **குன்றிமணிக்** கொடியும், 'குன்றின் நெஞ்சுபக' என்றதனால் குறிஞ்சிக்குரிய மலையும், ஆக நானிலமும் குறிக்கப்பட்டன.

(6) பாலைக்கெனத் தனியே நிலம் இல்லாமையாலும், முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்தே பாலை என்று படிவம் கொள்ளும் ஆதலாலும், அம்முறையில் குறிப்பாகப் பாலைநிலமும் ஈண்டு உணர்த்தப்பட்டது. முல்லைக்குரிய குன்றியையும் குறிஞ்சிக்குரிய குன்றையும் ஒரே வரியில் இயையுமாறு வைத்ததனால், பாலை நிலம் சுட்டப்பெற்றது எனக்கொள்ளலாம்.

(7) மருதம் நெய்தல் முல்லை ஆகிய ஏனை நிலங்களைக் கருப்பொருள்களாலும், குறிஞ்சியை மலையாகிய முதற்பொருளாலும் சுட்டியமை, 'சேயோன் மேய மைவரை யுலகம்' எனப்படும் குறிஞ்சி நில வுரிமை முருகனுக்கே யுரியதாதலை யுணர்த்துதற்கு ஆகும்.

(8) முருகன் இளமையும் அழகும் வீரமும் உடையவன். ஆதலின் 'தாமரை புரையும் காமர் சேவடி' என்று **இளமையினையும்**, 'பவழத் தன்ன மேனித் திகழ் ஒளி' என்று **அழகினையும்**, 'குன்றின் நெஞ்சுபக எறிந்த' என்று **வீரத்தினையும்** ஆசிரியர் விதந்தெடுத்துப் புகழ்ந்தார்.

(9) மேலும் தம்நிகர் இல்லாத தலைவர்க்கு அளியும் தெறலும் என்னும் இரண்டு குணங்கள் இன்றியமையாதன. முருகன் தன்நிகர் இல்லாத தனிப்பெருந் தலைவன். ஆதலின் அப்பெருமானுக்கும் இவ்விருகுணங்களும் உண்டு. எனவே 'சேவலங் கொடியோன் காப்ப' என்றதனால் **அளியும்**, 'குன்றின் நெஞ்சுபக' என்றதனால் **தெறலும்** சுட்டப் பெற்றன.

(10) இப்பாடலில் மருதநிலத்துக் கருப்பொருள் (தாமரை) முதலினும், குறிஞ்சி நிலத்து முதற்பொருள் (மலை) ஈற்றிலும் அமைந்ததனால், முறையே அவற்றிற்குரிய ஊடலும் கூடலும் ஆகிய உரிப்பொருள்கள் "ஊடுதல் காமத்திற் இன்பம், அதற்கின்பம் கூடி முயங்கப் பெறின்" என்னும் முதுமொழியின்படி நிகழும் இன்பத்தின் இயல்பு உணர்த்திய வாறுயிற்று.

(11) 'சேவலங் கொடியோன்' என்பது சேவலையேயன்றி, மயிலையும் உணர்த்தியதாகக் கொள்ளலாம். முருகனுக்கு **மயிற்கொடியும்** உண்டு என்பது, 'பல் பொறி **மஞ்ஞை** வெல்கொடி அகவ' எனவரும் திருமுருகாற்றுப்படை வரியால் (122) உணரலாம். ஆண்மயிலுக்குச் சேவல் எனப் பெயர் வழங்குதல் மரபு அன்று ஆயினும்,

> "சேவற் பெயர்க்கொடை
> சிறகொடு சிவணும்
>
> மாயிருந் தூவி
> மயிலலங் கடையே"

எனவரும் தொல்காப்பிய நூற்பாவின் உரையில், '**செவ்வேள்** ஊர்ந்த மயிலுக்காயின் அதுவும் நேரப்படும்' எனவரும் **பேராசிரியர்** விளக்கத்தினால், ஈண்டுச் 'சேவலங் கொடியோன்' என்புழிச் சேவல் **மயிலைக்** குறிப்பதாகக் கொள்ளுதலும் பொருந்தும்.

முடிவுரை :

இங்ஙனம் பற்பல நுண்பொருள்கள் பொருந்திய இச் சிறந்த இனிய செய்யுள், **குணசாகரர்** குறிப்பிட்டு வியந்தவாறு, எல்லாக் குற்றமும் தீர்ந்த சிறந்த நல்ல செய்யுளே என்பதில் ஐயமில்லை. இச் செய்யுளைக் கொண்டு முருகனைப் பலகாலும் துதித்துத் தியானித்து, முருகன் அருளைப்பெற்று உய்ய முயலுவோமாக !

—ஆசிரியர்.

(செய்திச் சுருக்கம்)

சிவராத்திரி விழா : காஞ்சிபுரம் ஸ்ரீ கயிலாசநாதர் கோயிலில் இலட்சார்ச்சனை, இலட்ச தீபங்களுடன் சிறப்புற நடைபெற்றது. ஸ்ரீ இராமநாத கோயங்கா அவர்களின் உபயமாக விசேஷ அபிஷேகம் நிகழ்ந்தது. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் புதுப் பெரியவாள் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் எழுந்தருளி, அனைவர்க்கும் ஆசியுரை வழங்கினார்கள். இரவு முழுவதும் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன, பல்லாயிரக் கணக்கான மக்கள் விழாவிற் கலந்து கொண்டு மகிழ்ந்தனர். (1.3.65)

பஞ்சாக்கரத் திருப்பதிகம்

திருஞான சம்பந்தர் சீர்காழியில் தமது மூன்றும் அகவையில் இறைவன் திருவருள் பெற்ருர். பின்னர்த் திருக்கோலக்கா, திருநனிபள்ளி, திருச்சாய்க்காடு, திருவெண்காடு, தில்லை, திருவேட்களம், திருமுதுகுன்றம், திருநெல்வாயில் அரத்துறை முதலிய தலங்களுக்கெல்லாம் சென்று, இறைவனைத் தொழுது பாடி மகிழ்ந்து வந்தார். அப்போது அவருக்கு **உபநயனப் பருவம்** வந்து எய்தியது. சிவபாத இருதயர் ஆகிய அவர் தம் தந்தையார் விரும்பியபடி, வைதிக அந்தணர்கள் திருஞான சம்பந்தர்க்கு உபநயனச் சடங்குகளை முறைப்படி செய்தார்கள். செய்து, 'இனி நினக்கு மறை நான்கும் பயிலும் தகுதியையும் உரிமையையும் யாம் தந்தோம்' என்று வேத மந்திரங்களைக் கூறி நின்ருர்கள்.

இங்ஙனம், ஒரு பிறப்பும் எய்தாத நிலையுற்ற தமக்கு, உலகியல்பின் உபநயன முறைமையாகும் இரு பிறப்பின் நிலைமையினைச் சடங்கு காட்டி எய்துவித்த அவ்வந்தணர்களை, நோக்கினுர் திருஞானசம்பந்தர்! அவர்கள்பால் மிக்க தண்ணளி கொண்டார்! தமக்கு வேதம் பயிற்றத் தலைப்பட்ட அவர்களுக்குத் தாமே எண்ணிறந்த புனித வேதங்களைப் பொருவிறப்ப ஓதினுர். அவர்கள் மிகவும் அதிசயம் அடைந்தனர். திருஞானசம்பந்தரைத் தம் கண்முன் வந்த **தியானப் பொருள்** என்றே தெளிந்து, பணிந்து வணங்கினர். தாம் கற்று வல்லமை பெற்றிருந்த வேதங்களில், தமக்கு நேர்ந்த ஐயங்களைப்பற்றியெல்லாம் வினவி, விடையறிந்து கொண்டு, ஐயங்கள் நீங்கித் தெளிவு அடைந்து உய்தி பெற்றனர்.

திருஞானசம்பந்தர் அவ்வந்தணர்கள் எல்லோருக்கும் மந்திரங்கள் ஆனவெலாம் அருளிச் செய்தார். வைதிக நூற் சடங்கின் வந்த சிந்தை மயக்குறும் ஐயமெல்லாம் தெளிவித்தார். அவர்களுக்கு மெய்யுணர்வு விளங்கும் வண்ணம், எல்லா மந்திரங்களுக்கும் முதலாகும் மூல மந்திரம் திருவைந்தெழுத்தே என்பதனை வற்புறுத்தி, 'அந்தியுள் மந்திரம் **அஞ்செழுத்துமே**'' என்று அருளிச் செய்தார். அப்பொழுது திருஞானசம்பந்தர் திருவாய் மலர்ந்தருளிய திருப்பதிகமே, **பஞ்சாக்கரத் திருப்பதிகம்** எனப் போற்றிப் புகழ்ந்து வழங்கப் பெறும். அப் பதிகத்தின் பொருளை ஈண்டு இயன்றவரையிற் காண்போம்!

துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்றுஅடி வாழ்த்த வந்தகூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செ ழுத்துமே.

(பொழிப்புரை) மார்க்கண்டேயன் கரவு ஒழிந்து உண்மையன்பு கொண்டு திருவடியைப் போற்றி வழிபட, எதிர்த்து வந்த கூற்றுவனும் அஞ்சும்படி உதைத்துக் காப்பாற்றியவை திருவைந்தெழுத்துக்களே யாகும். ஆதலால் உறங்கும் பொழுதும், உறங்காதபொழுதும், மனங்கசிந்து நாள்தோறும் அத்திருவைந்தெழுத்தைத் தியானித்து வழிபடுவீர்களாக!

[**துஞ்சல்**-உறங்குதல். **நைந்து**-உருகி. **கூற்று**-இயமன்] **(1)**

மந்திரம் நான்மறை ஆகி வானவர்
சிந்தையுள் நின்றுஅவர் தம்மை ஆள்வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே

(பொழிப்புரை) மந்திரங்களும் நான்கு வேதங்களும் ஆக விளங்கி,

தேவர்களின் உள்ளத்தில் நிலைபெற்று, அவர்களை ஆட்கொண்டருளும் மாட்சிமையுடையன; செவ்விய வேள்வித் தீயினைப் பாதுகாத்து வளர்க்கின்ற சிறந்த அந்தணர்களுக்கு மாலைக் காலத்தில் செபிக்கப்படும் மந்திரங்களாக விளங்குவன, திருவைந்தெழுத்துக்களே யாகும். [அந்தி-மாலைக்காலம்] (2)

ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞான விளக்கினை ஏற்றி நன்புலத்து
ஏனை வழிதிறந்து ஏத்து வார்க்குஇடர்
ஆன கெடுப்பன அஞ்செ ழுத்துமே

(பொழிப்புரை) உடம்பிற்குள் மூச்சினை அடக்கி, மிகுந்த ஒளியையுடைய ஞானம் ஆகிய விளக்கினை ஏற்றிவைத்து, நல்ல இடத்தில் மற்றைய வழியாகிய சுழுமுனையைத் திறக்கும்படி செய்து வழிபடுபவர்களுக்கு, பிறவித் துன்பம் ஆவன வற்றையெல்லாம் அழித்துப் பெருநலம் விளைவிப்பன, திருவைந்தெழுத்துக்களே யாகும்.

[ஊன்-உடம்பு. உயிர்ப்பு-மூச்சு. ஏனை வழி-சுழுமுனை.] (3)

நல்லவர் தீயர் எனாது நச்சினர்
செல்லல் கெடச்சிவ முத்தி காட்டுவ
கொல்ல நமன்தமர் கொண்டு போம்இடத்து
அல்லல் கெடுப்பன அஞ்செ ழுத்துமே

(பொழிப்புரை) நல்லவர்கள் என்றும் தீயவர்கள் என்றும் பாகுபாடு செய்து பாராமல், விரும்பி வழிபடுபவர் யாவராயினும் அவர்களின் துன்பங்கள் எல்லாம் கெடும்படி செய்து, சிவபிரானோடு இரண்டறக் கலக்கும் வீடுபேற்றைக் கொடுப்பன; இயமனின் தூதுவர்கள் நம்மைக் கொல்லுவதற்காகக் கொண்டு போகும் சமயத்தில், அவர்களால் விளையும் துன்பங்களை ஒழிப்பன, திருவைந்தெழுத்துக்களேயாகும்.

[எனாது-என்று சொல்லாமல். நச்சினர்-விரும்பியவர்கள். செல்லல்-பிறவித் துன்பங்கள், அல்லல் - இறப்புத் துன்பம்.] (4)

கொங்கலர் வன்மதன் வாளி ஐந்துஅகத்து
அங்குள பூதமும் அஞ்சு, அவ் ஐம்பொழில்
தங்குஅர வின்படம் அஞ்சும் தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செ ழுத்துமே

(பொழிப்புரை) வல்லமை வாய்ந்த மன்மதனின் அந்த ஐவகைத் திணைக்கும் உரிய மணம் கமழ்கின்ற பூக்கள் ஆகிய அம்புகளும் ஐந்து; உடம்பின் உள்ளே அமைந்த தன் மாத்திரைகளும் ஐந்து; இறைவனது திருமேனியில் தங்குகின்ற பாம்பினது படம் பொருந்திய தலைகளும் ஐந்து; இறைவனுடைய அழகிய திருக்கையிலுள்ள விரல்களும் ஐந்து; அவனது திருப்பெயர் ஆகிய மந்திரத்தின் எழுத்துக்களும் ஐந்தேயாகும்.

[கொங்கு - மணம். வாளி - அம்பு. பொழில் - திணை.] (5)

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த்து எய்தும் போழ்தினும்
அம்மை யினும்துணை அஞ்செ ழுத்துமே

(பொழிப்புரை) தும்மல் இருமல் முதலிய நோய்கள் இடையீடின்றி வந்த பொழுதும், கொடுமை மிக்க நரகத் துன்பம் ஏற்பட்டபொழுதும், இப்பிறப்பில் வருவனவாகிய பிராரத்த கன்மங்கள் மேலிட்டு வந்து வருத்தும் பொழுதும், மறு பிறப்பு நேரும்பொழுதும் துணையாக அமைந்து காப்பாற்றுவன, திருவைந்தெழுத்துக்களேயாகும். (6)

[அம்மை - மறு பிறப்பு]

வீடு பிறப்பை அறுத்து மெச்சினர்
பீடை கெடுப்பன பின்னை நாள்தொறும்
மாடு கொடுப்பன மன்னும் மாநடம்
ஆடி உகப்பன அஞ்செ ழுத்துமே

(பொழிப்புரை) புகழ்ந்து துதிப்பவர்களுடைய இறப்பையும் பிறப்பையும் நீக்கி, துன்பங்களைப் போக்குவனவும், மேலும் நாள்தோறும் செல்வத்தைக் கொடுத்து உதவுவனவும், நிலைபெற்ற சிறந்த திரு

நடனத்தைச் செய்யும் சிவபிரான் விரும்புவனவும், திருவைந் தெழுத்துக்களே யாகும்.

[**வீடு** - இங்கு இறப்புக் குறித்து நின்றது. **பீடை** - துன்பம். **மாடு**-செல்வம், **நடம் ஆடி**-சிவபெருமான்]. (7)

வண்டுஅமர் ஓதி மடந்தை பேணின
பண்டை இராவணன் பாடி உய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்அவர்க்கு
அண்டம் அளிப்பன அஞ்செ ழுத்துமே

(பொழிப்புரை) வண்டுகள் விரும்புகின்ற கூந்தலையுடைய உமாதேவியார் விரும்பி வழிபட்டனவும், முற்காலத்தில் இராவணன் இசை பாடி உய்தற்கு ஏதுவாக இருந்தனவும், அடியவர்கள் உறுதிப் பொருளாகக் கொண்டு துதித்தால் அவர்களுக்கு வீடுபேற் றுலகத்தைக் கொடுத்து உதவுவனவும், திருவைந் தெழுத்துக்களேயாகும்.

[**அமர்தல்**-விரும்புதல். **ஓதி** - கூந்தல். **மடந்தை** - உமாதேவியார். **அண்டம்** - வீட்டுலகம்.] (8)

கார்வணன் நான்முகன் காணு தற்கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாள்தொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்கு
ஆர்வணம் ஆவன அஞ்செ ழுத்துமே

(பொழிப்புரை) கரிய நிறமுடைய திருமாலும், நான்கு முகங்களையுடைய பிரமனும் காண்பதற்கு இயலாத, சிறப்பு வாய்ந்த அழகிய திருவடியைச் செவ்வியறிந்து, நாள்தோறும் பல பெயர்களால் புகழ்ந்து இடைவிடாது சொல்லிக் கொண்டேயிருக்கும் அடியவர்களுக்கு, இன்பம் நுகர்விக்கும் தன்மையுடையனவாகத் திகழ்வன, திருவைந்தெழுத்துக் களேயாகும்.

[**ஆர்வணம்** - இன்பம் நுகர்விக்கும் தன்மை. **செவ்வி**-அழகு, சமயம்]. (9)

புத்தர் சமண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறுஅணி வார்வினைப் பகைக்கு
அத்திரம் ஆவன அஞ்செ ழுத்துமே

(பொழிப்புரை) புத்தர்களும், சமணர்கள் ஆகிய கழுக்கையர்களும் கூறுகின்ற பொய்யான கொள்கைகளை ஏற்றுக் கொள்ளாத உள்ளத்தையுடைய சிவனடியார்கள், ஐயம் திரிபு அறியாமைகள் இன்றித் தெளிவு பெற்று உண்மை என்று ஆராய்ந்து கண்டனவும், ஞானத்தை விளைவிக்கும் திருநீற்றை அணிந்து கொள்பவர்களின் தீவினை ஆகிய பகையினை அழிப்பதற்குப் படைபோல விளங்குவனவும் திருவைந்தெழுத்துக்களேயாகும்.

[**கழுக்கையர்** - சமணர்களுக்கு மற்றொரு பெயர். தம் சமய நிலைக்கும் கொள்கைக்கும் ஊறு நேரின், தம்முடைய உயிரை மாய்த்துக்கொள்ளும் கருத்துடன், கையில் கழுவை ஏந்தியவர் 'கழுக்கையர்' எனப்படுவர். கழுகின் இறகையினைக் கையில் வைத்திருப்பவர்கள் என்றும் சிலர் கூறுவர். வித்தகம் - ஞானம். அத்திரம் - படை, அம்பு. திருஞானசம்பந்தர் **திருத்தெளிச்சேரிக்**குச் சென்ற பொழுது, அங்கிருந்த புத்தர்கள் கலகம் விளைக்க முற்பட்டனர். அந்நிலையில் திருப்பதிகம் எழுதும் தொண்டு பூண்ட **சம்பந்தசரணாலயர்** என்பவர் இப்பாடலை ஓதிப் புத்த நந்தி என்பவன் தலையில் இடிவிழச் செய்தனர் என்பது வரலாறு. 'நீறணிவார் வினைப்பகைக்கு **அத்திரம்** ஆவன' என இப்பாடலில் வரும் குறிப்பு, ஈண்டு உணரற்பாலது] (10)

நற்றமிழ் ஞானசம் பந்தன் நான்மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றமில் மாலைஈ ரைந்தும் அஞ்செழுத்து
உற்றன வல்லவர் உம்பர் ஆவரே

(பொழிப்புரை) நன்மை பயக்கும் திருநெறித் தமிழ் வல்ல ஞானசம்பந்தனும், நான்கு வேதங்களையும் ஓதாதே கற்றுணர்ந்தவனும், சீர்காழியில் உள்ள மக்களுக்கெல்லாம் தலைவனும் ஆகிய யான், கருதி அருளிச் செய்த முடிவில்லாத சொல் மாலையாகிய இந்தப் பத்துப் பாடல்களும் திருவைந்தெழுத்துக்களின் பெருமை பொருந்தி நிற்பனவாகும். இவற்றைக் கற்று முறையாக ஓத வல்லவர்கள் தேவர்களாக ஆவார்கள். (11)

[**அற்றம்**-முடிவு. **உம்பர்**-தேவர்கள்.]

— தொடரும்

திருப்புகழ் அமிழ்தம்

பக்கரை விசித்ரமணி பொற்கலணை இட்டநடை
பக்ஷியெனும் உக்ர துரகமும், நீபப்

பக்குவ மலர்த்தொடையும் அக்குவடு பட்டொழிய
பட்டுருவ விட்டருள் கை வடிவேலும்

திக்கது மதிக்கவரு குக்குடமும் ரக்ஷைதரு
சிற்றடியும் முற்றிய பன்னிரு தோளும்

செய்ப்பதியும் வைத்துயர் திருப்புகழ் விருப்பமொடு
செப்பென எனக்கருள்கை மறவேனே!

இக்கவரை நற்கனிகள் சர்க்கரை பருப்புடன்நெய்
எட்பொரி அவல் துவரை இளநீர், வண்டு

எச்சில், பயறு அப்பவகை பச்சரிசி பிட்டு, வெள்
அரிப்பழம், இடிப்பலவகை தனிமூலம்

மிக்கஅடி சில், கடலை பக்ஷணம் எனக்கொள்ஒரு
விக்கிர சமர்த்தன்எனும் அருளாழி

வெற்ப! குடி லச்சடில! விற்பரமர் அப்பர்அருள்
வித்தக மருப்புடைய பெருமாளே!

(பொழிப்புரை) அங்கவடி, அழகிய மணி, பொன் நிறம் வாய்ந்த சேணம் ஆகியவைகளைப் பூண்டு, நடக்கும் பறவை எனத் தகுந்த வேகம் மிக்க **மயில்** ஆகிய குதிரையையும், கடம்ப மரத்தின் தக்க மலர் மாலையையும், அந்தக் கிரவுஞ்சமலை அழிந்து ஒழியும்படி அதன்மேற் பட்டு ஊடுருவிச் செல்லும் வண்ணம் ஏவிய திருக்கையில் உள்ள கூரிய **வேலையும்,** திக்குகள் எல்லாம் மதிக்கும்படி எழுந்துள்ள **சேவலையும்,** காத்தளிக்கும் சிறிய திருவடிகளையும், திரண்டுள்ள பன்னிரண்டு தோள்களையும், **வயலூரையும்** அமைத்து வைத்து உயர்ந்த திருப்புகழ்ப் பாடல்களை விருப்பத்துடன் பாடுக என்று எளியேனுக்கு அருள் செய்ததை யான் என்றும் மறக்க மாட்டேன்!

கரும்பு அவரை நல்ல பழங்கள் சர்க்கரை பருப்பு ஆகியவற்றுடன், நெய், எள், பொரி, அவல், துவரை, இளநீர், வண்டுகளின் எச்சில் ஆகிய தேன், பயறு அப்ப வகைகள், பச்சரிசி பிட்டு, வெள்ளரிப்பழம், தினை முதலிய பல வகையான மாவுணவுகள், ஒப்பற்ற இனிய கிழங்குகள், மற்றும் சிறந்த உணவுப் பொருள்கள், கடலை இவைகளையெல்லாம் உண் பொருள்களாகக் கொள்ளுகின்ற **விக்கின சமர்த்தர்** என்னும் அருட் கடலே!

குணமலையே! வளைந்த உடையையும், மேருமலை ஆகிய வில்லையும் உடைய தலை வரும், சிவபெருமானும் ஆகிய தந்தை யார் மைந்தராகப் பெற்றெடுத்த வித்த கரே! யானையாகி விளங்கித் தந்தத்தை யுடைய பெருமானே!

[பக்கரை-அங்கவடி (stirrups). **விசித்ரம்** - மிக்க அழகு. **கலணை** - கல்லணை, குதிரைச் சேணம் (Saddle). **பக்ஷி**-மயில். **உக்ர துரகம்** - வேகம் மிகுந்த குதிரை. **நீபம்** - கடப்ப மரம். **தொடை** - மாலை. **குவடு**-சிகரம், மலை. வடிவேல்-கூர்மை யான வேல். **குக்குடம்**-கோழி. **ரக்ஷை**-பாதுகாப்பு. **செய்ப்பதி** - வயலூர் என் னும் தலம். **இக்கு**-கரும்பு. வண்டெச்சில் - **தேன்**. இடிப்பல்வகை - பலவகை யான, இடித்தமா. **மூலம்** - கிழங்கு. அடிசில் - உணவு. பக்ஷணம் - **உண்** பொருள், **தின்**பண்டம், விக்கின சமர்த்தர்-விநாயகர், வழிபடும் அன்பர்களுக்கு இடையூற்றை நீக்குதலிலும், வழிபடாத தீயவர்களுக்கு இடையூற்றை உண்டாக்குதலிலும் வல்லவர். விக்கினம் - இடையூறு, துன்பம், சமர்த்தர் - வல்லவர், சாமர்த்தியம் வாய்ந்தவர், ஆழி - ஆழமுடைய கடல். **குடிலச் சடிலம்**-வளைந்த சடைமுடி. பரமர்-மேலானவர். அப்பர்-தகப்பனார். வித்தகம் - ஞான வடிவம். மருப்பு-தந்தம். **பெருமாள்**-பெருமையை ஆள்பவன்.]

— தொடரும்

நம்மாழ்வார், ஆழ்வார்திருநகரி.

திருச்சந்த விருத்தம்

(முன் இதழ்த் தொடர்ச்சி: பக்கம், 273)

புள்ள தாகி வேதம் நான்கும்
ஓதினாய் அதன்றியும்
புள்ளின் வாய் பிளந்து புட்கொடிப்
பிடித்த பின்னரும்
புள்ளை ஊர்தி ஆதலால் அதென்கொல்?
மின்கொள் நேமியாய்
புள்ளின் மெய்ப்ப கைக்கடல் கிடத்தல்
காத லித்ததே.

(பொழிப்புரை) ஒளிபொருந்திய திருவாழியை யுடைய பெருமானே! அன்னப் பறவையின் வடிவங்கொண்டு நான்கு வேதங்களையும் அருளிச் செய்தாய். அதுவும் அல்லாமல், உன்னை விழுங்குவதற்காகப் பறவையின் வடிவில் வந்த **பகன்** என்னும் அசுரனுடைய வாயைக் கிழித்தாய். பறவையாகிய கருடனைக் கொடியாகப் பிடித்திருக்கின்றாய். மேலும் அக் கருடனையே ஊர்தியாகவும் கொண்டு இருக்கின்றாய். இங்ஙனம் உலகுயிர்களைக் காப்பாற்றியருளும் பொருட்டுப் பல அருளிச் செயல்களைச் செய்து கொண்டிருக்கின்ற நீ, திருப்பாற் கடலிலே கருட இனத்திற்குப் பகை என்று கூறும்படியான, பாம்பாகிய திருவனந்தாழ்வான் திருமேனியிற் பள்ளி கொள்ளுதலை விரும்பி நின்ற அந்தச் செயல், என்ன காரணம் பற்றியோ?

(குறிப்புரை) புள் - பறவை. எம்பெருமான் திருப்பாற் கடலிற் பள்ளி கொண்டிருத்தல் உலகுயிர்களைக் காத்தருளும் பொருட்டேயாம் என்பது கருத்து. புள்ளதாகி வேதம் நான்கும் ஓதி, உலகுயிர்களுக்குப் பிரமாண நூலைக் கொடுத்தான். புள்ளின் வாய் பிளந்து, தன்னையே அளித்தான். துன்பமுற்றோர் அனைவரும் தன் பக்கலிலே வந்து நலம் பெறும் பொருட்டே, பெருமான் கருடன் ஆகிய கொடியைப் பிடித்திருக்கின்றான். மேலும் அடியார்கள் துன்பமுறும் இடங்களுக்கெல்லாம் விரைந்து சென்று உதவுதற்கே, கருடனை ஊர்தியாகவும் கொண்டுள்ளான். 'புட்கொடி **பிடித்தி**' என்றும் பாடம். கருடனுக்கும் அனந்தனுக்கும் உண்மையிற் பகை ஏதுமில்லை. 'பாம்புக்கும் கருடனுக்கும் பகை' என்பது உலக மக்களின் பொதுவான வழக்கு. 'கடலில் புள்ளின் பகை மெய்க் கிடத்தல் காதலித்தது என்கொல்?' என்று அந்வயம் கொள்க. *(19)*

கூசம் ஒன்றும் இன்றி மாசுணம்
படுத்து வேலைநீர்
பேச நின்ற தேவர் வந்து
பாட முன் கிடந்ததும்,
பாசம் நின்ற நீரில் வாழும்
ஆமையான கேசவா
ஏச அன்று நீ கிடந்த வாறு
கூறு தேறவே

(பொழிப்புரை) முற்காலம் தொட்டுக் கடல் நீரிலே கூசம் ஒரு சிறிதும் இல்லாமல் திருவனந்தாழ்வானைப் படுக்கையாக விரித்து, நின்னைத் துதிப்பதற்கென்றே அமைந்த பிரமன் முதலான தேவர்கள் நின் பக்கல் வந்து பாடிக் கொண்டிருக்கும்படி பள்ளிகொண்டு இருந்ததையும், அன்றொரு காலத்தில் தேவர்களுக்காகக் கடலைக் கடைந்தபொழுது, அக் கடல் நீரிலே வாழ்கின்ற ஆமையின் வடிவத்தைக் கொண்ட கேசவனே என்று, அறிவில்லாதவர்கள் இகழும்படி நீ கிடந்ததையும், அடியேன் நன்கு தெரிந்து கொள்ளும்படி எனக்கு விளக்கி அருளிச் செய்வாயாக!

(குறிப்புரை) இறைவன் திருப்பாற் கடலிற் கண்வளர்ந்தருளும் தன்மை, நீர்மைக்கு எல்லைநிலம். தேவர்களுக்காகக் கடல் கடைந்தபொழுது ஆமையாக வடிவம் கொண்ட நீர்மை, மேன்மைக்கு எல்லை நிலம். இறைவன்பாற் பரத்துவம் தோன்றுமிடத்தில் எளிமையும், எளிமை தோன்றுமிடத்துப் பரத்துவமும் கண்டு மகிழ்வது இவ்வாழ்வார்க்கு இயல்பு. பெருமானின் எல்லா அவதாரங்களிலும் எளிமையும் தலைமையும் ஆகிய இரண்டும் ஒன்றுக்கொன்று குறையாமல் மேம்பட்டே நிற்கும் என்பது கருத்து. 'பாசம்நின்ற நீர்' - கடல். கடலுக்குத் தலைவன் வருணன். அவனுக்குரிய படை பாசம், ஆதலின் கடலைப் 'பாசம் நின்ற நீர்' என்றார். பாசத்தையுடையவன் பாசன். ஆதலின் '**பாசன்** நின்ற நீர்' என்றும் ஒரு பாடம் உண்டு. பாசம் - ஆசை. எனவே 'பரமபதத்தைக் காட்டிலும் பெருமானுக்கு விருப்பம் நிலைபெற்ற திருப்பாற்கடல்' என்றும் பொருள் கொள்ளலாம். (20)

அரங்கனே தரங்கநீர் கலங்க
அன்று குன்றுசூழ்
மரங்கள் தேய மாநிலம் குலுங்க
மாசுணம் சுலாய்
நெருங்கநீ கடைந்த போது நின்ற
சூரர் என்செய்தார்?
குரங்கை ஆள் உகந்த எந்தை
கூறு தேற வேறு இதே!

(பொழிப்புரை) வானரப் படைகளை ஆட்கொள்ளுதலை விரும்பிய எங்கள் தந்தையே! திருவரங்கப் பெருமானே! முன்னொரு காலத்தில் அலைகளையுடைய கடலானது கலங்கும்படியும், மந்தர மலையைச் சூழ்ந்திருந்த மரங்களெல்லாம் தேயும்படியும், இப் பெரிய உலகமானது அசைந்து குலுங்கும்படியும், **வாசுகி** என்னும் பாம்பினை அமுத்தமாகச் சுற்றிக்கட்டி, நீ கடலைக் கடைந்தருளிய காலத்தில், அங்கே அருகே நின்று கொண்டிருந்த சூரர்கள் எனப்பட்ட தேவர்களும் அசுரர்களும் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? இதனை நான் தெரிந்துகொள்ளுமாறு சிறப்புற எடுத்து விளக்கிக் கூறியருள்க.

(குறிப்புரை) தரங்கம் - அலை. குன்று - மலை, மந்தரம். மாசுணம் - பாம்பு, வாசுகி. சுலாய் - சுற்றி. சூரர் - பெரு வீரர்கள், இஃது இங்கே இகழ்ச்சிக் குறிப்பு. திருப்பாற்கடலைக் கடைந்ததும், இராவணனை வென்று கொன்றதும் நின் செயல்களேயாகும், என்றாலும் தேவர்கள் கடைந்தார்கள் என்றும், வானர சேனைகள் போரிட்டுக் கொன்றன என்றும் உலகோர் கூறுவர். இஃது என்ன வியப்பு! என்பது கருத்து. (21)

பண்டும் இன்றும் மேலுமாய் ஓர்
பாலன்ஆகி ஞாலம் ஏழும்
உண்டு மண்டி ஆலிலைத் துயின்ற
ஆதி தேவனே!
வண்டு கிண்டு தண்டுழாய்
அலங்கலாய்! கலந்தசீர்ப்
புண்ட ரீக பாவை சேரும்
மார்ப! பூமி நாதனே!

(பொழிப்புரை) இறப்பு நிகழ்வு என்னும் மூன்று காலங்களிலும் காத்தருள்பவனுதலால், உலகங்களையெல்லாம் ஊழிகால வெள்ளம் அழித்துவிடாதபடி விரும்பி அமுது செய்து, ஒப்பற்ற ஒரு குழந்தையாகி, ஆலிலையின் மேற் கண் வளர்ந்தருளிய மூல முதல்வனே! வண்டுகள் தேனும் மணமும் கருதி வந்து குடைகின்ற குளிர்ந்த துளசிமாலையை அணிந்தவனே! அழகு பொருந்திய தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள் சேர்ந்து வாழும் திருமார்பினை யுடையவனே; பூமிப் பிராட்டிக்குத் தலைவனே!

(குறிப்புரை) பண்டு - படைப்புத் தொழிலுக்கு முற்பட்ட காலம். இன்று - படைப்புத்தொழில் நடைபெறும் காலம். படைப்புக்கு முன்பு, தன்பக்கலிலே ஏறட்டுக் கொண்டும், படைக்குங்கால் கருவி

கரணங்களைக் கொடுத்தும், பிரளய காலத்தில் தன்னுடைய வயிற்றிலே வைத்தும், எல்லா உலகுயிர்களையும் காப்பாற்றியருள்பவன் எம்பெருமான்! மூன்று காலங்களிலும் நல்லார் பொல்லார் ஆகிய அனைவரையுமே ஒக்கநோக்கும் இயல்பினனுதல் எம்பெருமானின் பண்பு என்பது கருத்து. (22)

வால் நிறத்து ஓர் சீயமாய்
வளைந்த வாள் எயிற்றவன்
ஊன் நிறத்து உகிர்த்தலம்
அழுத்தினாய்! உலாயசீர்
நால் நிறத்த வேத நாவர்
நல்ல யோகினால் வணங்கு
பால் நிறக் கடல் கிடந்த
பற்ப நாபன் அல்லையே!

(**பொழிப்புரை**) வெளுத்த நிறத்தையுடைய ஒப்பற்ற **நரசிங்கம்** ஆக வடிவம் கொண்டு, வளைந்த கொல்லுகின்ற பற்களையுடைய **இரணியனின்** ஊன் பொருந்திய மார்பிலே நகங்களை ஊன்றி அழுத்திக் கொன்றவனே! உலகம் எங்கும் பரவி உலாவுகின்ற சிறப்பினையுடைய நான்கு வேதங்களையும் பயின்று நாவிலே வைத்திருப்பவர்கள் ஆகிய பெரியோர்கள், நலம் மிகுந்த யோகத்தினால் வணங்குகின்ற, திருப்பாற்கடலிலே பள்ளி கொண்டருளிய **பத்மநாபன்** நீயேயன்றோ!

(**குறிப்புரை**) சீயம் - சிங்கம். வால் நிறம் - வெண்மை நிறம், பெருமான் தன் திருவுருவை மாற்றிக்கொண்டு **நரசிங்கம்** ஆயினதற்கு ஏற்ப, காளமேகம் போன்று கரிய தன் நிறத்தினையும் மாற்றிக் கொண்டு வெண்ணிறம் ஆயினன். 'வான் நிறம்' எனக்கொண்டு 'உயர்ந்த தெய்வத்தன்மையுடைய' எனினுமாம். ஊன் நிறத்து - உடலில் மார்பின்கண். ஊன் - உடம்பு, நிறம் - மார்பு. உகிர் - நகம். நான்கு வேதம் - இருக்கு எசுர் சாமம் அதர்வணம்; அல்லது **உதாத்தம், அநுதாத்தம், சுவரிதம், பிரசயம்** என்னும் நான்கு சுவரங்களையுடைய வேதம் எனினுமாம். எம்பெருமான் ஒரு பகுதியில் மனிதவடிவமும், பிறிதொரு பகுதியில் விலங்கு வடிவமும் அமையுமாறு ஓர் உடலம் கொண்டு, தூணிலே வெளிப்பட்டருளிய அற்புதத்தினை வியந்தபடி. (23)

—தொடரும்.

நடைபெற்ற நிகழ்ச்சிகள் (பிரம்மோற்சவம்)

திருமழிசை	ஒத்தாண்டேசுவரர்	கோயில்
திருநின்றவூர்	பக்தவத்சல சுவாமி	,,
மூவலூர்	மார்க்க சகாய சுவாமி	,,
கும்பகோணம்	நாகேசுவர சுவாமி	,,
திருப்புல்லாணி	ஆதிஜெகந்நாத சுவாமி	,,
கோவைப் பேரூர்	பட்டீசுவர சுவாமி	,,
திருப்பாண்டிக் கொடுமுடி	மலையம்மன்	,,
திருவாலித்திருநகரி	ஸ்ரீ வயலாலி மணவாளன்	,,
காஞ்சிபுரம்	திருவேகம்பநாதர்	,,
திருச்சுழியல்	திருமேனிநாத சுவாமி	,,
திரு இந்தளூர்	பரிமள ரங்கநாத சுவாமி	,,
திருவெண்ணெய் நல்லூர்	கிருபாபுரீசுவர சுவாமி	,,
செட்டிகுளம்	பாலதண்டாயுதபாணி சுவாமி	,,

திருவாய் மொழி

(முன் இதழ்த் தொடர்ச்சி பக்கம், 269)

மனனகம் மலம்அற மலர்மிசை எழுதரும்
மனன்உணர்வு அளவிலன் பொறியுணர்வு அவையிலன்
இனன்உணர் முழுநலம் எதிர்நிகழ் கழிவினும்
இனன்இலன் என்நன்உயிர் மிகுநரை இலனே

(பொழிப்புரை) மனத்தின்கண் உள்ள குற்றங்கள் கழியக் கழிய, மலர்ச்சியுற்று மேலே எழுகின்ற மானத ஞானம் என்னும் யோக உணர்ச்சியினால் அளவிடப் படாதவனும், மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் பிற இந்திரியங்களால் அளவிடப்படாதவனும். இத்தகையவனும் முழுதாகிய ஞானமும் முழுதாகிய இன்பமும் கொண்ட திருவுருவையுடையவனும், எதிர்வு நிகழ்வு கழிவு என்னும் மூன்று காலங்களிலும் தனக்கு ஒப்பில்லாதவனும், தனக்கு மேற்பட்டவர்களை இல்லாதவனும் ஆகிய எம்பெருமானே, எனக்கு நல்ல உயிர் ஆவான்.

(குறிப்புரை) மனன் அகம்-மனத்தின் இடத்தில். அகம் - ஏழாம் வேற்றுமை யுருபு. இனி 'அகம் மனம்' என மாறி வெளிப் பொருள்களிற் செல்லாமல் உட்பொருள்களில் மட்டும் செல்லும் மனம் எனினுமாம். அற-நீங்க, மலர்-மலர்ந்து. மனன் உணர்வு - யோக உணர்ச்சி, இனன் - இத்தகையவன், 'உணர்முழு நலம்', முழு உணர்வு முழு நலம் எனக் கொள்க. உணர் - உணர்வு, ஞானம். நலம்-இன்பம், ஆனந்தம். இனன் இலன்-ஒப்பு இல்லாதவன். மிகுநரை (மிகுநர் + ஐ) இலன் - மேற்பட்டவர்களை இல்லாதவன். என்னுயிர்-என் + நன் + உயிர். மேற்பாட்டில் எம்பெருமான் உயர்வற உயர்ந்தவன் என்றார். உயர்வு இல்லாவிடினும் ஒப்பு உண்டோ என் பார்க்கு, அதுவும் இல்லாதவன் என்கின்றார் இப்பாட்டில். **ஈசுவரன்** ஆகிய எம்பெருமான், ஏனைச் **சித்து அசித்து** ஆகிய இரண்டு தத்துவங்களிற் காட்டிலும் மிக மேலானவன் என்பது இப்பாடலின் கருத்து. (2)

இலனது உடையனிது எனநினை வரியவன்
நிலனிடை விசும்பிடை உருவினன் அருவினன்
புலனொடு புலனலன் ஒழிவிலன் பரந்தஅந்
நலனுடை ஒருவனை நணுகினம் நாமே

(பொழிப்புரை) அந்தப் பொருள் தனக்கு இல்லாதவன் என்றும், இந்தப் பொருளையுடையவன் என்றும் நினைப்பதற்கு அருமைப்பாடு வாய்ந்தவன் ; மண் முதலான கீழ் உலகங்களிலும், விண் முதலான மேல் உலகங்களிலும் உருவமான அசேதநப் பொருள்களையுடையவன் ; அருவமான சேதநர்களையுடையவன் ; புலன்களுக்கு உட்படும் பொருள்களோடு கலந்து நிற்பினும், அப்புலன்களுக்கு எட்டாமல் நிற்பவன் ; எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவன் ; அங்ஙனம் பரந்து வியாபித்துள்ள உயர்ந்த நலங்களையுடைய ஒப்பற்ற எம்பெருமானை நாம் அணுகி நெருங்கப் பெற்றோம்.

(குறிப்புரை) இறைவன் இவ்வுலகை **லீலா விபூதி**யாக உடையவன் என்பது இப்பாடலிற் சொல்லப்படுகின்றது. இறைவனின் கல்யாண குணங்களையே அநுபவிக்கும் இயல்புடைய ஆழ்வார், 'இருள்தருமா ஞாலம்' எனப்படும் இந்த லீலா விபூதியினை உகந்து அநுபவிக்க இழிந்தமை என்? ஞானிகள் அருவருக்கும்படியன்றோ, இவ்விபூதி இருப்பது? என்னில், இந்த இருள்தருமா ஞாலத்தினையும் ஆழ்வார் தாம் பெற்ற மயர்வறு மதிநலம் ஆகிய ஞான விளக்கத்தினால், இதுவும் எம்பெருமானின்

ஆட்சியின்கீழ் அமைந்தது என்று கொண்டு அனுபவிக்கின்றார். **உருவினன்**-அசித்துப் பொருள்களையுடையவன். **அருவினன்**-சித்துப் பொருள்களாகிய ஆத்மாக்களையுடையவன். **புலன்**-காணப்படுகின்ற பொருள். **புலன் அலன்**-காணப்படுகின்ற பொருள்களின் தன்மைகளையுடையவன் அல்லன். 'அந் நலன்' என்புழி அகரம் நெஞ்சறி சுட்டு; இறைவனின் குணங்களையெல்லாம் நினைந்து ஒருசேரத் தொகுத்துச் சுட்டினார்.

'நணுகினம் நாமே' என்று அணுக முடியாத இறைவனை அணுகப்பெற்ற ஆனந்தம் தோன்ற வியக்கின்றார். **நாம்**-இறைவனுடைய அநுபவத்துக்குப் புறம்பான நாம், இறைவனது பெயரின் வாசனையும் அறியாத நாம் என்னும் குறிப்புக்களைக் கொண்டது. 'நணுகினம் நாமே' என்பதனை **காகு** என்னும் ஒலியியல் திரிபாகக்கொண்டு, உயர்வற உயர்ந்த ஈசனை நீசரில் நீசரான நாமோ நணுகினோம்? நணுகுவதற்கு நம்பக்கல் என்ன தகுதியுள்ளது? நணுகியது போலத் தோன்றும் இவ்வுணர்வு ஏதேனும் ஒருவகை மனமயக்கம் போலும்! என்றும் சிலர் பொருள் உரைப்பர்.

[ஆசிரியர் பரிமேலழகர் தமது திருக்குறள் உரையில், காகு என்பதனைத் "தும்முச் செறுப்ப அழுதாள் நுமருள்ளல் எம்மை மறைத்திரோ என்று" என்னும் குறளின் கண் (1318), 'எம்மை என்பது, நும்மோடு யாதும் இயைபு இல்லாத எம்மை என்பது பட நின்ற இசை யெச்சம். இதனை வடநூலார் காகு என்ப' என்று குறித்திருத்தல், ஈண்டு அறிந்து நினைவு கூர்தல் தகும்.]

நாம்அவன் இவன்உவன் அவள்இவள் உவள்எவள்
தாம்அவர் இவர்உவர் அதுஇது உதுஎது
வீம்அவை இவைஉவை அவைநலம் தீங்குஅவை
ஆம்அவை ஆயவை ஆய்நின்ற அவரே

(பொழிப்புரை) **நாம்** முதலான தன்மைப் பொருள்களும், **அவன்** இவன் உவன் எல்லும் ஆண்பாற் சுட்டுப் பொருள்களும், **அவள்** இவள் உவள் என்னும் பெண்பாற் சுட்டுப் பொருள்களும், **எவள்** என்னும் பெண்பால் வினைப் பொருளும், **தாம்** என்னும் பன்மைப் பொதுப் பொருளும், **அவர்** இவர் உவர் என்னும் பலர்பாற் சுட்டுப் பொருளும், **அது** இது உது என்னும் ஒன்றன்பாற் சுட்டுப் பொருள்களும், **எது** என்னும் ஒன்றன்பால் வினைப்பொருளும், அழிந்தொழியும் தன்மையையுடைய பொருள்களும், **இவை** உவை எவை என்னும் பலவின்பாற் சுட்டுப் பொருள்களும், நல்ல பொருள்களும், தீய பொருள்களும், எதிர்காலத்துப் பொருள்களும், இறந்த காலத்துப் பொருள்களும், ஆகி நின்ற எல்லாப் பொருள்களும் அந்தப் பெருமானே ஆவர்.

(குறிப்புரை) மேற்பாட்டிலே இறைவனுடைய உடைமைப் பொருள் என்னும் தன்மையால், அவனுடைய குணங்களைப்போலவே, 'இருள்தருமாஞாலம்' எனப்படும் **லீலா விபூதி**யினை அநுபவித்தார். இப்பாட்டினாலும், இனிவரும் பாடல்களிலும் இந்த லீலா விபூதியினையே மேலும் சிறப்பித்துப் பேசி, ஈடுபட்டு அநுபவிக்கின்றார்.

'நலம் அந்தம் இல்லதோர் நாடு' ஆகிய நித்திய விபூதியை விடுத்து, இதனை இவர் அநுபவிக்கப் புக்கது எற்றுக்கு? என்னில், அந்நாடு குற்றங் குறைகள் ஒன்றும் இல்லாதது ஆதலின், அது திருந்துவதற்காகச் சொல்ல வேண்டுவது ஒன்றுமில்லை; மேலும் அவ்வுலகத்தில் இறைவனுடைய இருப்புக் கண்டு உகக்கும் இன்பம் ஒன்றே யுள்ளது, அதற்கு மேல் ஒன்றுமில்லை. ஆனால் லீலாவிபூதியாகிய இந்நாடோ அதற்கு எதிர்த்தட்டாக உள்ளது; அஞ்ஞானம் அந்யதாஞானம் விபரீத ஞானம் அந்யசேஷத்வம் முதலிய பற்பல குற்றங்களையுடையது. ஆதலின் இதனைப் பற்றியே பல பாசுரங்கள் அருளிச் செய்கின்றார்

ஆழ்வார். இச்செய்யுளால் உலகிற் காணப்படுகின்ற பொருள்கள் அனைத்தும் இறைவனுக்கு வசப்பட்டவை என்கின்றார்.

இங்குக் கூறப்படாத யாம் நான் யான் என்னும் தன்மைப் பெயர்ப் பொருள்களும், எவன் எவர் எவை என்னும் வினைப் பெயர்ப் பொருள்களும், இனம் (உபலட்சணம்) பற்றிக் கொள்ளப்படும். வீயுமவை என்பது **வீமவை** என வந்தது. வீயுமவை-அழிவனவாகிய பொருள்கள், வீதல்-சாதல், அழிதல். ஆய்நின்ற-ஆகிநின்ற பொருள்கள் (வினையாலணையும் பெயர்). (4)

அவரவர் தமதமது அறிவுஅறி வகைவகை
அவரவர் இறையவர் எனஅடி யடைவர்கள்
அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே.

(பொழிப்புரை) உலகிலுள்ள அந்தந்த மக்களும், தங்கள் தங்கள் அறிவினாலே அறிகின்ற பல பல நெறிகளிலும்லே, அவ்வத் தேவர்களையே இறையவர் என்று எண்ணிக்கொண்டு, அவர்களின் பாதங்களையே பற்றுக்கோடாக நம்பி அடைந்து நிற்பார்கள். அதற்கேற்ப, அம்மக்களால் அடையப்படுகின்ற அவ்வத் தேவர்களும். அவர்கள் விரும்பிய பயன்களைத் தருதலில் யாதொரு குறையும் இல்லாதவர்களாகவே இருக்கின்றார்கள். இஃது எதனால் என்னின், எல்லாவற்றிற்கும் மேலான முதற் பொருள் ஆகிய **ஸ்ரீமந்நாராயணன்**, அவ்வத் தேவர்கள் தங்களுடைய ஆகமங்களில் விதித்து வைத்த வழியின்படி, அவர்களை வணங்குகின்ற மக்கள் தாம் தாம் விரும்புகின்ற நலங்களைப் பெறும் படியாக, அவ்வத் தேவர்களுடைய உயிருக்குள் உயிராய் (அந்தர்யாமி ஆக) நின்று, எழுந்தருளித் திருவருள் புரிந்து வருகின்றார்; அதனாலேயாம்.

(குறிப்புரை) மேலைத் திருப்பாடலில் உலகத்துப் பொருள்கள் அனைத்தும் அவன் வயப்பட்டவையே என்று கூறினார். இப்பாடலில், **காத்தற்றொழில்** அவன் ஒருவனுக்கே உரியது என்கின்றார். முதலிலுள்ள 'அவரவர்' என்றது சேதநர்கள் ஆகிய மக்களைக் குறித்தது. இரண்டாவதாக உள்ள 'அவரவர்' என்றது பற்பல தேவர்களைக் குறித்தது. மூன்றாவதும் நான்காவதும் முறையே தேவர்களையும், மக்களையும் குறித்தன. '**அடியடைவர்**' என்று, பிற தேவர்களை மக்கள் சிலர் வழிபடும் முறையினை, அவர்கள் காலிலே குனியும் செயலாக எள்ளற் குறிப்புத் தோன்றப் பேசுகின்றார் ஆழ்வார். 'இறையவர்' எனும் முதலிரண்டும் தேவர்களைப் பொதுவாகச் சுட்டின. மூன்றாவதாகிய 'இறையவர்' என்னும் சொல் ஸ்ரீமந் நாராயணன் என்னும் பொருளைச் சுட்டிற்று. திருமால் ஒருவரே காத்தற்றொழிலுக்கு உரியவர், ஏனைய தேவர்களுக்கு அவ்வாற்றலும் தகுதியும் இல்லை; **ஐயன்பாழி**யல் (சாத்தனார் கோயில்) நிறுத்தப் பெற்றிருக்கும் யானைகளும் குதிரைகளும் போர் செய்யமாட்டாமை போல, வழிபடுபவர்களின் அபிமானம் ஒன்றேபற்றி 'இறையவர்' எனப்படும் பிற தேவர்களும், காத்தற்றொழிலைச் செய்யும் ஆற்றல் உடையவராகார் என்பது கருத்து.

—தொடரும்

அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்,
குன்றே அனையாய்! என்னைஆட் கொண்ட போதே கொண்டிலையோ?
இன்றோர் இடையூறு எனக்குண்டோ? எண்தோள் முக்கண் எம்மானே!
நன்றே செய்வாய், பிழைசெய்வாய், நானோ இதற்கு நாயகமே?

—மாணிக்கவாசகர்

மதுராந்தகம் கல்வெட்டுக்கள்-1

டாக்டர் மா. இராசமாணிக்கனார்

(திருவெண்காடுடையார் கோவில்)

இன்றுள்ள மதுராந்தகத்தின் ஒரு பகுதிக்குக் கடப்பேரி என்பது பெயராகும். அங்குள்ள சிவன் கோவில் திருவெண்காடுடையார்கோவில் எனப்படுகிறது. அக்கோவிலிலிருந்து இருபத்தேழு வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டுள்ளன.

அரசர்கள், அரசியல் அலுவலர், வணிகர், கோவில் பணிமக்கள், பொதுமக்கள் முதலியோர் கோவிலில் பலவகை விளக்குகள் எரிப்பதற்கு ஆடுகள், பசுக்கள், நிலங்கள், காசுகள் முதலியவற்றை ஊரவையாரிடம் அல்லது ஆட்சியாளரிடம் அல்லது கோவில் குருக்களான சிவப்பிராமணரிடம் ஒப்புவித்தல் வழக்கம். *இவ்வாறே கோவில் வழிபாட்டிற்கும் விழாக்கள் முதலியவற்றிற்கும் நிலத்தையும் பணத்தையும் கொடுப்பது வழக்கம். கடவுளர் திருவுருவங்களை எழுந்தருளச் செய்து அவற்றின் பூசை விழாக்களுக்காக நிலத்தையோ காசையோ கொடுப்பதும் உண்டு. இத்தகைய அறங்கள் என்றும் நடைபெறுவதற்காகவே கோவில் சுவர்களில் அவைபற்றிய விவரங்கள் வெட்டப்பட்டுள்ளன. அக்கல்வெட்டுக்களில் அவை வெட்டப்பட்ட காலத்தில் ஆட்சிபுரிந்த அரசர் பெயர்களும் அவர்தம் வீரச் செயல்களும் அக்கல்வெட்டுக்கள் எழக் காரணமான அறங்கள் பற்றிய விவரங்களும் பொறிக்கப்படுதல் அக்கால வழக்கம். இனிக் கல்வெட்டுக்களில் காணப்பெறும் விவரங்களை இங்குக் காண்போம். கண்டராதித்தன் காலம் முதல் குமார தாதாசாரியார் காலம் வரையில் வெளியான கல்வெட்டுக்கள் அக்கோவிலில் உள்ளன. இனி அக்கல்வெட்டுக்கள் கூறும் செய்திகளைக் கீழே காண்போம்.

அரசர்கள்

கண்டராதித்தன்	கி.பி.	949— 957
இராசராசன் I	,,	985—1014
குலோத்துங்கன் I	,,	1070—1120
விக்கிரமசோழன்	கி.பி.	1118—1135
குலோத்துங்கன் II	,,	1133—1150
இராசராசன் II	,,	1146—1173
இராசாதிராசன் II	,,	1163—1176
குலோத்துங்கன் III	,,	1178—1218
இராசராசன் III	,,	1216—1246
மாறவர்மன் குலசேகரன்	,,	1268—1311
பிரபுடதேவராயர்	,,	1447 1465
எட்டூர்த்திருமலை குமார தாதாசாரியார்.	,,	1586—1614

நிலை அறம்

(1) கண்டராதித்தன் காலத்தில் மணவிற்கோட்டத்து அதிகாரி ஒருவன் தன் அரசனது வெற்றிக்கும் நீண்ட ஆயுளுக்கும் ஒரு நிலத்தை வாங்கி இறையிலி ஆக்கித் திருவெண்காடுடைய நாயனாருக்கு வழங்கினார்.

2 முதற் குலோத்துங்கன் காலத்தில் ஒருவன், புஷ்ய நட்சத்திர நாட்களில் இறைவன் திருவீதியுலா வருவதற்காக ஐந்தரைப் பாடகம் நிலத்தை வழங்கினான்.

(3) அதே மன்னன் காலத்தில் மதுராந்தக சதுர்வேதி மங்கலத்துப் பேரவையார் திருவெண்காடுடைய மகாதேவர் கோவிலில் தில்லைவாழ் அந்தணர் மடத்தை நடத்தவும், சிவயோகியரையும் தபஸ்விகளையும் உண்பிக்கவும் தரிசு நிலம் இருபது பாடகம் கொடுத்தனர். இது தில்லையாளி என்ற வீரநாராயன மூவேந்த வேளான் வேண்டுகோளின்படி செய்யப்பட்டது.

(4) முதற் குலோத்துங்கன் காலத்தில் கி.பி. 1084-இல் மதுராந்தகத்துச் சதுர்வேதி

* இக்கட்டுரை 1897 இல் வெளியான தென்னிந்தியக் கல்வெட்டறிக்கையையும் (129 - 13' -- 1896), தென் இந்தியக் கல்வெட்டுக்கள் ஐந்தாம் பகுதியையும் (994 - 1003) துணையாகக் கொண்டு எழுதப்பெற்றது.

மங்கலத்துப் பெருங்குறி சபையார், வாணராயர் தம்மூரில் எடுப்பித்த கற்றளி - திருவெண்காடுடைய மகாதேவர்க்கு அன்றாடு நற்காசு இரண்டாயிரம் பெற்றுக்கொண்டு என்றத்தூரை தேவதானமாக விட்டனர்.

(5) இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் மதுராந்தக சதுர்வேதி மங்கலத்து மத்தியஸ்தனும் வேறு ஒருவனும் கோவில் பண்டாரத்தில் இருபது காசு வட்டிக்குக் கடன் வாங்கினர் ; அது கொடுக்க முடியவில்லை ; அதனால் வேறு ஒருவரிடம் பணம் பெற்றுக் கடனை அடைத்தனர் ; வட்டிக்குத் தங்கள்நிலத்தைக்கொடுத்துவிட்டனர்.

(6) இரண்டாம் இராசராசன் காலத்தில் மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்து மதுரை நாயகதேவர் சனிப்வனி எழுந்தருளச் சோழ நாட்டான் ஒருவன் நிலமளித்தான். அதனைக் கேசவபட்டன் நடத்த ஒப்புக்கொண்டான். மகாசபையார் ஒப்பினர்.

(7) மாறவர்மன் குலசேகர பாண்டியன் காலத்தில் கோவில் திருநடை மாளிகையில் பாண்டிய நாட்டான், உடையார் விரதம் முடித்த பாண்டீசுவரம் உடை நாயனர்க்கும், புவனபதி நாச்சியாருக்கும் நிலம் உள்ளூரில் வாங்கிவிட்டான்.

(8) பிரவுடதேவராயர் காலத்தில் கடவுள் அமுதுபடிக்கும், தேர் விழா நடத்தவும் கருங்குழியில் நிலதானம் செய்யப்பட்டது.

விளக்கு அறம்

(1) முதற் குலோத்துங்கன் காலத்தில் மதுராந்தகத்துச் சதுர்வேதி மங்கலத்து ஆளுடையோர்க்கு ஒரு நந்தா விளக்கு எரிக்கப் பசு முப்பத்திரண்டும் எருது ஒன்றும் அளிக்கப்பட்டன.

(2) அதே அரசன் காலத்தில் ஓய்மானாட்டு வணிகன் ஒரு நந்தா விளக்கு எரிக்கத் தொண்ணூறு ஆடுகளை அளித்தான். இதனைக் குருக்கள் ஏற்றனர்.

(3) அதே அரசன் காலத்தில் புலியூர் நாட்டு வேளார் மகள் பெரியாள் என்பவள் ஒரு நந்தா விளக்கு எரிக்கத் தொண்ணூற்று ஆடுகளை அளித்தாள்.

(4) அதே அரசன் காலத்தில் சோழ நாட்டுத் தலைஞாயிறு என்னும் ஊரைச் சேர்ந்த பன்றி கயிலாயன் என்பவன் திருவெண்காடுடைய மகாதேவர்க்கு ஒரு நந்தா விளக்கு எரிக்க 95 ஆடுகளை வழங்கினான்.

(5) விக்கிரமசோழன் காலத்தில் புக்கதுறை வல்லவன் என்ற அகளங்க சம்புவராயர் என்பவன் ஒரு நந்தா விளக்கு எரிக்க 96 ஆடுகளை வழங்கினான்.

(6) அதே அரசன் காலத்தில் அதே சம்புவராயர் அவ்வூர்ப் புவன முழுதுடைப் பெருந்தெருவில் இருந்த வணிகனிடம் ஒரு நந்தா விளக்கு எரிக்க 12 காசுகளை வழங்கினான்.

7) இரண்டாம் இராசராசன் காலத்தில் செங்கேணிப் பல்லவாண்டார் எதிரிலிச் சோழச் சம்புவராயர் மகனான அழகிய சீயன் என்ற அழகிய சோழச் சம்புவராயர் தனியூர் மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்து ஆளுடையார் திருவெண்காடுடைய நாயனார்க்கு ஒரு நந்தா விளக்குக்காக 91 ஆடுகள் விட்டான்.

பிற அறம்

(1) மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்துப் பேரவையார் சுவாமிக்கு வைகாசி விழாவை வீர சோழப் பேரங்காடி வணிகரிடமிருந்து வசூலித்த 25 பொன் கொண்டும் வேறு சில வரிகளைக் கொண்டும் நடத்தத் தீர்மானித்தனர்.

(2) விக்கிரமசோழன் காலத்தில் கோயில் குருக்கள் சுவாமியின் படையலுக்காக ஒருவனிடம் 16 காசுகளைப் பெற்றுக்கொண்டனர்.

(3) இருவர் திருவெண்காடுடைய மகாதேவர் கோவில் பண்டாரத்தில் இருபது காசுகள் கடன் பெற்றனர் ; அதனைக் கொடுக்க முடியாமல் ஓர் அதிகாரியிடம் கடன் வாங்கிக் கோயில் பண்டாரத்தின் கடனைத் தீர்த்தனர் ; அதன் வட்டிக்காகத் தங்கள் இறையிலி நிலத்தை அவ்வதிகாரி வைத்த

தோட்டத்தின் நடைமுறைச் செலவுக்காக விட்டனர்.

(4) பேரவையிலிருந்த செயற்குழு உறுப்பினர் சிலர், திரு ஏகம்பமுடையார் கோவிலுக்கு ஒரு நிலத்தை விற்றனர்.

(5) மூன்றும் குலோத்துங்கன், கோவில் வழிபாட்டுச் செலவுக்கும் கோவிலைப் புதுக்கவும் கோவில் நிலங்களுக்குரிய வரியைச் செலவழிக்க ஆணை பிறப்பித்தான்.

(6) மலையமான் என்ற சிற்றரசன் இக்கோவிலின் திருச்சுற்றாலையை அமைத்தான்.

(7) இரண்டாம் இராசராசன் காலத்தில் மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்து ஆளுடையார் திருவெண்காடுடையார் திருமேற்பூச்சுக்காகத் தீன சிந்தாமணிப் பெருந்தெருவில் இருந்த வணிகர் பழங்காசு முந்நூறு கோவில் பண்டாரத்திலிருந்து பெற்றுக்கொண்டு அதன் வட்டியாக நாளும் ஒருபலம் மணப்பொருளைக் கொடுப்பதாக ஒப்பினர்.

பொதுச் செய்திகள்

(1) திருவாய்க்கேள்வி : இவன் சோழர் காலத்தில் அரசன் ஆணைகளையும், அரசாங்க நடைமுறைகளையும் அறிந்து வெளியிடவும், அரசனுக்குத் தெரிவிக்கவும் நியமிக்கப்பெற்ற அதிகாரி.

(2) சண்டேசுவரர் : இவர் சிவன்கோவில் உரிமையாளர். கோவில் சொத்துக்கள் இவர் பெயரிலேயே பதிவு செய்தல் வழக்கம். சிவனுக்கணிவித்த மாலைகளும் படைத்த உணவுகளும் இவரிடம் சேர்ப்பித்துப் பின்பு எடுத்துச் செல்வது மரபு. திருச்சேய்ஞலூரில் பிறந்த விசாரசருமர் சிவபூசை செய்து சண்டேசுவரப் பதவி அடைந்தார்; அதனால் அவர் சண்டேசுவரர் எனப்பட்டார்.

(3) திருவெண்காடுடையார் கோவில் திருநடை மாளிகையில் பாண்டி நாட்டான் ஒருவன் பாண்டீசுவரமுடைய நாயனர் என்ற லிங்கத்தையும் புவனபதி நாச்சியார் என்ற அம்மன் சிலையையும் எழுந்தருளுவித்தான் என்று இக்கோவில் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. இங்ஙனம் ஒரு கோவிலில் அரசியல் அலுவலர், வெளிநாட்டு வணிகர் முதலியோர் தாம் தாம் வழிபட்டு வந்த கடவுளர் நினைவாகத் தாம் தங்க நேர்ந்த புதிய ஊர்க்கோவிலில் சிவலிங்கங்களை எழுந்தருளச் செய்து அவற்றின் பூசைக்கும் விழாவிற்கும் நிபந்தங்களை ஏற்படுத்துதல் பண்டை வழக்கம். அதனுற்றான் சிறப்புடைய கோவில் திருச்சுற்றாலையில் சிவலிங்கங்கள் பல இருப்பதை இன்றும் காண்கிறோம்.

(4) சாவா மூவாப் பேராடு : விளக்கெரிக்க ஆடுகளைக் கோவிலுக்கு விடுபவர் அவ்வாடுகளின் மரபு தொடர்ந்து இயங்க ஓர் ஆண் ஆட்டையும் உடன் விடுதல் வழக்கம். இந்த முறையால் ஒருவர் விட்ட ஆடுகளின் மரபும் விளக்கு அறமும் தொடர்ந்து இயங்க வழியேற்படுகிறது. இதனுற்றான் கோவிலுக்கு விடப்பட்ட ஆடுகள், "சாவா மூவாப் பேராடுகள்" எனப்பட்டன. இங்ஙனமே பசுக்களை விடுவோர் ஓர் எருதினையும் விடுதல் வழக்கம்.

(5) காசு — இவ்வூர்க் கல்வெட்டுக்களில் பழங்காசு, அன்றாடு நற்காசு என்னும் இருவகைக் காசுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒரு கல்வெட்டு வெளிப்பட்ட காலத்தில் புழக்கத்திலிருந்த காசு பழங்காசு எனப் பெயர் பெற்றது.

(6) சேரி — மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த சேரிகள் பலவற்றின் பெயர்கள் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. அவை மதுராந்தகச் சேரி, இருமுடி சோழச்சேரி, சிங்களாந்தகச்சேரி, வீரசோழச்சேரி, கோதண்டராமச் சேரி, இராஜகேசரிச் சேரி, பரகேசரிச் சேரி, சூளாமணிச் சேரி, திரிபுவன மாதேவிச் சேரி முதலியன.

இவற்றில் வாழ்ந்தவர் அனைவரும் கிரமவித்தன்[1], வாஜாபேயாஜி[2], சோமயாஜி[3] என்ற பெயர்களைக் கொண்ட பிராமணராவர்.

சேரி என்பது ஊரைச் சேர்ந்த புதிய தெரு அல்லது சிற்றூர் என்று கொள்ளுதல் தகும். பார்ப்பனச்சேரி இடைச்சேரி என்பனவும் இருந்தன. சேரி என்பது காலப்போக்கில் தாழ்த்தப் பட்டவர் உறைவிடத்தைக் குறிக்கலாயிற்று என்பது இங்கு அறியத்தகும்.

(7) மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார் செம்பியன் மகாதேவிப் பெருமண்டபத்திற் கூடி, ஊராட்சி நடைமுறைகளைக் கவனித்தனர் என்பது கல்வெட்டு வாசகம். செம்பியன் மகாதேவியார், என்பவர் கண்டராதித்த சோழனின் மனைவியார்; முதல் இராசராச சோழனின் பாட்டியார், இவர் சிறந்த சிவபக்தர்; பல கோவில்களில் திருப்பணிகள் செய்து புகழ் பெற்றவர்; மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்தில் அவ்வம்மையார் பெயர் கொண்ட மண்டபம் ஒன்று இருந்திருத்தல் கூடும்.

(8) முதற் குலோத்துங்கன் காலத்தில் (கி. பி. 1084-இல்) சேங்கேணி சாத்தன் சோழனை சேனுபதிகள் வாணராயர் என்பவன் திருவெண்காடுடையார்க்குக் கற்றளியை எடுப்பித்தான். அவனே அக்கோவில் பூசை விழா முதலியவற்றிற்கு அன்றுடு நற்காசு இரண்டாயிரம் ஊர் அவையாரிடம் கொடுத்தான். ஊர் அவையார் அக்காசுக்கு விலையாக என்றத்தூர் என்னும் சிற்றூரை இக்கோவிலுக்குத் தேவதானமாக விட்டனர். எனவே, இக்கோயிலின் கருவறை இற்றைக்கு ஏறத்தாழத் தொள்ளாயிரம் ஆண்டுகட்கு முன்பு கற்றளியாக்கப்பட்டது எனலாம்.

(9 மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்துப் பேரவையார் சிவன்கோவில் ஆட்சியிலும் பங்கு கொண்டனர்; அப்பேரவையார் சிவன் கோவிலைச் சுற்றி மாடவீதிக்கு நிலம் ஒதுக்கினர்; அவ்வீதிக்குத் திருவெண்காட்டுப் பெருந்தெரு எனப் பெயரிட்டனர். அங்குச் சிவப்பிராமணர், உவச்சர், தபஸ்விகள், தேவரடியார் ஆகியவர்கள் தங்க வீடுகள் உதவினர்.

(10) கோனேட்டி ஐயங்கார் காலத்தில் அடைமானம் வைக்கப்பட்டு, அண்மையில் மீட்கப் பெற்ற திருவெண்காடுடையார் கோவில் தேவதான நிலங்களை மீட்டும் அடைமானம் வைக்கலாகாதென்று மதுராந்தகம் ஊர்ப் பெருமக்கட்கும் உபயவேதாந்தாசாரியார் எட்டூர்த் திருமாலை குமார தாதாசாரியாரின் முதலியான கோனேட்டி ஐயனுக்கும் உடன்பாடு ஏற்பட்டது.

(11) திருவெண்காடுடையார் கோவில் கல்வெட்டுக்களுள் காலத்தால் முற்பட்டது முதற் பராந்தகன் மகனுன கண்டராதித்தன் காலத்துக் கல்வெட்டாகும். கோதண்டராமர் கோவில் கல்வெட்டுக்களில் காலத்தால் முற்பட்டது, முதற் பராந்தகன் காலத்துக் கல்வெட்டாகும். அவன் காலம் கி. பி. 907 – 955. அவன்தான் மதுரையைக் காப்பாற்றிப் பாண்டிய நாட்டைத் தன் ஆட்சியில் சேர்த்துக்கொண்டான்; தன்னை மதுராந்தகன் (மதுர + அந்தகன் — மதுரைக்கு யமன்) என்று அழைத்துக்கொண்டான். அவன் பெயரால் உண்டானதே மதுராந்தகம் என்னும் ஊர்.

நாட்டுப் பிரிவுகள்

(1) ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப் புலியூர்க் கோட்டத்துத் திருச்சுரம். ‘திருச்சுரம்’ என்பது இப்பொழுது ‘திரிசூலம்’ என வழங்கப்படுகிறது; பல்லாவரத்துக்கு அருகில் உள்ளது).

(2) (அ) மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்து இராச கேசரிச் சேரி.

(ஆ) சோழ மண்டலத்து இராசநாராயண வளநாட்டுத் திருவழுந்தூர் நாட்டுக் கிரனூர்.

---

1. வேதத்தின் கிரம பாடத்தில் வல்ல பிராமணன் “கிரமவித்தன்” எனப் பெயர் பெற்றுன்.

2. யாகம் பதினெட்டனுள் அந்தணராலும் அரசராலும் செய்யப்படும் யாகவகை வாஜபேயம் எனப்பட்டது. அதனைச் செய்தவன் வாஜபேயாஜி எனப்பட்டான்.

3. தேவர் பொருட்டுச் சோமரசம் அளிக்கும் வேள்வி வகை ‘சோமயாகம்’ எனப் பட்டது. அதனைச் செய்தவன் சோமயாஜி எனப்பட்டான்.

(3) (அ) பாண்டி மண்டலத்துக் கீழ்க்கரைக் கூற்றத்துச் சோழகுல மாணிக்க நல்லூரான மணப்படை வீடு. (இது திருநெல்வேலி மாவட்டத்தில் 'மணப்பாடு' என் வழங்கப்படுகிறது.)

ஆ) மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்துப் பரகேசரிச் சேரி.

(4) ஓய்மானாட்டுப் பேராவூர் நாட்டு நகரம் உலோக மகாதேவிபுரம்.

மக்கள் பெயர்கள்

பதினோராம் நூற்றூண்டு முதல் பதினைந்தாம் நூற்றூண்டு வரையில் வழக்கில் இருந்த மக்களின் பெயர்கள் இக்கோவில் கல்வெட்டுக்களில் காணலாம், இவற்றைக் கீழே காண்க :

சிவப்பிராமணர் பெயர்கள்

கௌதமன் திருவெண்காடுடையான் பட்டன். பாரத்துவாசி சிவகவி, சிவகவியாணன், காசியபன் பிச்சதேவபட்டன், பொன்னம்பலக் கூத்தன், ஆர்வலங்கிழான், கம்பன் திருவூறல்.

வணிகர் பெயர்கள்

சீர் இளங்கோ, ஸ்ரீ கிருஷ்ணன், தண்டலங்கிழான், வாசுதேவன், மணியன் மலைக்கினிய நின்றான், தண்டலங்கிழான், மதுராந்தக சிவ செட்டி தோரண சூரன், சோழமான் கண்டன் மணி, ஆர்வலங்கிழான் திருவூறல் திருவேகம்ப முடையான், மாதவடி அருளாளப் பெருமான்.

மற்றையோர் பெயர்கள்

குலோத்துங்க சோழக் கண்ணப்பன், தூசி ஆதிநாயகன் பஞ்சநதி வாணனை இராசராச நீல கங்கரையன், திருச்சிற்றம்பலம் உடையான், திருப்புலிவனமுழையான் ஏகாம்பரதேவன், அனந்த நாராயணபட்டன், கேசவ பட்டன், கோவிந்தபட்டன், வாமனபட்டன், வாசுதேவ பட்டன் மகன் இளைய வாசுதேவ பட்டன், சீராம பட்டன், பெரியாள்-பெண்பாற் பெயர், திருவெண்காடுடைய பட்டன், பாரத்துவாசி மேல் மடத்தான் பட்டன், பொன் வண்ணன் ஆடவல்லான், கம்பன் சம்புவின், ஆடவல்லான் பொன்வண்ணனை மதுராந்தக மூவேந்த வேளான், செங்கேணி சாத்தன்.

இன்றுள்ள திருவெண்காடர் கோவில்*

வெண்கொக்கு மந்தாரை மரங்கள் நிறைந்த காடு வெண்காடு எனப்பட்டது. இக்காட்டில் உண்டான சிவன் கோவில் ஆதலால் இது திருவெண்காடர் கோவில் எனப்பட்டது. இக்கோவில் பெரியது. இதற்கு எதிரில் ஒரு மண்டபமும், குளமும் உள்ளன. கோவிலின் மூன்று பக்கங்களின் மாட வீதிகள் இல்லை. முன் மண்டபத்து வலப்பக்கம் உள்ள லிங்கம் நான்கரை அடி உயரமுள்ளது. அதன் பெயர் பாண்டீசுவரர் என்பது. அதன் பக்கத்தில் லிங்கம் அளவு உயரமான அம்மன் சிலை உள்ளது. அதன் பெயர் புவனபதி நாச்சியார் என்பது. இவ்விரண்டும் பாண்டியநாட்டான் ஒருவனால் எழுந்தருளப் பெற்றவை என்பது கல்வெட்டுச் செய்தியாகும். கருவறையின் வாயிற்படி முதலில் தெற்கு நோக்கி இருந்ததாம். இப்பொழுது கிழக்கு நோக்கி உள்ளது. கருவறையின் பின்புறத் திருச்சுற்றில் ஆவுடையார் அற்ற லிங்கங்கள் இரண்டு உள்ளன. கருவறையின் வடமேற்கு மூலையில் (குமரவேள் மேட்டில் உள்ள முருகன் சிலையைப்போன்ற) அறுமுகன் சிலை அழகுற அமைந்துள்ளது. கருவறையின் புறச் சுவர்களிலும் நடு மண்டபம், முன் மண்டபப் புறச்சுவர்களிலும் கல்வெட்டுக்கள் உள்ளன.

இக்கோவில் ஐந்து நிலைகளைக் கொண்ட ஒற்றைக் கோபுரத்தை உடையது. கோவிலுக்கு வடப்புறம் நந்தவனம் உள்ளது. அங்கு ஓரிடத்தில் மண்டபத்தின் அடிப்படை காணப்படுகிறது அங்கு நந்த வனத்தில் நிலத்திற்கு அடியில் தோண்டும் இடம் எல்லாம் கருங்கற்கள் காணப்படுகின்றன. கோவிலைச் சுற்றியுள்ள நிலங்களின் பெயர்கள் கோவில் தொடர்புள்ளனவாக அமைந்துள்ளன.

---

* மதுராந்தகம் அறிஞர் திரு. கே. வி. குஞ்சன் பிள்ளை; பள்ளித் துணை ஆய்வாளர் இராம. கோதண்டராமன், புலவர் சி. கயிலாயம், வித்துவான் சு. சண்முகசுந்தர குருக்கள் ஆகியோர் இவ்வாராய்ச்சியில் எனக்கு உதவி புரிந்தனர். அவர்களுக்கு எனது நன்றி உரியது.

திருக்கச்சூர்க் கல்வெட்டுக்கள்

(கோவை திரு. சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், B.A., B.L.)

சென்னையில் இருந்து தெற்கே நெடுஞ்சாலையிலோ அல்லது இருப்புப் பாதையிலோ போனால், இருபுறங்களிலும் வழிநெடுகப் பல குன்றுகளும் குன்றுத் தொடர்களும் ஆங்காங்கே காணப்படும். பல்லாவரம், திரிசூலம், வண்டலூர், கூடுவாஞ்சேரி, திருக்கச்சூர், ஆப்பூர், திருத்தேரி, வல்லம், திருவிடைச்சுரம், திருக்கழுக்குன்றம், ஒரகடம், ஒத்திவாக்கம், திருமணி, அச்சிறுபாக்கம், தொழுப்பேடு, மலைவையாவூர் முதலிய பல ஊர்களை ஒட்டி, ஆங்காங்கே பல மலைகளும் குன்றுகளும் அமைந்திருத்தலைக் காணலாம். இந்தப் பகுதிகள் யாவும், குறிஞ்சியும் மருதமும் கலந்த திணைமயக்கம் உடையன.

இங்ஙனம் குறிஞ்சியும் மருதமும் கலந்து விளங்கும் இத் தொண்டை நாட்டுப் பகுதியில், திருக்கழுக்குன்றம் திருக்கச்சூர் திருஇடைச்சுரம் என்ற தேவாரப் பாடல் பெற்ற சிவதலங்களும், திருப்போரூர் என்ற முருகன் தலமும், திருநீர்மலை, சிங்கப்பெருமாள் கோயில், மாமல்லபுரம் என்ற திருமால்தலங்களும் பிறவும் திகழ்கின்றன. இந்தப் பகுதிகளில் உள்ள பல சிறு சிறு கோயில்களிலும், பெரிய கோயில்களிலும் சாசனக் கல்வெட்டுக்கள் நிரம்பக் காணப்படுகின்றன. இக் கல்வெட்டுச் சாசனங்களால் தொண்டை நாட்டின் பழைய வரலாறுகளையும், நிலைமைகளையும் நாம் ஓரளவு உணரமுடிகின்றது.

திருக்கச்சூர் என்னும் பாடல் பெற்ற தலம், சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாற்றோடு தொடர்புடையது. இங்குள்ள கோயில் ஆலக்கோயில் என வழங்கும். "கச்சூர் ஆலக்கோயில் அம்மானே" என்பது சுந்தரர் தேவாரம். திருக்கச்சூர்க்குப் போந்து தம்மை வழிபட்டுப் பசியினால் வருந்திய சுந்தரமூர்த்திகளின் பொருட்டுச் சிவபெருமான், ஒரு முதியவர் வடிவங் கொண்டு, அந்தணர்களின் வீடுதோறும் பிச்சையெடுத்து உணவு கொண்டுவந்து கொடுத்தார். பசியாறிய சுந்தரர், இறைவனின் கருணையை வியந்து "முதுவாய் ஓரி கதற" எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடித் துதித்தார். மலைமேல் உள்ள இறைவனுக்கு மருந்தீசர் என்பது பெயர். கீழே யுள்ள கோயிலில் தியாகராசப் பெருமான் சிறப்புற எழுந்தருளி விளங்குகின்றார். ஒரு காலத்தில் இங்குள்ள சிவபெருமானைத் திருமால் கச்சபம் என்னும் ஆமை வடிவம் கொண்டு பூசித்ததனால், இத்தலம் திருக்கச்சூர் எனப் பெயர் பெற்றது என்பது தலவரலாறு. பழங் காலத்தில் இப் பிரதேசமானது மிகவும் செழிப்புடையதாகவும், இருள் அடர்ந்த பெரும் காடுகளைக் கொண்டதாகவும் இருந்திருத்தல் வேண்டும்.

கி.பி. 6-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 10-ஆம் நூற்றாண்டு வரையில், தொண்டை நாடு பல்லவ ராட்சியின் கீழ் இருந்து வந்தது. கி.பி. 9-10 நூற்றாண்டுகளில் பல்லவப் பேரரசு நிலைகுலையத் தொடங்கியது. தஞ்சைச் சோழர்கள் தலை நிமிரத் தொடங்கினார்கள். பல்லவ அரசு வீழ்ச்சி அடையவே, தொண்டைநாட்டில் அமைதி குறைந்தது. தஞ்சைச் சோழர்கள் தொண்டை நாட்டை வென்று, தம் ஆட்சிக்கு அடிப்படுத்திக் கொண்டார்கள். சோழர்களின் பேரரசு முதலில் வலிமையுடையதாக வளர்ந்து வந்தது. ஆதித்தன், பராந்தகன், இராஜராஜன், இராஜேந்திரன் என்ற பேரரசர்கள் ஆற்றல் மிக்கவர்கள் ஆதலால், அவர்களின் கீழ்த் தொண்டைநாடு முழுவதும் அமைதியுற் றிருந்தது. சோழர் பிரதிநிதிகளும், ஊர்ச்சபையார்களும் நன்கு திறம்பட ஆட்சி செலுத்தி வந்தார்கள். ஆனால் முதற் குலோத்துங்கனுக்குப் பிறகு, சோழர் ஆட்சியின் வலிமையும் திறமையும் குறையலாயின.

ஆகவே கி.பி. 13-ஆம் நூற்றாண்டு முதல் தொண்டைநாட்டில், குறிப்பாகக் காடுகள் மிக அடர்ந்த மலைப் பிரதேசங்களில் அமைதியின்மை

யும், குழப்பங்களும், கொள்ளைகளும் ஏற்படலாயின. இந்த நிலைமைகளைப் பற்றித் திருக்கச்சூர்க் கல்வெட்டு ஒன்று சான்று பகர்கின்றது. திருக்கச்சூர்க் கோயிலில் 86 கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டன. அவற்றில் ஒரு கல்வெட்டு (315/1909) இந்த அமைதியின்மை பற்றிய செய்தியினைக் குறிப்பிடுகின்றது. அதன்கண் பண்டைக்காலக் குற்ற விசாரணை முறை பற்றியும், குற்றங் களைந்து குற்றம் புரிந்தவரைத் தண்டித்து நீதி செலுத்திய முறை பற்றியும், நாம் உணர்ந்து மகிழத்தக்க குறிப்புக்கள் காணப்படுகின்றன. குற்றம் புரிபவர்களைக் கண்டுபிடிப்பதிலும், தண்டனை வழங்குதலிலும், அரசியலார் என்னென்ன முயற்சிகளை மேற்கொண்டார்கள்? நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் எங்ஙனம் நிலை நிறுத்தினர்கள்? என்பன பற்றியும் அக்கல்வெட்டு ஓரளவு உணர்த்துகின்றது. குற்றம் புரிந்தோர்க்கு விதிக்கப் பெற்ற அபராதத் தொகை கோயில்களுக்கு வழங்கப் பெற்றதும், குற்றம் செய்தவர்கள் திருந்தி நல்லவர்களாக மாறி வாழ்தல் வேண்டும் எனக் கோயில்களுக்கு அவர்களைக் கொண்டு தானங்கள் செய்வித்ததும், இக்கல்வெட்டினால் தெரிகின்றது.

—தொடரும்.

செய்திச் சுருக்கங்கள்

நீடாமங்கலம் :	ஸ்ரீ சந்தானராமசுவாமி கோயில் பிரம்மோற்சவம் (9-4-65 — 20-4-65)
மருதூர் :	கயிலாசநாதர் கோயில் ,, (8-3-65 — 16-3-65)
திருவாமாத்தூர் :	பங்குனி உத்திரப் பெருவிழா.
சுவாமிமலை :	ஸ்ரீ சுவாமிநாதசுவாமி கோயில் பங்குனி உத்திர விழா.
திருக்கோவலூர் :	ஸ்ரீ திருவிக்கிரமசுவாமி கோயில் பிரம்மோற்சவம் (8-3-65 — 22-3-65)
திருப்பரிதி நியமம் :	பரிதியப்பர் கோயிற் பெருவிழா.
கடிகாசலம் :	ஸ்ரீ யோகலக்ஷ்மீ நரசிம்ம சுவாமி, தவனோற்சவம்.
தேரழுந்தூர் :	ஆமருவிப் பெருமாள் தேவஸ்தானம், கம்பர் விழா.
மதுராந்தகம் :	கோதண்டராமசுவாமி கோயில், ஸ்ரீராம நவமிப் பெருவிழா (1-4-65—11-4-65).
ஆற்பாக்கம் :	திருவாலீசுவர சுவாமி, பிரம்மோற்சவம்.
	ஆதிகேசவப் பெருமாள், அமிர்தவல்லித் தாயார் திருக்கல்யாண விழா.
இராதாபுரம் :	வரகுணபாண்டியேசுவரர் கோயில் மண்டலாபிஷேக நிறைவு விழா.
திருநாங்கூர் :	புருஷோத்தம சுவாமி கோயில் பிரம்மோற்சவம்.
புள்ளம்பூதங்குடி :	ஸ்ரீ வல்வில் ராமசாமி கோயில் ,,
தொட்டியம் :	மதுரைக் காளியம்மன் திருத்தேர் விழா.
மூவலூர் :	மார்க்கசகாய சுவாமி, ருத்ரபாத மகோற்சவம்.
திருஇடையாறு :	மருதீசுவரர் கோயில் சிவராத்திரி விழா, சங்காபிஷேக விழா.
காசவளநாடு கோவிலூர் :	ஜம்புகேசுவரர் கோயில், பங்குனிப் பெருவிழா.
உடையாளூர் :	ஸ்ரீ லட்சுமி நாராயணப் பெருமாள் தொகுதிக் கோயில்களின் திருப்பணித் துவக்கவிழா (13-3-65).
சாத்தூர் :	மாரியம்மன் கோயில், பங்குனிப் பொங்கல் விழா.
திருச்செங்காட்டங்குடி :	உத்தராபதி சுவாமி கோயில், மேன்மை தங்கிய சென்னை மாநிலக் கவர்னர் அவர்கள் வருகையும், வழிபாடும் (21-3-65).

The following particulars regarding the ownership of "THIRUKOIL", the monthly newspaper, are published, as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956;

FORM IV.—(See Rule 8)

1. Place of publication	...	Nungambakkam, Madras-34.
2. Periodicity of publication	...	Monthly.
3. Printer's Name	...	Sri A. V. Rao, The Manorama Press, Madras-5.
Nationality	...	Indian.
Address	...	39, M. J. B. Street, Madras-5.
4. Publisher's Name	...	Sri M. S. Sarangapani Mudaliar, B.A., B.L., Commissioner, H. R. & C. E., (Admn.) Department, (Ex. Officio).
Nationality	...	Indian.
Address	...	Nungambakkam, Madras-34.
5. Editor's Name	...	Sri M. S. Sarangapani Mudaliar, B.A., B.L., (Ex. Officio)
Nationality	...	Indian
Address	...	Commissioner, H. R. & C. E., (Admn) Department, Madras-34.
6. Name and addresses of individuals who own the Newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital.	...	Sri M. S. Sarangapani Mudaliar, B.A., B.L., Commissioner, H. R. & C E., (Admn.) Department, Madras-34. (Ex. Officio)

I, M. S. Sarangapani Mudaliar, do hereby declare that the particulars given above, are true to the best of my knowledge and belief.

(Signed) M. S. SARANGAPANI,
Publisher.

Dated: 21—3—1965.

ஆணையர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள்:

1—3—65	திருவதிகை :	*வீரட்டானேசுரர் கோயிலில் சிவராத்திரி விழா; அப்பர் இல்லம் கட்டடக் கால்கோள் விழா; புதிய கேணித் திறப்புவிழா.*
3—3—65	திருவாரூர் :	*திருநாவுக்கரசர் திருக்கோயிலில் சதயத் திருநாள் சிறப்பு விழா.*
	திருநாவலூர் :	*ஸ்ரீ பக்தஜனேசுவரர் கோயிலில் சுந்தரர் தேவாரத் திருப்பதிகக் கல்வெட்டுத் திறப்பு விழா.*
11—3—65	பழநி :	*ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் நூல் நிலையக் கட்டடம், யாத்திரிகர் விடுதித் திறப்பு விழா.*
19—3—65	இராமேசுவரம் :	*திருப்பனந்தாள் காசிமடம் ஆதரவில், பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் வடமொழி போதனைத் தொடக்க விழா.*
21—3—65	திருநாராயணபுரம் :	*ஸ்ரீ வேதநாராயணப் பெருமாள் கோயிலில், ஸ்ரீ ஆண்டாள் கல்யாண மண்டபம், யாத்திரிகர் விடுதித் திறப்பு விழா.*

ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

அனந்தபுரத்தைக் குறுகிவாசமேகமமும் சோலைகளையும் அணிஅணியாகப் பரந்து கிடக்கும் வயல்களையும் குன்று நேர்மாடங் களையும் அவற்றின் மாடுகளிலே குருந்து சேர் செருந்தி புன்னை இவற்றின் மலர் மணம் வீசும் பொழில்களையும் கண்டு களித்துக்கொண்டே சென்றார். பத்மநாப தீர்த்தத்திலே தீர்த்தஸ்வீகாரம் செய்து கொண்டு கோயில் முன்படியேறிக் கடைத் தலைசெய்த்து இடைக்கட்டு மண்டபங்கள் வழியே சென்று உள்புக்கார். அங்கே படமுடையரவில் பள்ளி விரும்பி, வாட் டாற்றெம்பெருமானது மறுவடிவு போன்று பைவாயரவணைப் பள்ளியனுய் தனது திருமுகம் நாபி திருவடிகள் இவற் றுக்கு நேராக மூன்று வாயில்களையுடைய கர்ப்பக்ருகத்திலே சாய்ந்தருளியிருக்கும் பத்மநாபனைக் கிட்டினர். கிட்டியவர் திரு வடிவாரவாயிலருகே நின்று பாமருமூவுலகு மளந்த அப்பரமனது பற்பபாதங்களைக் கண்குளிர நோக்கி ஸேவித்து நடுவாசலி லே வழியாக அவன் பிரமனுக்குத் தன் நாபீகமலத்தை யருளிநிற்கும் அழகை அநுபவித்து, தெற்கோரத்தே அப்பெரு மானின் திருமுக மண்டலத்தையும் அம் முகத்துக்கு மேல் உயரே விதானம் போற் கவிந்த ஐவாயரவான அனந்தாழ்வானை யும் ஸேவித்துக் கீழே எம்பெருமான் தன் வலது திருக்கரத்தை நீட்டிக் கைகவித்து அக்கவித்த கையின்கீழே அபயம் பெற்று எழுந்தருளியுள்ள சிவபெருமானையும் ஸேவித்து அவ்வபயப்ரதானத்திலே உள முருகி நின்றார். இங்கு அபயம் அளித்து நின்ற நிலை அங்கே குறுங்குடியில் பக்கம் நிற்க வருளி நின்ற நிலையை நினைப்பூட்டி யது. இவ்வருளே மேலும் பெருகித் தன் வடிவிலே "வலத்தனன் திரிபுரமெரித்த வன்" என்றும் "ஒருவிடமும் எந்தை பெருமாற்கு அரனேயோ" என்றும் ஆழ்வார் போற்றும்படி முதிர்ந்ததோ என்று அப்பத்மநாபன் திருக்கருணையை வியந்து வியந்து போற்றினர். "தெருடி யாகில் நெஞ்சேவணங்கு திண்ணம் அறி. அறிந்து மநுடியேலும் விடேல் கண்டாய் நம்பி பத்மநாபனையே" என்ற ஆழ்வார் பாசுரம் குறுங்குடி நம்பிக்கும் அனந்தை பத்மநாபனுக்கும் ஒரு தொடர்புண்டென் பதையும், இரண்டும் பெருமானின் அருள் பாலிப்பின் இரு அவசரங்களே என்பதை யும் குறித்தே இரு அவசரங்களின் திரு நாமங்களையும் இணைத்துக் கூறியதோ என்றும் அனந்தையில் அரும்பிய கருணை குறுங்குடியில் பூர்ணமாயிற்றோ என்றும் பல்வேறு யோசனைகளை எழுப்பியது. விடமுடியாத அந்த ஸேவையை மிகுந்த பிரயாசையுடன் பிரிந்து வந்தார் எம்பெரு மானர்.

அங்கேயுள்ள பிற மதவித்வான்கள் அவ ரோடு வாதிட்டனர். அனைவரையும் எதி ராஜர் தம் வாதத்தால் வென்றார். அங்கே ஆராதனமுறை வேறாயிருப்பதை மாற்ற வேண்டாவோ என்ற சங்கையோடு அவர் துயில் கொள்ள அவர் கனவிலே எம் பெருமான் தோன்றி "உடையவரே! உம் முடைய திக்விஜயத்துக்கு உவந்தோம். இங்கே (இக்கேரளப்ரதேசத்திலே) நம்மடி யார்கள் இப்போதுள்ள முறையிலேயே வெகுகாலமாக நம்மை ஆராதித்து வருகின் றார்கள், நமக்கு அம்முறையும் உகப்பே. ஆதலால் அவர்கள் உள்ளங்கள் கலங்கும் படி ஆராதன மாற்ற முயற்சி வேண்டாம். உமது விஜய யாத்திரை விஜயமாகவே முடியும்" என்று அருளி மறைய, உடைய வரும் "அவரவர் தாம்தாம்" என்ற முதலாழ்வார் பாசுரத்தை அநுஸந்தித்துக் கொண்டு, ஆராதனம் அவன் திருவுள்ள உகப்புக்குத்தானே? இவ்வாராதனக்ரமம்

இங்கே அவனுக்குகப்பென்றால் நமக்கும் உகப்புத் தானே என்று கொண்டு ஆராதனக்கிரம மாற்ற எண்ணத்தைத் தவிர்த்தார்.

இவ்விடத்தே உடையவரின் ஆராதன மாற்ற எண்ணத்திற்கு இசைவு கிடைத்திலதென்றும், அன்றியே உறங்கிக் கொண்டிருந்த உடையவரை எம்பெருமான் மீண்டும் நம்பி ஸன்னதியிலே நம்பியாற்றின் கரையிலே கொண்டுவிட்டான் என்றும், உடையவர் தம் வழக்கம்போல் எழுந்து இடம் குறுங்குடியாயிருக்கக் கண்டு வியந்து இதுவும் பெருமாள் க்ருபையென்று கொண்டு நதியிலே நீராடச் செல்ல அவர் சீடனாகிய வடுக நம்பியும் கூடச் சென்றார் என்றும், உடையவர் நீராடி முடிய வடுக நம்பி அவர் திருப்பரிவட்டம் திருமண்காப்புப் பெட்டியையும் ஸமர்ப்பிக்க உடையவர் ஆடையுடுத்துத் திருமண் காப்பணிய, வடுகரும் தமக்கும் அணிவிக்குமாறு வேண்ட உடையவரும் அவ்விதம் செய்து பின்னர் நம்பியை ஸேவிக்கப் புறப்பட, வடுகரும் அவர் திருப்பொற்கூடையைத் தம் தோளிலேயே மாட்டிக் கொண்டு அவர் முன்பும் தாம் பின்புமாகச் சென்றார் என்றும், நம்பி கோயில் சென்றதும் பின் வடுகர் வருகின்றாரா என்று உடையவர் பின்னே திரும்ப பின்னால் வந்தவர் கூடையைக் கீழே வைத்து நம்பிராயராக நின்ற திருக்கோலத்திலே காட்சியளித்தார் என்றும், தாம் திருப்பரியட்டப்பாறையில் வடுக நம்பியாக வந்த சீடனுக்கு அணிவித்த திருமண்காப்பு நம்பிதிருநுதலிலும் திருமேனியிலும் விளங்கக் கண்ட உடையவர் நம்பியே வடுக நம்பிபோன்று வந்து தமக்குச் சீட கைங்கர்யம் செய்தார் என்று தெரிந்து, உடையவர் மனம் பதறி நம்பி திருவடிகளிலே விழுந்து "ஸ்வாமி! தேவரீர் இப்படியும் செய்யலாமோ அடியேன் கொடிய குற்றம் செய்தவனானேனே! என்று பலவாறு அபராத க்ஷாமணம் செய்துகொள்ள, நம்பியும் நமக்கு த்வயம் உபதேசித்த ஆசார்யருக்கு சிஷ்ய கைங்கர்யம் செய்யவேண்டும் என்று நாம் திருவுள்ளம் பற்றினோம் காணும் என்றருள, உடையவரும் நம்பியின் க்ருபைக்கு வியந்து "எங்ஙனயோ" பதிகத்தை அநுஸந்தித்து மகிழ்ந்து நம்பியால் மாலை சடகோபன் முதலிய சம்மானிக்கப் பெற்று உள்ளம் நிறைவு பெற்றார் என்றும் ஒரு விருத்தாந்தம் சில ப்ரதிகளிலே காண்கிறது. ஆனால் உடையவரின் திக்விஜயத்தைப்பற்றி பரக்கக்கூறும் "ராமாநுஜார்ய திவ்ய சரிதை" யில் இவ்வரலாறு காணப்பெறவில்லை. இவ்வரலாறு நிகழ்ச்சி உண்மையாயின் நம்பியே தம் திருவுள்ளத்தே தோன்றிய "ராமாநுஜ சிஷ்ய கைங்கர்ய" எண்ணத்தைத் தாமே உடையவரைத் திருவனந்தையினின்றும் கொணர்ந்து நிறைவேற்றிக் கொண்டார் என்றும், அது நிறைவேறியபின் மீண்டும் உடையவரை அவர் தங்கியிருந்த அனந்தையிலே சேர்ப்பித்தார் என்றும் கொள்ளக்கடவது.

அனந்தையில் சின்னாள் தங்கிய உடையவர் தம் மனமும் கண்களும் குளிர பத்மநாபனை ஸேவித்து அவரிடம் விடைபெற்றுக்கொண்டு பிற மலை நாட்டுத் திருப்பதி எம்பெருமான்களை ஸேவிக்கப் பிரயாணமானார்.

"நம்பி பத்மநாபன்" என்று நம்மாழ்வார் குறுங்குடி எம்மானையும் அனந்தைப் பெம்மானையும் இணைத்துப் பெயரிட்டதன் அழகை ரசித்த உடையவர் உள்ளம் அனந்தையினின்றும் தம்மைக் குறுங்குடிக்கு மீளவெடுத்த காரணத்தை உன்னியது. பளிச்சென்று பட்டது அவருக்கு. "நம்பி தம்மை ஆசார்யனாகவரித்து த்வயத்தைக் கேட்டருளினார். பின்னர் தாம் அவர் பக்கம் நின்றார்க்கு அருள் பாலித்து தம் மருகே இடமளித்ததை வியந்துகொண்டே திருவாழ் மார்பனை ஸேவித்தார். அவன் தானே பராத்பரன் என்ற உண்மையை விளக்கிக் கேசவன் (பிரமனுக்கும் ஈசனுக்கும் தலைவன்) என்ற பெயருடன் பள்ளி கொண்ட திருவாட்டாற்றெம்பெருமானை ஸேவித்தார். கேசவன் என்ற பெயரின் உண்மைப் பொருளைப் ப்ரத்யக்ஷமாகக் காட்டியருளும் அனந்தையில் வலக்கை அபய முத்திரையின் கீழுள்ள சிவனையும், உந்தியில் முளைத்துத் தோன்றும் அயனையும் கண்டு மகிழ்ந்தார். இங்கு அபயம்

அளிக்கப்பெற்ற சிவனுக்கு மேலும் அருள் செய்து தன் பக்கலிலேயே இடம் கொடுத்துத் தம்மோடும் ஒக்க வழிபட அருளின வள்ளன்மையை வியந்தார். இத்தகையவன் தம்மை ஆசார்யனுகக் கொண்டு த்வயார்த்தம் கேட்ட எளிமையிலே மூழ்கினுர். தம்மை மறந்தார் ... நம்பி அவர் முன்னே தோன்றினுர். "ராமாநுசரே! நம் செயலின் காரணம் வினவி நின்றீர். உம்மை ஆசார்யனுக வரித்து அர்த்தம் கேட்டு வைஷ்ணவ நம்பி என்று நாமமும் சூட்டப் பெற்ருேம். நீர் போய்விட்டீர். அனந்தையில் மீண்டும் நம்மைத் திருவுள்ளத்தே நினைந்தீர், நாமும் உம்மை நினைந்தோம். அப்போது நம் உள்ளத்தே ஒருகுறை தோன்றியது.. வரித்த ஆசார்யனிடம் அர்த்தம் மட்டும் கேட்டோமேயன்றி சிஷ்யாநுவர்த்தனம் பண்ணினேமில்லையே என்பதே அக்குறை, அதை நிறைவேற்றிக்கொள்ள எண்ணியே உம்மை இக்குறுங்குடிக்குக் கொணர்ந்தோம். வடுக நம்பியானேம். உமது குடலையை உவந்து சுமந்து நம் குறை நீங்கப் பெற்ருேம். இங்கு நம் கைக்கிழவரே அங்கு நம் பக்கம் நின்ருர்" என்றருளி மறைந்தார். உடையவர் பதறி எழுந்தார். நிகழ்ந்தவற்றை உன்னினுர். என்புக உருகினுர். ஆழ்வாரின் "இருடீகேசனெம்பிரான்" என்ற பாசுரத்தை மெல்ல அநுஸந்தித்துக்கொண்டார். முடிவில் வரும் இணைப் பெயரான "நம்பி பத்மநாபன்" என்றதைப் பன்முறை வாய் குளிர மனம் குளிரச் சொல்லி, அவ்விரு திவ்யதேச எம்பெருமான்களுக்கும் உள்ள தொடர்புணர்ந்து பரவசமானுர்.

பின்னர் உடையவர் வைகுந்தமே என்று சிறப்பித்து மாறனல் அருளப்பெற்ற அத்திருவனந்தபுரத்து எழுந்தருளிப் பள்ளி கொண்டவரும், குமரனுர் தாதை துன்பம் துடைத்த கோவிந்தனுராய் இன்றும் துடைத்துக்கொண்டே காட்சியளிக்கும் பரமனது,

பூங்கழல் இறைஞ்சி வாழ்த்திப்
பூவலம் செய்யப் புக்கான்
ஆங்குநின் றன்பின் மிக்கான்
அன்பர்க ளோடும் ஏகிப்
பாங்குடன் அந்நாட் டுள்ள
திருப்பதி தோறும் புக்குத்
தாங்கி ஏழுலகும் காக்கும்
தலைவனை வணங்கி வாழ்த்தி,"
என்னரும் சமயத் தாரில்
இலங்குமேல் திசையில் ஓங்கி
நண்ணிடும் புலவர் தம்மை
நான்மறை முடிவால் வென்று
மண்ணவர் வணங்கி வாழ்த்த
வானவர் துதிசெய் தேத்த
உண்ணிறை யறிவின் மிக்கான்
உத்தர திசையை யுற்ருன்."

திருவனந்தபுரம் விட்டுப் புறப்பட்ட உடையவர் அங்கு நின்றும் திருப்புலியூர் என்ற தலத்திற்கெழுந்தருளி அங்கே கருமாணிக்க மலைமேல் தாமரைத் தடங்கள் விளங்குவதுபோன்று தன் நாயகத்தன்மையின் அழகெல்லாம் காட்டி நிற்கும் மாயப்பிரானை முன் தன் அனன்யார்ஹத்வம் (பிறர்க்கு உரியளல்லளாம் தன்மை) முற்றவும் தோன்ற அவனழகிலே ஈடுபட்டு சேவித்து அவன் பிரஸாதம் பெற்றுர். அங்கு நின்றும் எழில் மலர் மாதரும் தானுமாய் வீற்றிருந்து தாம் "ஆமுதல்வனிவன்" என்று ஸ்வீகரித்த புத்ரனது திருவாய்மொழியை முன் நாயகியன்றியே தன்னந்தனியனுய்த் தன் இரட்டை மதலையர் வாயிலாகத் தன்சரிதை கேட்க நேரிட்ட குறைதீரக் கேட்ட க்ஷேத்ரமான திருவாறன் விளைக்கு எழுந்தருளினுர். அத்தலத்தின் அணி பொழில் முதலிய இயற்கை வளங்களை யெல்லாம் கண்டு மகிழ்ந்து எம்பெருமான் அழகை நீண்டநேரம் அனுபவித்துச் சிந்தை மற்ருென்றின் திறத்ததல்லராய் அத்தீர்த்தனுக்கே அற்றுத் தீர்ந்தவராய் நின்ருர். அங்கே அப்பெருமானின் அருள்பெற்று வண்சிவனும் அயனும் ஒப்பாகிய அந்தணர்கள் ஒரு மூவாயிரவர் மறையோதி நித்தமும் பரவும் திருச்செங்குன்றூரில் சிற்றுங்கரைமீபால் எழுந்தருளியிருக்கும் சீர்கொள் சிற்றுயனைக்

கிட்டி ஸேவித்து அவ்விமையவரப்பனது விசேஷ கடாக்ஷமும் பெற்ருர். சிற்ருயனை சேவித்தவாறே அவனது முன்னைய அவதாரமான சக்ரவர்த்தித் திருமகனைப் பற்றிய சிந்தனை உடையவர் உள்ளத்தே எழுந்தது. எழிலும் செங்குன்றூரினின்றும் பம்பா நதியின் வடபாலில் உள்ள திருவண்வண்டூர்க்கு எழுந்தருளினார். அங்கே மாறில்போரரக்கர் மதிள் நீறெழச் செற்றுஉகந்த ஏறு சேவகன் பாம்பணையப்பனாய் எழுந்தருளியிருக்கும் பெருமான்பால் "ஏறு சேவகனுர்க்கு என்னையும் உளள் என்மின்கள்" என்றும் "புணர்த்தகையினராய் அடியேனுக்கும் போற்றுமினே" என்றும் தானே சேரலின்றித் தூதுமூலம் பணிந்த ஆழ்வார் தசை போலன்றித் தானே நேரில் நின்று சாஷ்டாங்கமாக வணங்கி அவ் வன்கள்வனைப் போற்றிப் பரவினார்.

அங்கும் நின்றும் புறப்பட்ட உடையவர் "தந்தை தாய் மக்களே சுற்றமென்றுற்றவர் பற்றி நின்ற, பந்தமார் வாழ்க்கையை நொந்து நீ பழி எனக்கருதினாயேல்... ஆயனாய மைந்தனார் வல்ல வாழ் சொல் லுமா வல்லையாய் மருவு நெஞ்சே!" என்று திருமங்கையாழ்வார் அருளிய பாசுரத்தின் பொருளை மெய்ப்பிப்பார் போன்று ஸம்ஸார வாழ்க்கை பழிக்கிடமாம் என்று துறந்தவராதலாலே அத்திருவல்ல வாழுக்கு நேரே சென்று, அங்குத் தன் வடிவழகெல்லாம் காட்டிக் கோலப் பிரானாய் எழுந்தருளியிருக்கும் "திருவல்ல வாழ் உறையும் கோனாரையும் ஸேவித்து அழகு ததும்பும் அம்மான் குறள் கோலப்பிரான் தன் மலர்த்தாமரைப் பாதங்களைக் கண்ணிலும் மனத்திலும் நிலைக்கப் பிரதிஷ்டை செய்து கொண்டு, அங்குள்ள பொழில்களிலே மலர்கள் பொழியும் தேனையுண்டு மழலை வரிவண்டுகள் அப்பெருமானுடைய இசையைப்பாடும் அழகையெல்லாம் அனுபவித்தவராய், அப்பெருமானது தொல்லருளால் அவனது ஸேவை கிட்டப் பெற்றதை உன்னி மகிழ்ந்தார். நிருபாதிக பந்துத்வம் உணர்ந்து ஸேவித்தமையால் அவனுக்கும் தமக்கும் உள்ள அழியா உறவை, குடல் துடக்கை உணர்த்தும் நாராயண பதத்திலே அவர் உள்ளம் நிலைத்தது. அந்நாமம் உள்ளத்தே ஓடலால் அந்நாமத்தோடே அவன் ஸேவை ஸாதிக்கும் திருக்கடித் தானம் என்ற ஸ்தலம் அருகே உள்ளமை அறிந்தார். அங்கே எழுந்தருளினார்.

அங்கே உறவறிந்து பற்றிய இவருள்ளம் அறிந்து அவ்வுறவைத் தானும் உணர்ந்து அதனால் வந்த நேசத்தாலே அவர் உள்ளம் நிறைந்த பெருமான் அவர் புறக்கண்ணுக்கு இலக்காக அவ்வுறவு பற்றிய நாமத்தனாய் நாராயணன் என்ற திருப்பெயரோடு காட்சியளிக்கும் எம்பெருமானைத் தாயையணுகும் சேய்போலக் குதிக்கும் உள்ளத்தோடு சென்று வணங்கினார் உடையவர். வியக்கத் தக்கமாயனாய் அற்புத நாராயணனாய் தம்முள்ளும் வெளியிலும் ஒக்கநின்று உள்நின்றவனும் வெளிநின்றவனும் நானே. நான் இருவரல்ல ஒருவனே. த்வைதனன்று அத்வைதனே எனக்காட்டி "ஏகமேவ அத்விதீயம் ப்ருஹ்ம" என்ற சுருதிவாக்கியத்தின் உண்மைப் பொருளை உண்மைஞானமுடையார்க்கு அவன் காட்டி நின்ற அற்புதத்திலே திளைத்தார் உடையவர்.

அப்பெருமானைப் பரவிய ஆழ்வார், அவனுடைய நிலைகள் ஐந்திலே "கோயில் கொண்டான் திருக்கடித்தானத்தே" என அர்ச்சையையும் "கோயில் கொண்டான் அதனோடும் என் நெஞ்சம்" என அந்தர்யாமித்வத்தையும் 'கோயில் கொள் தெய்வமெல்லாம் தொழ வைகுந்தம் கோயில் கொண்ட" என்று பரத்வத்தையும் "குடக்கூத்த அம்மானே" என்று விபவத்தையும் ஆக நிலைகள் நான்கை விளக்கிய பாசுரத்தை அநுஸந்தித்தார். அவன் நிலைகளிலெல்லாம் அவன் ஸௌலப்யம் முற்றும் விளங்கப்பெற்ற கிருஷ்ணாவதாரம் உடையவர் உள்ளத்தை ஈர்த்தது.

"பாரோர்கள் எல்லாம்மகிழப் பறை கறங்கச்
சீரார் குடமிரண்டேந்திச் செழுந் தெருவே
ஆர் ஆர் எனச்சொல்லி"

அவன் ஆடிய குடக்கூத்திலே திருமங்கை மன்னன் ஈடுபட்டதை எண்ணினார். அக்குடக்கூத்தன் என்ற திருப்பெயரோடு

அவனுறையும் திருமூழிக்களம் என்ற திருப்பதிக்குப் பிரயாணமானுர்.

அப்பெருமானது "செங்கமலத்தலர் போலும் கண் கை கால் செங்கனிவாய், அக்கமலத்திலை போலும்'' ஒளிரும் திருமேனியழகைப் பருகினுர். ஆயர்மகிழக் கூத்தாடும் அளவிற்குத் தன்னைத் தாழவிட்டவன் தன்னை யருளாது அகல்வது, அவன் எளிமைக்குத் தக்கதன்று என்று ஆழ்வார் விண்ணப்பித்ததைத் தாமும் விண்ணப்பித்துத் தம்முடையமேனி மெலிவெய்தாவண்ணம், மேகலை ஈடழியா வண்ணம் தம்மகமே யொழியாமே அவன் என்றும் தம்முள்ளத்தே நின்று ஸேவை ஸாதிக்க வேணுமென்று வேண்டிக் கொண்டார்.

இவ்வண்ணம் உள்ளம் உருகி நின்றவர் தாம் அவனைப்பற்றப் பரிவதுபோலே இவரைப் போல்வாரைப் பற்றப் பரியுமவனுய், கானில் வாரிக்கொண்டு முற்றப் பருகுவனுய் உண்மையான சேதனனைத் தேடித் தவிக்குமவனுய் அவன் நிற்கும் தேசமான திருக்காட்கரை என்ற திருப்பதியைத் திருவுள்ளம் பற்றினுர். எனவே அத்திருப்பதியேற எழுந்தருளி அக்காட்கரையப்பனை நினைதொறும் சொல்லும் தொறும் நெஞ்சிடிபவராய் அவனது வினைகொள்சிர் பாடினும் (படியினும்) உயிர் வேவாராய் அவன் ஸன்னதியருகே சென்றவர், இவர் செல்லுமுன்னே இவர் உள்ளத்தை அவன் பற்றியீர்ப்பதை உணர்ந்து அவன் செயலை வியந்து கண்ணு! என்று கூவியவராய்த் தன்னை அவனுக்கு அறவிலையாக்கி நின்ருர். பின்னர் அவன் வலைப்பட்டு நின்ற உள்ளத்தை அவன் அனுமதியோடு பெற்று அங்கு நின்றும் போந்து அவனுக்கும் சேதனனுக்கும் உள்ள ஒன்பதுவகை உறவையும் உணர்த்தி நின்ற திருவித்துவக்கோடு நோக்கி எழுந்தருளினுர்.

அங்கே அவர் வசிஷ்ட சண்டாளரோடு வேற்றுமையின்றித் தன்திருவடியால் தடவி நின்ற திருவிக்கிரமன்வடிவிலே நின்ற எம்பெருமானை வணங்கி வாழ்த்தினுர். த்வயாநுஸந்தானத்திலிருந்து முதலில் ஸேவித்த திருவாழ்மார்பனை திருஸ்ரீமந் நாராயணன் தொடக்கமாகத் தொடங்கிய தமது மலைநாட்டுத் திருப்பதி யாத்திரையை அத்திருநாராயணன் ஸன்னிதியிலேயே முடித்துக்கொள்ளும்படி எம்பெருமான் திருவருள் பாலிப்பதே போன்று மலைநாட்டுப் பதிகளுள்ளே வட எல்லையான திருநாவாய் என்னும் தலத்திலே அவன் நாராயணன் என்னும் திருநாமத்தோடு எழுந்தருளியுள்ள சூழ்நிலையை உன்னி உள்ளம் பூரித்தவராய், உடையவர் திருநாவாய் செல்ல மிகவும் பாரித்தவராய் திருநாவாய் குறுகும் வகை உண்டு கொலோ? என்று அத்தலத்தை விரைவிலடையும் வழிகேட்டு எழுந்தருளினுர். அந்நாரணன் ஸன்னிதி முன்பே விழுந்து வணங்கி அவன் தனக்கருளிய நலனையெல்லாம் உன்னித் தன் கைமுதலின்மையையும் தெரிவித்து 'அடியேனை(யும்) பொருளாக்கி நின் பொன்னடிக்கீழ்ப் புகவைத்தாய்'' என்று அவன் நிர்ஹேதுக கிருபையிலே மனம்தாழ்ந்து நின்று அவன் பரத்வ வடிவை '' நிறுத்தும் மனத்தொன்றிய சிந்தையராய்'' அவ்வடிவை உள்ளத்தே தேக்கிக்கொண்டு அங்கவர்பால் பிரியா விடைபெற்றுத் தம்முடைய வடநாட்டு யாத்திரையைத் துடங்கினுர். (தொடரும்)

(செய்திச் சுருக்கம்)

திருப்பதிகக் கல்வெட்டுத் திறப்பு விழா: திருநாவலூரில் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவாரத் திருப்பதிகக் கல்வெட்டு, நமது அறநிலைய ஆணையர் **திரு. M. S. சாரங்கபாணி முதலியார்** B.A., B.L. அவர்களால் திறந்து வைக்கப் பெற்றது. திருப்பணிக் குழுத் தலைவர் சிவஸ்ரீ நா. சரவண மாணிக்கவாசக சுவாமிகள், சென்னைத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் முதலிய பெருமக்கள் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (3-3-65).

திருஞான சம்பந்தர் பிள்ளைத் தமிழ்

ஸ்ரீலஸ்ரீ மாணிக்க வாசக ஞான தேசிக சுவாமிகள்
(சிவராஜ யோக மடம், மேலையூர், திருவெண்காடு.)

(முத்தப்பருவம்)

கார் காண நீலக்க லாபம்வி ரித்தாடு
களிமயில் தோகையூரும்
கந்தவேள் என்னவந் தமரர்வெந் துயர்தீரக்
கடலாடு செந்தில் மேவிப்
போர்காண நின்றஅச் சூர்மாய வேல்தொட்ட
புனிதனும் குமரவேள் போல்
புல்லமணர் அல்லலறச் செல்வநெடு மாடமார்
பொன்மதுரை மாநக ரெழீஇத்
தார்மார்பின் நெடுமாறன் நின்றசீர் பெற்றிடத்
தண்ணருள் புரிந்து மெல்லத்
தமிழகம் நுழைந்துவளர் அமண்மாசு நீங்கிடத்
தவளநீற் றருளி விளக்கிப்
பார்காண என்பினிற் பூம்பாவை கண்டவன்
பவளவாய் முத்தம் அருளே
பாண்டியற் குபதேச பாசுரம் மொழிந்தநின்
பவளவாய் முத்தம் அருளே

(1)

பிரமபுரம் வேணுபுரம் பூம்புகலி வெங்குரு
பேணிவளர் தோணிபுரமே
பெருகுமிரு நிதிவாய்ந்த பூந்தராய் சிரபுரம்
பிரசமென் மலர் சூழ்அளி
வரிமுரல ஓங்குசீர்ப் புறவமொடு சண்பைநகர்
வண்புனற் பொன்னி சூழும்
வளமருவு பூம்பொழிற் காழியே கொச்சைவயம்
வான்றடவு கோபுரம் சூழ்
கருமமுத லும்வினை வுமாகிய மலங்கழுவு
கழுமலம் எனப் பெயர்தழீஇக்
கவினிய வளப்பதி விளங்கவரும் நான்மறைக்
கவுணியென வந்துதித்துப்
பரமனருள் ஆகமத் திருநெறி **விரி**த்தநின்
பவளவாய் முத்தம் அருளே
பாண்டியற் குபதேச பாசுரம் மொழிந்தநின்
பவளவாய் முத்தம் அருளே.

(2)

விச்செதுவு மின்றியே விளைவுசெய் திறனின்
விளக்கணைய மாயைகாட்டி
விரியுமனம் ஆதியைத் தந்ததலினுள் எழூஉம்
விகாரமே வினைமூலமாப்
பொச்சமுறும் ஆணவ மலத்தூ டழுந்துமுயிர்
போக்கு வரவிற் பொருந்தப்
போகமொடு புவனமும் தனுகரணமும் தந்த
புண்ணிய முதல்வனே நின்
இச்சைவழி நில்லாத தென்ஏழை மதியாற் கெட்ட
ஏதத்தை என் சொல்லுகேன ?
ஏழிசை வளந்தழுவு யாழ்மூரி யால்இறைவன்
இன்னருட் பெருமை தேற்றிப்
பச்சைவண் பதிகமொடு முத்தமிழ் முழங்குநின்
பவளவாய் முத்தம் அருளே
பாண்டியற் குபதேச பாசுரம் மொழிந்தநின்
பவளவாய் முத்தம் அருளே.

(3)

துனிமலைப் பிறவியெனுர் வெந்துயர்க் கோடையொடு
தொல்லைவல் வினைஅல்லலும்
தொடுகடற் பேரலையின் வாதனைக் குமிழியொடு
சூழ்மனப் பேயும் ஆளக்
கனிமலையும் அவ்வாய்க் கருங்குழல் மடந்தைமார்
கடைவழிக் கேகிடக்கும்
காமவான் சுறவெறிய நாமநீர் உலகி லொரு
கதியின்றி விதிவசத்தால்
தனிமலையின் மோதியெழு மதகளிறின் நைந்தநாள்
தண்ணருள் புரிந்து காத்தாய்
தமிழ்நாடு செய்தவப் பயன் அங்கு ரித்தெனத்
தண்புகலியில் முளைத்துப்
பனிமலைக் கொடியுதவு ஞான அமு தார்ந்தநின்
பவளவாய் முத்தம் அருளே
பாண்டியற் குபதேச பாசுரம் மொழிந்தநின்
பவளவாய் முத்தம் அருளே.

(4)

சந்தமலி வண்கமுகின் நெற்றியுதிர் தரளமும்
தண்சாலி தந்தமுத்தும்,
தையலர் மணிக்கழுத் தமையுமொண் தரளமும்,
தழைநெடுங் கழையின் முத்தும்,
கொந்தணவு பூம்பொழிற் காழியென என்னுளம்
குடிகொண்ட ஞான மூர்த்தி

கோவைவாய் மணிகொழித் தோடுகா விரியேறு
குரைகடல் திரை கொணர்ந்த
நந்தலறி யீனும்வெண் முத்தமிவை யாவையும்
நாடும் விலையீந்து பெறலாம்;
நம்பனருள் ஞானசம் பந்தனென வந்தநின்
நன்முத்தம் அனைய தன்றால்!
பைந்தமிழ்ச் சைவ நெறி தந்ததோர் சரபம்நீ
பவளவாய் முத்தம் அருளே
பாண்டியற் குபதேச பாசுரம் மொழிந்தநின்
பவளவாய் முத்தம் அருளே.

(5)

அலைவுறு மனமொரு நிலையினில் நின்றிட
அருளு பெருந்திருவே
ஆணவ வல்லர வின்விட வாதை
அகற்றிடும் இன்னமுதே
கலைநல மாய்க்கலை முடிவு மெனத்திகழ்
ஞானம லர்க்கழலால்
கடையவ னேன்றன் புன்முடி தாக்கக்
கருதுவ தெந்நாளோ?
தலைநெறி யாகிய சைவத் திருநெறி
தழையப் பிழை நெறியாம்
சமணொடு புத்தமும் ஒழியப் புகலியில்
தாழ்குழல் உமைதந்த
முலையமு தங்கமழ் நின்கனி வாயால்
முத்தம் தந்தருளே!
மோனசு கந்தரும் ஞானத் திருவே
முத்தம் தந்தருளே!

பாவோ பாமலி தமிழோ குரலாற்
பரவிடும் ஏழிசையோ,
பரஞா னத்தனி உணர்வோ உண்டது
பாலமு தோ,பகராய்!
நாவார் தமிழ்வலி காட்டிய தெனவே
நாவா யோட்டியவா!
நல்லொளி வெண்டர ளம்பயில் சிவிகை
நம்பன் அளித்தருளத்
தேவாதி யர்முனி வோர்களும் உணராத்
திருவருள் ஈதெனவே
சிந்தையு றீஇயரன் ஐம்பதம் ஓதிய
செல்வக் கவுணியனே!

மூவாண் டிற்சிவ ஞானம் பெற்றவ
முத்தம் தந்தருளே !
மோனசு கந்தரு ஞானத் திருவே
முத்தம் தந்தருளே ! (7)

தத்தொளி முத்துநி மூற்றிய பந்தர்
தண்ணொளி வெண்குடையும்
தாரையொ டுந்தமை சின்னம் காளம்
தாளம் அழுத்தியவே
முத்துநி ரைத்தன சிவிகையும் ஆதலின்
முத்தப் பெருமாள் நீ !
முக்கண் அருட்கடல் பொங்க முளைத்தெழு
முழுமதி யேயனையாய் !
மத்தம திச்சடை வைத்தவன் ஒத்தூர்
வண்பதி கத்தினிடை
வாய்த்த இறைச்சியின் ஆண்பனை யின்குலே
வாங்க மொழிந்தருளி
முத்திய ளித்தவொர் தூமலர் வாயால்
முத்தம் தந்தருளே
மோனசு கந்தரு ஞானத் திருவே
முத்தம் தந்தருளே. (8)

கருணை பொழியும் முகிலின் எனது வினைகள் ஒழிய வந்தசேய்
கமல மலரின் நறவுண் அளிகள் வரிசெய் புகலி தந்ததே
அருக ராச னடியார் மலையு மரிய வாதில் வென்றதால்
அறிவு நிறையும் செறிவு மரிய அளியன் மனதில் நின்றதால்
உருவு மருவு முபய நிலையுமுடைய முதல்வ னருளினால்
உயிருள் மருவு திமிர மிரிய உலகில் மலர்நற் பருதியே
தருண முதல்வி முலையினமுதன் தருக முத்தம் தருகவே
சமய முதல்வ னெமது கவுணி தருக முத்தம் தருகவே ! (9)

புதிய புதிய இசையி லுதவு பதிகன் முத்தம் தருகவே
பொருவி லமரர் முனிவர் பரவு புனிதன் முத்தம் தருகவே
கதியி லுதவி யெனையு மருளு கழலன் முத்தம் தருகவே
கனலி விடுமொர் சுவடி கண்ட விரகன் முத்தம் தருகவே
மதியு நதியு மணிகொள் மௌலி மைந்தன் முத்தம் தருகவே
வளமை தழுவு புகலி நகரி னெந்தை முத்தம் தருகவே
ததியுள் நறிய நெய்யி லெளியன் தருக முத்தம் தருகவே
சமய முதல்வ னெமது கவுணி தருக முத்தம் தருகவே. (10)



ஸ்ரீ வைத்தியநாதப் பெருமான், திருப் புள்ளிருக்கு வேளூர்.



ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசாமி, திருப் புள்ளிருக்கு வேளூர்.



ஸ்ரீ அரங்கநாதஸ்வாமி கோயில், ஸ்ரீரங்கம்.

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept Madras 34, Printed at Manorama Press, 39, M. J B. St., Madras-5.